


கொலம்பியா வெளியீடு!
நகைச்சுவை அரசு
N.S. கிருஷ்ணன்
புதிய காமிக் ரிகார்டு
GE. 6152
நாராயணஹரி
வாசுதேவஹனம்.
G.H.RAO
ஸரஸ்வதி ஸ்டோர்ஸ். மதராஸ்

சினிமா நட்சத்திரங்களைப் போல, நீங்களும் உங்கள் சருமத்தைக் காப்பாற்றுங்கள்!



வனமாலா



வனமாலா தன் சருமத்தை மிருதுவாகவும் பளிச்சென்றும், தூய்மையாகவும் வைப்பதற்கு லக்ஸ் டாய்லட் சோப்பை தவறாமல் உபயோகிக்கிறார். அவர் அதனுடைய நுரையைத் தன் சருமத்தில் தடவி, பிறகு குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறார். "இதுதான் உலகத்திலேயே சுலபமான, ஹானியற்ற, அழகிய பாதுகாப்பாக எனக்கு இருக்கிறது" என்கிறார் அவர். அநேக இந்திய சினிமா நக்ஷத்திரங்கள் தங்களுடைய சரும அழகை இந்த விதமாக பாதுகாக்கிறார்கள்.

லக்ஸ் டாய்லட் ஸோப்

கல்கி

பொருளடக்கம்

மலர் 4 இதழ் 13 — 1944 அக்டோபர் 29 — தாரண ஐப்பசி 13

தென்னாட்டிற்குப் பெருமை அளிக்கும் சிற்பம், சங்கீதம் முதலிய அருங்கலைகளுக்கெல்லாம் ஆதாரமான கலை பரதநாட்டியம். அப்பேர்ப்பட்ட அருங்கலை இடையிலே சில காலம் வீழ்ச்சி அடைந்திருந்து இப்போது புத்துயிர் பெற்றிருக்கிறது. புத்துயிருடன் பெருமையும் மகிமையும் அடைந்திருக்கிறது. பெரிய பெரிய கௌரவமான குடும்பங்களிலே எல்லாம் குழந்தைகள் பரதநாட்டியமும் அபிநயமும் கற்றுக் கொள்கிறார்கள். அப்படிக் கற்றுக் கொள்ளும் உயர் குடும்பத்துக் குழந்தை பாலிய ஹேமா மாலினி இந்த இதழில் நமது அட்டையை அலங்கரிக்கிறாள்.

ஸ்ரீ வி. கே. விஜயராகவன் ஐ. சி. எஸ். அவர்களின் குமாரியும், காலஞ்சென்ற ஹைகோர்ட் ஜட்ஜ் ஸர் வி. கிருஷ்ணனின் மகள் வயிற்றுப் பேத்தியுமான குழந்தை ஹேமா, வழுவூர் ராமய்யாப் பிள்ளையிடம் அபிநயக் கலை கற்று, அதில் சிறந்த தேர்ச்சியடைந்திருக்கிறாள். சில தினங்களுக்கு முன்னால் குறிப்பிட்ட ரஸிகர் கூட்டத்தின் முன்பு ஹேமா அபிநயம் செய்து சபையோரை அதிசயத்திலும் ஆனந்தத்திலும் ஆழ்த்தினாள். குழந்தை ஹேமா மாலினி, கலைச் செல்வத்தில் மேலும் மேலும் சிறந்தோங்க வேண்டுமென்று மனமார்ந்த ஆசி கூறுகிறோம்.

★



★

இந்திய அரசாங்கப் பரிசுப் பத்திரங்கள் பற்றிய உங்கள்

கேள்விகளுக்கு விடைகள்

அவற்றின் விலை என்ன? இரண்டு வகைகள் உண்டு. ஒன்று 10 ரூபாய்; மற்றொன்று 100 ரூபாய்.

அவற்றை நான் எங்கே வாங்கலாம்? இந்திய அரசாங்க கஜானா அலுவல்களைக் கவனிக்கும் இந்திய ரிஸர்வ் பாங்கியிலும், இந்திய இம்பீரியல் பாங்கியிலும் பிரிட்டிஷ் இந்தியாவிலும் இந்திய சமஸ்தானங்களிலும் உள்ள அரசாங்க கஜானாக்களிலும் வாங்கலாம்.

பரிசுகள் என்ன? ஒரு லட்சம் பத்திரங்களுக்கு ஒரு தொகுதி பரிசுகள் கொடுக்கப்படும். குலுக்குவதில் சேர்த்துக் கொள்ளப்படும் 100 ரூபாய்ப் பத்திரத் தொகுதி ஒவ்வொன்றிலும் முதற் பரிசு ரூ. 50,000; இரண்டு 2-வது பரிசுகள் (ஒவ்வொன்றும்) ரூ. 20,000; இரண்டு 3-வது பரிசுகள் (ஒவ்வொன்றும்) ரூ. 5,000; ஒவ்வொரு குலுக்குதலுக்கும் மொத்தம் ரூபா. 1 லட்சம் பரிசளிக்கப்படும். 10 ரூபாய் பத்திரங்களுக்கு முதற் பரிசு ரூபாய் 2,500; இரண்டு 2-வது பரிசுகள் (ஒவ்வொன்றும்) ரூபாய் 1,250; நான்கு 3-வது பரிசுகள் (ஒவ்வொன்றும்) ரூபாய் 500; பத்து 4-வது பரிசுகள் (ஒவ்வொன்றும்) ரூபாய் 250; ஆக ஒவ்வொரு தொகுதிக்கும் ரூபாய் 10,000 மொத்தம் பரிசு வழங்கப்படும்.

ஒரு பத்திரம் ஒரு முறை பரிசு பெற்று விட்டால், பிறகு குலுக்கப்படும்போது அதுவும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாதல்லவா? அப்படியே அல்ல. ஒருமுறை பரிசு பெற்றிருந்தாலும் இல்லாவிட்டாலும், 1949-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ம் தேதி வரை குலுக்கப்படும் போதெல்லாம் சேர்த்துக் கொள்ளப்படும். ஆகவே உங்களுக்கு அதிர்ஷ்டமிருந்தால் ஒரு தடவைக்கு மேலும் நீங்கள் பரிசுகள் பெறலாம்.

இந்த பரிசுத் தொகைகளுக்கு வரியுண்டா? கிடையாது. வருமானவரி, 'சூபர்' வரி, அதிக லாபவரி, சுதாவரி ஆகிய எதுவும் கிடையாது.

பரிசுகள் எங்கே வழங்கப்படும்? இரண்டாவது கேள்வியைப் பார்க்க. அதில் குறிப்பிட்டிருக்கும் எல்லாக் காரியாலயங்களிலும் அப்பத்திரங்கள் கீழ்க் கஜானாக்களில் வாங்கியிருந்தால் அங்கேயும் வழங்கப்படும்.

பரிசுப் பத்திரங்களின் தொகைகள் திருப்பிக் கொடுக்கப்படுமா? 1949-ம் வருஷம் ஜனவரி மாதம் 15-ம் தேதியிலாவது, அதற்குப் பிறகாவது அதில் குறிப்பிடப்பட்டுள்ள அதே தொகை திருப்பிக் கொடுக்கப்படும். அதாவது, நீங்கள் கொடுத்து வாங்கிய ரொக்கம் பூரண பாதுகாப்பிலிருப்பதுடன், பெரும் பரிசுத் தொகை ஒன்றோ பலவோ பெறுவதற்கும் சந்தர்ப்பமிருக்கிறது.

இந்திய அரசாங்கப் பரிசுப்

பத்திரங்கள்.

இந்திய அரசாங்க நிதி இலாகா வெளியிட்டது.

AAA 965 TM

கல்கி

மலர் 1 | தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிட்டி பாப்பா —பாரதியார் | இதழ் 13

என்ன சேதி?

பாரதி ஞாபகார்த்தம்

மேற்படி விஷயமாகத் தமிழன்பர்கள் நமக்கு வேலை வைத்து விடுவார்கள் போலத்தான் தோன்றுகிறது. எட்டயாபுரத்தில் பாரதி ஞாபகார்த்த வாசகசாலை அவசியந்தான் என்று சில நண்பர்கள் வற்புறுத்திக் கடிதம் எழுதியிருப்பதுடன் சக்தியானுசாரம் பணமும் அனுப்பியிருக்கிறார்கள். இது பற்றிய விவரங்களும் நமது முடிவும் அடுத்த இதழில் வெளியிடப்படும்.


"பர மண்டலத்தில்"


சென்ற இதழில் வெளியான "பர மண்டலத்தில்" என்னும் கட்டுரை காரணமாக, நமது "கல்கி" பத்திரிகையை எவ்வளவு நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ நண்பர்கள் ஆர்வத்துடன் வாசிக்கிறார்கள் என்னும் விஷயம் தெரிய வந்தது. அந்தக் கட்டுரையின் வாசகத்தை ஆட்சேபித்து அவ்வளவு கடிதங்கள் கிறிஸ்துவ நண்பர்களிடமிருந்து வந்திருக்கின்றன. இவ்வளவு பேர் ஒரு முகமாக ஆட்சேபித்து எழுதும் விஷயத்தை "ஆட்சேபகரமானதல்ல" என்று சாதிக்க நாம் விரும்பவில்லை. நமது மனப் பூர்வமான வருத்தத்தை அவர்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறோம். எனினும் "காடோடி" அந்தக் கட்டுரை எழுதியதின் நோக்கம் யாரையும் புண்படுத்துவதல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இது, இந்த இதழில் வெளியாகி யிருக்கும் "வைகுண்டத்தில்" என்னும் கட்டுரையினால் நன்கு விளங்கும். இம்மாதிரி தோரணையில் ஹிந்து தெய்வங்களைப் பற்றி வேடிக்கை செய்து எழுதுவது நமக்குள் சகஜமாயிருக்கிறது. இதிலிருந்து ஹிந்து தெய்வங்களுக்கு நகைச்சுவை உண்டென்றும், மற்ற மதங்களின் தெய்வங்களுக்கு நகைச்சுவை இல்லையென்றும் நாம் முடிவு கட்டவில்லை. ஹிந்துக்களைக் காட்டிலும் மற்ற மதத்தினர்களுக்கு மதப் பற்று அதிகம் என்றுதான் முடிவு கட்டுகிறோம். அவர்களுடைய மதப் பற்றைப் பாராட்டவும் செய்கிறோம்.

கதிகலக்கம்


மகாத்மா காந்தி மறுபடியும் உண்ணாவிரதத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்ற செய்தி தேச மக்களைக் கதிகலங்கச் செய்திருக்கிறது. உலகமெங்கும் பரவியிருக்கும் பலாத்காரம் ஒரு புறம் இருக்க, நாம் விடுதலையடைந்து வெளியில் இருக்கும்போது நமது சகாக்களான ஆஸாத், ஜவாஹர்லால், வல்லபாய் முதலியவர்கள் சிறையிலேயே இருக்கும் நிலைமை மகாத்மாவின் மனதுக்குப் பெரிதும் வேதனை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. சட்ட மறுப்பு யோசனை இப்போது கிடையாது என்று மகாத்மா திட்டமாய்ச் சொன்ன பிறகு மற்றக் காரியக் கமிட்டி அங்கத்தினர்களை எதற்காகச் சிறையில் வைத்திருக்க வேண்டும் என்பது நமக்கு அர்த்தமாகவே இல்லை. அவர்களைச் சிறையில் வைத்திருக்க நியாயம் உண்டு என்றால், மகாத்மாவையும் மறுபடியும் சிறைக்கு அனுப்ப நியாயமிருக்கிறது! இம்மாதிரி பைத்தியக்காரத்தனம் செய்து தேசத்தை மறுபடியும் பெருங் குழப்பத்தில் ஆழ்த்தாமல், காரியக் கமிட்டித் தலைவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்று வேவல் சர்க்காரை வற்புறுத்திக் கோருகிறோம்.


ஐந்து ரூபாய் பரிசு: *சென்ற இதழில் வெளியான "சொர்க்கம்தான்!" என்னும்* காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: கே. வி. சீனிவாசன், பூனா.


அமெரிக்க வழி
"இதோ சுதந்திரம்!"
பிலிப்பைன் பிரஜை
ஜப்பானியன்
"அமெரிக்கப் படைகள் பிலிப்பைன் தீவில் இறங்கினதும், பிலிப்பைன் தீவின் பூரண சுதந்திரத்தை அமெரிக்க சர்க்கார் வர்ஜிதம் செய்திருக்கிறார்கள்.


பிரிட்டிஷ் பாணி
"இப்பொழுது நீ என் பக்கம் சண்டை போடு! உன் சுதந்திரத்தைப் பற்றிச் சண்டை முடிந்ததும் யோசித்துக் கொள்ளலாம்."
ஜப்பானியன்

-உம்மன்


சென்னை சர்க்காரின் ஆதரவில் நடக்கும் இந்திய வைத்தியப் பள்ளிக்கூடத்தில் இங்கிலீஷ் வைத்தியமுறை, ஆயுர்வேதவைத்தியமுறை, இரண்டையும் கலந்து பாடம் வைத்திருக்கிறார்கள். எனவே, அந்த இரண்டு வைத்திய முறைகளாலும் மேற்படி பள்ளிக்கூடம் நிராகரிக்கப் படுகிறது.
அல்லோபதி (இங்கிலீஷ் வைத்தியம்)
ஆயுர்வேதம்
இந்திய வைத்தியப் பள்ளிக்கூடம்


"இதுவா பொல்லாத மிருகம்? சாதுப்புலி அல்லவா?"
இந்தியத் தொழில்
பிரிட்டிஷ் தொழில்
பிரிட்டிஷ் முதலாளிகள் இந்தியத் தொழில் வளர்ச்சியை எதிர்க்கிறார்கள் என்பது ஒரு 'கட்டுக்கதை'தான் என்று அமெரி சமீபத்தில் கூறினார்.

குதித்தார் ரூஸ்வெல்ட்!

டண், டண், டண், டண், டண டண டண டண்! — என்று டெலிபோன் மணி ஒலித்தது.

"ஹலோ! ஹலோ! ஹலோ!"

"யார்? யார்? யார்?"

"நான்தான் ரூஸ்வெல்ட்!"

"என்ன ரூஸ்வெல்ட்?"

"பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட்!"

"என்ன பிரஸிடெண்ட்?"

"அமெரிக்கா பிரஸிடெண்ட்!"

"என்ன விசேஷம்?"

"சர்ச்சில் இருக்கிறாரா?"

"யார்! வின்ஸ்டன் சர்ச்சிலா?— நீங்கள் எங்கே யிருந்து பேசுகிறீர்கள்?"

"டிர்ர்ர்ர்ர்ர்......"

"நன்றாய்க் கேட்கவில்லை; மேலே ஆகாச விமானம் ஒன்று சத்தமிட்டுப் பிராணனை வாங்குகிறது! இரைந்து பேசுங்கள்!"

"இந்த ஆகாச விமானத்திலிருந்து தான் பேசுகிறேன். சர்ச்சில் அங்கே இருக்கிறாரா? ..."

"இருக்கிறார்! நீங்களும் வரலாம்!"

"இதோ வந்து விட்டேன்!"

அவ்வளவுதான்; நமது காரியாலயத்துக்கு மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்த ஆகாச விமானம் நாலைந்து குட்டிக்கரணம் அடித்தது! பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் தொப் பென்று நமது அறைக்குள்ளே குதித்தார்! எதிரிலிருந்த ஆசனத்தில் ஜம் என்று உட்கார்ந்தார்!

"சர்ச்சில் எங்கே?" என்று அவசரமாகக் கேட்டார்.

"நமது காரியாலயத் தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கப் போயிருக்கிறார்! இப்போது வந்து விடுவார்; அதுவரை நாம் கொஞ்சம் சம்பாஷணை நடத்தலா மல்லவா?"

"நன்றாக நடத்தலாம்!"

"சந்தோஷம்! சர்ச்சில் இங்கே இருக்கிறார் என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?"

"உமது பத்திரிகையிலிருந்துதான்!"

"ஓஹோ! நமது பத்திரிகைகூடப் பார்ப்பதுண்டா?"

"பேஷாகப் பார்ப்பதுண்டு. பிலிப்ஸ் படம் போட்டிருந்ததே, அதைக்கூடப் பார்த்தேன். அப்புறம், சைனாவுக்கு உதவி செய்வதைப் பற்றி எழுதியிருந்ததே, அதையும் பார்த்தேன். அது சுத்தத் தப்பு......!"

"ஓஹோ! அந்த அசந்துஷ்டியான விஷயமெல்லாம் இப்போது என்னத்திற்கு?......நீங்கள் இவ்வளவு பெரிய மனுஷர். வரக்கூடாத மனுஷர் வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு ஒரு கப் காப்பி கொடுக்கலாமென்றால் முடியவில்லை. கடைகளில் இப்போது விற்கும் காப்பிக் கொட்டை சர்வமோசமாயிருக்கிறது. நட்டைக் கொட்டை — அதிலும் மட்டக் கொட்டைதான் — கிடைக்கிறது. இந்தியாவில் விளையும் குண்டுக் காப்பிக் கொட்டையெல்லாம் இந்தியாவிலுள்ள அமெரிக்க லோல்ஜர்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறதாமே, உங்களுக்குத் தெரியுமா?"

"இதுகூட உங்களுக்கு வயிற்றெரிச்சலாயிருக்கிறதா? இந்தியாவைப் பாதுகாக்க வந்த அமெரிக்க இளைஞர்களுக்கு நல்ல காப்பிகூட நீங்கள் கொடுக்கக் கூடாதா?"

"பேஷாகக் கொடுக்கிறோம், ஐயா! பேஷாகக் கொடுக்கிறோம். இது விஷயத்தில் இந்தியர்களின் சுபாவம் உங்களுக்குத் தெரியாது! முதன் முதலில் பிரிட்டிஷார் இந்தியாவை இந்தியர்களிடமிருந்து பாதுகாக்கத் தொடங்கிய போது எங்கள் இந்திய சிப்பாய்கள் என்ன செய்தார்கள், தெரியுமா? கஞ்சியைத் தாங்கள் குடித்து விட்டுச் சாதத்தை பிரிட்டிஷ் ஸோல்ஜர்களுக்குப் போட்டார்கள்! இந்தியாவைப் பாதுகாக்கும் பொறுப்பு இந்தியர்களுக்கு இல்லாமல் பிரிட்டிஷாருக்கும் அமெரிக்கருக்கும் போய்விடுகிறதே என்று மட்டும் கொஞ்சம் வருத்தப்படுகிறோமே தவிர, மற்றப்படி விருந்தாளிகளை வரவேற்று உபசரிப்பதில் எங்களுக்குச் சமானம் யாரும் இல்லை!"

"தற்புகழ்ச்சி செய்து கொள்வதிலும் உங்களுக்கு நிகர் யாரும் இல்லை போலிருக்கிறதே!"

"அது விஷயத்தில் அமெரிக்கர்களுக்கு அடுத்தபடிதான் நாங்கள்!"

"என்ன? என்ன? அமெரிக்கர்களா தற்புகழ்ச்சி செய்து கொள்கிறோம்?"

"இல்லை; இல்லை! எங்களைப்போல் அப்பட்டமாக அமெரிக்கர்கள் தற்புகழ்ச்சி செய்து கொள்வதில்லை. உலகமெல்லாம் அவர்களைப் பார்த்துப் புகழும்படியாகச் செய்து விடுகிறார்கள்!"

"அது என்ன கூத்து?"

"கூத்து இல்லை; ஸினிமா! சமீபத்தில் உங்கள் நாட்டு டாக்கி படங்கள் இரண்டு பார்த்தேன்! மகா அற்புதம், போங்கள்!"

"அவை என்ன படங்கள்?"

"'யாருக்காக மணி அடிக்கிறது?' என்பது ஒன்று; 'ருஷியாவின் கீதம்' என்பது இன்னொன்று."

"அப்படியா? அவை உங்களுக்குப் பிடித்திருந்ததா?"

"ரொம்ப ரொம்பப் பிடித்திருந்தது. படங்கள் அற்புதம்; அதைவிட அற்புதம் அதிலே அமெரிக்காவின் பெருமையைப் பற்றிச் செய்திருந்த பிரசாரம்."

"என்ன? என்ன? பிரசாரமா?"

"ஆமாம்: உங்களுக்கு ஞாபகம் இல்லையா? முதல் படத்தில், ஸ்பெயின் தேசத்தில் ஜனநாயகக் கட்சிக்கும், பிராங்கோவின் பேஸிஸ்ட் கட்சிக்கும் உள்நாட்டுச் சண்டை நடந்தபோது, ஒரு அமெரிக்க இளைஞன் ஸ்பெயினுக்குப் போய் ஜனநாயகக் கட்சிக்கு உதவிசெய்து தன் உயிரையே தியாகம் செய்ததைக் காட்டியிருக்கிறது. இரண்டாவது படத்தில், ஒரு அமெரிக்க சங்கீத வித்வான் ருஷியாவுக்குப் போய் ஒரு ருஷியப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு அங்கேயே கச்சேரிகள் நடத்திக் கொண்டிருப்பதும், அப்போது நாஜிகள் படையெடுத்து வருவதும், மேற்படி அமெரிக்க சங்கீத வித்வான் ருஷியாவின் கஷ்டங்களைத் தன் கஷ்டங்களாகவே பாவித்துப் போரில் ஈடுபடுவதும் காட்டப்படுகிறது. அமெரிக்கர்களின் தீர்க்க திருஷ்டி, காரியத்திறமை, பரோபகார சிந்தை, தியாக புத்தி, வீரதீரம் முதலியவை யெல்லாம் அபாரமாக மேற்படி படங்களில் வெளியாகின்றன. படத்துக்குப் படம், பணத்துக்குப் பணம், பிரசாரத்துக்குப் பிரசாரம்; பிரசாரத்திலேயும் யுத்தப் பிரசாரம் ஒரு பக்கம், அமெரிக்காவின் மேன்மைப் பிரசாரம் இன்னொரு பக்கம்.....! உங்கள் அமெரிக்காவின் காரியங்களே பிரமாதந்தான்!"

"இதிலெல்லாம் பிரசாரம் ஒன்றுமில்லை. எல்லாம் உண்மைதானே? உலகத்தின் நாலு பக்கங்களிலும் அமெரிக்கர்கள் போய் அந்தந்த நாடுகளின் சுதந்திரத்துக்காக இரத்தத்தைச் சிந்தவில்லையா? அது இருக்கட்டும். மொத்தத்தில் அமெரிக்கர்களாகிய எங்களைப் பற்றி இந்தியர்களின் அபிப்பிராயந்தான் என்ன?"

"ரொம்ப ரொம்ப நல்ல அபிப்பிராயந்தான்! எங்களுடைய சுவாமி விவேகானந்தரை உங்கள் நாட்டில் வரவேற்று உபசரித்ததிலிருந்து எங்களுக்கு அமெரிக்கா என்றால் பிராணன். அப்புறம் அமெரிக்க மோட்டார் வண்டிகளும், ஹாலிவுட் படங்களும், பார்க்கர் பௌண்டன் பேனாக்களும், ஸ்டீபன் லீகாக்கின் ஹாஸ்யமும், கடைசியாக உங்கள் தூதர் பிலிப்ஸும் இந்தியர்களுக்கு அமெரிக்காவிடம் அபார பிரேமை உண்டுபண்ணி விட்டார்கள். அப்படி ஒருவேளை நாம் அடிமையாயிருந்துதான் தீரவேண்டுமென்றால், அமெரிக்கரின் கீழ் அடிமையாயிருக்கலாம் என்று கூடச் சிலருக்கு எண்ணம் உண்டு!"

"அடாடா! அந்த வார்த்தையை மட்டும் என் காதில் போட வேண்டாம். அமெரிக்கர்கள் யாரையும் அடிமைப்படுத்தி ஆள முடியாது. ஒருநாளும் முடியாது. மார்ஷல் தீவைக் கைப்பற்றியவுடன் என்ன செய்தோம்? அந்தத் தீவுக்குப் பூரண சுதந்திரம் கொடுத்து விடவில்லையா? பிலிப்பைன் தீவில் இறங்கியதும் என்ன செய்தோம்? பரிபூரண சுதந்திரம் என்று அறிவித்து விடவில்லையா?"

"உண்மைதான்! நீங்கள் விரும்புவதெல்லாம் உலக மெங்கும் தாராளமாக வியாபாரம் செய்யும் உரிமை; அவ்வளவுதான். இல்லையா?"

"அவ்வளவுதான்; நல்ல சரக்காகக் கொடுக்கிறோம்; வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறோம்."

"பிரஸிடெண்ட்வாள்! அந்தப் பாரிஸ் சம்பவம் வெகு ஜோர்!"

"எதைச் சொல்கிறீர்?"

"தெரியவில்லையா? பிரிட்டிஷ் பத்திரிகைகள் தடபுடல் படுத்திய சம்பவத்தைத்தான். பாரிஸில் நுழைந்த அமெரிக்க சைன்யத்தோடு இராணுவ உடையில் அமெரிக்க வியாபாரிகளும்

நுழைந்த சம்பவந்தான். பாரீஸுக்குள் பிரவேசித்ததும் அவர்கள் சட்புட்டென்று இராணுவ உடையைக் கழற்றி விட்டு வர்த்தக உடை அணிந்து கொண்டு சாமான்களுக்கு ஆர்டர் வாங்க ஆரம்பித்து விட்டார்களாமே?''

''எல்லாம் பிரிட்டிஷ் பத்திரிகைகளின் திரிசமன்; அதுமாதிரியே தான் அமெரிக்கர்கள் இந்தியர் விஷயத்தில் ஏதாவது அநுதாபம் காட்டினும், உடனே 'இந்தியாவில் வியாபாரம் செய்வதற்காக' என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் உளறிக் கொட்டும்......''

''அந்த உளறலை எங்கள் ஊர்ப் பத்திரிகைகளே கொட்டி விட்டன! வியாபாரத்துக்காக இருந்தால் என்ன, எதற்காக இருந்தால் என்ன, — அநுதாபம் அநுதாபம்தானே? என் வரையில், தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்க நான் தயாராயில்லை. அமெரிக்கர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டு இந்தியாவிடம் அநுதாபம் காட்டினாலும், அதை நான் பாராட்டுகிறேன். எல்லா சாமான்களையும் உங்களிடமே வாங்கவும் தயாராயிருக்கிறேன். ஆனால் நீங்கள் மட்டும் ஒரே ஒரு காரியம் செய்ய வேண்டும்!''

''அது என்ன காரியம்?''

''பிரமாதம் ஒன்றுமில்லை; சர்ச்சிலை இன்னும் கொஞ்சம் அதிகமாக வற்புறுத்தி இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கச் செய்ய வேண்டும்.''

''அழகுதான்! சர்ச்சிலை வற்புறுத்த நீர் பிரயத்தனம் செய்து பார்த்திருந்தால் ஒரு நாளும் இப்படிச் சொல்ல மாட்டீர். சர்ச்சிலை வற்புறுத்தப் பார்ப்பதும் சரி;......''

''......நாய் வாலை நிமிர்த்தப் பார்ப்பதும் சரி!''

''அதைக் காட்டிலும் உதாரண ரூபமாய்ச் சர்ச்சிலை வற்புறுத்தலாமென்று தான் மார்ஷல் தீவிலும் பிலிப்பைனிலும் அடி வைத்ததும் நாங்கள் சுதந்திரப் பிரகடனம் செய்தோம்.''

''அதே மாதிரி, சைனாவுக்கு உதவி செய்யும் விஷயத்திலும் கொஞ்சம் உதாரண ரூபமாகச் செய்யக் கூடாதா, பிரஸிடெண்ட்வாள்!''

''அதனால்தான் முன்னமே சைனா விஷயத்தைப் பிரஸ்தாபித்தேன். அதைப் பற்றி நீங்கள் எழுதியது சுத்தத் தப்பு. சைனாவுக்கு வேண்டிய முதன்மையான உதவி என்ன? ஜப்பானைத் தோற்கடிப்பது!— அதைச் செய்கிறோமா, இல்லையா, பாருங்கள்!''

''ஜப்பானைத் தோற்கடிக்கும் வேலைக்குச் சைனாவையும் கொஞ்சம் பயன்படுத்திக் கொள்ளலாமே என்றுதான் சொல்கிறேன். சைனாவில் ஆள் பலம் நிரம்ப இருக்கிறது; போதிய ஆயுதங்கள் மட்டும் இருந்தால்?''

''உண்மைதான்; ஆனால் சைனாவுக்கு ஆயுதங்கள் எப்படி அனுப்புவது? கடல் வழியாகக் கப்பல்களில் அனுப்ப வேண்டும். ஜப்பான் கப்பற்படை இருக்கும் வரையில் இது எப்படி சாத்தியம்? அதற்காகத்தான் அமெரிக்கக் கப்பற் படை ஜப்பான் கப்பற்படையைத் தேடிக் கொண்டேயிருந்தது!......''

''கடைசியில் கண்டு பிடித்து விட்டாற் போலிருக்கிறதே! நாலு நாளாய்ப் பெரிய கடல் யுத்தம் நடக்கிறதாமே?''

''அதைப் பற்றி அட்மிரல் நிமிட்ஸின் அறிக்கைகளைப் பார்த்துக் கொள்ளவும்......''

''இந்தத் தடவை பழைய கதையைச் சொல்லி ஏமாற்றமாட்டாரே?''

''மாட்டார், மாட்டார்! ஜப்பான் கடற்படை மட்டும் அடியோடு ஒழியட்டும். அப்புறம் சைனாவுக்கு எப்படி உதவி போகிறது என்று பாருங்கள்!''

''ரொம்ப சந்தோஷம்! ஆனால் உங்களுடைய உதவியோடு நிற்க வேண்டுமே என்றுதான் கவலைப்படுகிறேன். பிரிட்டிஷாரும் தங்களுடைய உதவி மூட்டையை எடுத்துக் கொண்டு வந்து ஹாங்காங்கிலும் ஷாங்காயிலும் மறுபடியும் உட்கார்ந்துவிடப் போகிறார்களே என்று சிலர்களும் கவலைப்படுவார்கள். போகட்டும்; தேர்தல் போராட்ட நெருக்கடியின் மத்தியில் தாங்கள் இவ்வளவு தூரம் விஜயம் செய்ததே பெரிய காரியம்...... இதோ சர்ச்சிலும் வந்து விட்டார்!''

அச்சமயம் 'மியாவ் மியாவ்' என்று நமது வருகையைத் தெரிவித்துக் கொண்டு சர்ச்சிலும் வந்து சேர்ந்தார். உடனே, ரூஸ்வெல்ட்டும் சர்ச்சிலும் (அதாவது நமது காரியாலயத்தின் வெள்ளைப் பூனையும் கருப்புப் பூனையும்) தங்களுடைய அந்தரங்க மகா நாட்டை ஆரம்பித்தார்கள்!

வான சஞ்சாரம்

இசைத் தேனீ

17ல் திருச்சி நிலையத்தில் பாடிய எம். கே. கோவிந்தராஜ பாகவதருக்கு ஞானம் என்னமோ குறைவில்லை. பூர்வி கல்யாணி, தோடி, கரஹரப்ரியா, காம்போதி முதலிய ராகங்களைச் சிரமப்பட்டு விஸ்தாரமாகவே கையாண்டார். சாதக முறையையும், தொண்டையைக் கொடுக்கும் மாதிரியையும் கொஞ்சம் சரிப்படுத்திக் கொள்வாரானால் பாட்டு இன்னும் ரஸிக்கக்கூடியதாயிருக்கும்.

19ல் திருச்சி ரேடியோவில் பாடிய அமிநூர் கிருஷ்ணனுக்குக் குரல் நயமாக இருந்தது. ஞானபாவத்துடன், தோடி, பைரவி, பந்துவராளி, காபி முதலிய ராகங்களை உழைத்துப் பாடினார். விறுவிறுப்பு அதிகம் இருந்தது. பெரும்பாலும் திரும்பத் திரும்ப ஷட்ஜத்தில் முடியும் பிர்க்காப் பிடிகளையே பிரதானமாகக் கொண்டிருந்தார். ராகங்களுக்குப் 'பிளான்' போட்டுக் கொண்டு பாடுவாரானால் இவர் சங்கீதம் மேம்படும்.

திருச்சியில் எம். என். மோஹனப்பான் காத்திரமும் மெருகும் கொண்ட குரலில் நீண்ட கார்வைகளைக் கொடுத்து, அநாயாசமாய் மேல் பஞ்சமம் வரை சஞ்சாரங்களை விரைந்தார். கல்யாணி, ஷண்முகப்ரியா, தோடி இவை சிறந்து விளங்கின.

பழுத்த அனுபவமுள்ள வித்வான்கள் வாத்யங்களை வாசித்தாலே அதில் சாதாரணமாய்க் காணப்படாத பெருமை விளங்கத்தான் செய்கிறது. 20ல் சென்னையில் ஸ்ரீ துரையப்பா பாகவதரின் கோட்டு வாத்யம், சம்பிரதாய முறையுடன், அழுத்தமும், கமகப் பொழிவும் கொண்டு இலங்கியது. வராளி ராகத்தை உருக்கெடாமல் அழகுபடக் கையாளும் மிகச் சிலரில் இவர் ஒருவர் என்பது தெரிந்தது. கரஹரப்ரியாவைக் கனிப்பாய் வாசித்தார்.

அன்று இரவு எல்லோரும் திருச்சி ரேடியோவில் 8 மணிக் கச்சேரிக்காகக் காத்திருந்திருப்பார்கள் என்பது நிச்சயம். எதிர்பார்த்தபடி டி. என். ராஜரத்னம் பிள்ளைக்குப் பதிலாக அவர் மருமகன் வாசிக்கவில்லை. ஸ்ரீ ராஜரத்தினமேதான் வாசித்தார். தற்கால வித்வான்களில், அடங்கிய நாத அழகு, எல்லையற்ற மனோதர்மம், இணையற்ற பாணி இம்மூன்றும் ஒருங்கே சேர்ந்து இலங்கும் அபூர்வ மேதை ராஜரத்னம் என்பதை அடிக்கடி சொல்லியிருக்கிறேன். அன்றைய தினம் கச்சேரியிலும் இவைகளுக்கு ஒன்றும் குறைவில்லை. சௌராஷ்டிரத்தில் 'நின்னு ஜூசி'யையும் பந்துவராளி ராகத்தையும் அதன் உருப்படியையும் 15 நிமிஷங்களில் முடித்து விட்டு பாக்கியுள்ள நேரம் முழுவதையும் ஸிம்மேந்திர மத்யம ராக ஆலாபனையிலும், பல்லவி, ராகமாலிகை இவைகளிலும் கழித்தார். பிர்க்கா, கார்வை, குழைவு, நாஸூக்கான ஒதுக்கல்கள் முதலிய உயரிய சங்கீதத்தின் லக்ஷணங்கள் யாவும் அடங்கியிருந்தன. பல்லவியில் அதிக லய வின்யாசமும் தென்பட்டது. அவருக்குப் பக்க வாத்யம் வாசித்த தவில்காரரின் திறமையும் அசாத்தியம்தான். ஆனால் பொன்னுஸாமி பிள்ளையானாலும் கண்ணில் குத்திக்கொள்ள முடியாது. ராஜரத்னம் ஸிம்மேந்திர மத்யமத்தில் முதலில் சிறிது நேரம் வாசித்த பிறகு 8-18க்கு ஆரம்பித்த தவில் 8-26 வரை கேட்டது. அதற்கப்புறமும் அடிக்கடி இரண்டு மூன்று நிமிஷங்கள் நடுநடுவே கேட்டது. மொத்தத்தில் கணக்குப் பார்க்கும்போது ராஜரத்னத்துக்குத் தவில் பக்க மேளமா அல்லது தவில்காரருக்கு அவர் பக்க மேளமாய் நாதஸ்வரம் வாசித்தாரா என்ற சந்தேகம் கிளம்பிற்று.

21ல் இரவு சென்னையில் இன்னும் ஒரு பழம் பெரும் வித்வானின் கச்சேரி மனதைக் கவர்ந்தது. அவர்தான் பாகுப்பள்ளி ராமகிருஷ்ணய்ய பந்துலு. கனசாரீரம், நிகரற்ற சாதகம், தொண்டை பேசுவதிலெல்லாம் மாசற்ற தெளிவு, விளம்ப மத்தியம காலப் பொருத்தங்கள். நாகஸ்வராவளி என்ற அபூர்வ ராகத்தைச் சாதாரண கனராகம் போலவே சரளமாயும் விஸ்தாரமாயும் விளாசினார். கல்யாணியில் ஒவ்வொரு இடமும் ராகவடிவம் நன்கு ஸ்புரிக்கும்படி தெளிவாய்ப் பாடினார். தோடியில் அநேக சஞ்சாரங்களில் பஞ்சம வர்ஜ்யம் செய்த பிடிகள் ரம்யமாயிருந்தன.

அன்று சென்னை ரேடியோ ப்ரோகிராமில் 10 மணிக்கு டி. வி. சுந்திரராஜன் பாட்டு என்று கண்டிருந்தது. அந்நேரத்துக்கு ரேடியோவைத் திருப்பினதும் "இதுவரை டி. வி. சுந்தரராஜன் பாடியதைக் கேட்டீர்கள்" என்ற முடிவுரையைத்தான் கேட்டேன்.

23ல் சென்னையில் பாடிய எம். கே. ஜயலக்ஷ்மியின் சாரீரம் ஜில்லென்றிருந்தது. பிர்க்கா வகை ஆயினும் செளக்க காலத்திலும் பாடினார். பைரவி கமாரமாயிருந்தது. காபி ஜோராயிருந்தது. 'அம்பா நீ தய்யா' என்ற உருப்படியில் ஒருதரம் விழுந்த சங்கதியையே பலதடவை திரும்பத் திரும்ப வழங்கினது மாத்திரம் அவ்வளவு ருசிகரமாயில்லை.

அன்று சென்னையில் ரங்கப்பாவின் வேணுகானம் குறிப்பிடத்தக்கதாயிருந்தது. ராகங்களுக்கு விசாலமான திட்டம் போட்டு, நீண்ட கார்வைகளுடனும் அழுத்தமாயும் வாசித்தார்.

இரவு திருச்சியில் புதுநூர் கிருஷ்ணமூர்த்தி ஜோஸ்ஸிர் கோட்டு வாத்தியத்தில் ஜமாய்த்தார். இவரும் ஒரு பழம் பெரும் வித்வான். உயர்ந்த ஞானம். கல்யாணி, தோடி, மோஹன ராகங்களை வாத்தியத்தில் அழுத்தமாய்க் கையாண்டார்.



அமிநூர் கிருஷ்ணன்

வட்ட மேஜை

தென்காசி,
16—10—44.

நமஸ்காரம்: கவி டாகூர் 'சித்ரா லிபி' என்ற படப் புத்தகம் வரைந்துள்ளார். 18 படமும், அதன் கீழ் குறிப்பும் எழுதியுள்ளார். முகவுரையில் ரொம்ப அழகாகச் சொல்லுகிறார், பாருங்கள் :—

"பரமாத்மாவின் மோன நிலையில் சப்தமானது ஒரு சின்னஞ் சிறு குமிழியைப் போன்றது. உலகத்துக்கு ஒரே ஒரு பாஷைதான் இருக்கிறது—அது சமிக்ஞை பாஷைதான். படங்கள் மூலமாகவும் நாட்டியங்கள் மூலமாகவும் அது வெளியாகிறது. என் சித்திரங்களின் அர்த்த பாவம் என்ன என்று என்னை அடிக்கடி கேட்கிறார்கள். என் சித்திரங்களைப் போலவே நானும் மௌனமாக இருந்து விடுகிறேன். ஏனெனில், சித்திரங்களே பேச வேண்டும்; நான் பேசக் கூடாது."

கல்கி தீபாவளி மலரைப் பார்த்தேன். அதில் கனு தேசாய் வரைந்துள்ள படங்களைப் பார்த்துப் பரமானந்தம் அடைந்தேன். "வழிபாடு" "விளக்கும் வண்டும்" என்ற இரண்டும் ரொம்ப அபாரமாயிருக்கிறது. அஜந்தா சித்திரங்களையும் அப்படியே படம் பிடித்து அழகாய்ப் போட்டிருக்கிறீர்கள். புதுமையும் பழமையுமான சித்திரங்களை ஒருங்கே திரட்டி அமைத்திருக்கிறீர்கள். இப்படி அமைந்த கல்கி தீபாவளி மலரை நான் என் "கல்கி சித்ராலிபி" என்று சொல்லக்கூடாது என்று கேட்கிறேன்.

—கா. ச. இராமச்சந்திரன்.

விட்டலபுரம்,
16—10—44.

இலக்கியத் தலைவர் ஸ்ரீ டி. கே. சி. சொல்கிறபடி ஆண்டாள் மட்டும் நம்மை ஆளவில்லை; கல்கி மலரே நம்மை ஆளுகிறது. சித்திரங்களோ, விஷயங்களோ அப்படி அமைந்திருக்கிறது. மன்மதன் போர்க்கோலம் நம்மைப் பரவசப்படுத்துகிறது. உண்மையில் தமிழ் நாடும் தமிழரும் பெருமைப்படக் கூடிய அற்புதம் இந்த தீபாவளி கல்கி மலர்.

—வ. ஸ்ரீ. வெங்கடாச்சாரி.

பசுமலை,
17—10—44.

மாணவர்களாகிய எங்களுடைய பாடப் புத்தகங்களைப் படித்துப் படித்துப் பூத்துப் போன கண்கள் இவ்வருஷத்திய கல்கி மலரைக் கண்டவுடன், புதிய ஒளி, ஜீவன் பெற்றுவிட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாணவர்கள் சார்பாக,
—காபூர் பால்ராஜ்.

தென்காசி,
17—10—44.

பள்ளிக்கூடத்தில் டான் க்விக்ஸாட் (Don Quixote) வாசித்தேன். "Three men in a boat" வாசித்தேன். அவற்றின் ஹாஸ்யம் சேர்ந்து முதல் என் நினைவிலிருந்து மங்கிவிட்டது. அப்படி அவற்றை மங்கும்படி செய்த விஷயம் என்னவென்று சொல்லட்டுமா? இப்பொழுதும் அதை நினைக்கும்போது என்னைச் சிரிப்பு விட்டபாடில்லை. தங்கள் 'கல்கி' தீபாவளி மலரில் அஜந்தா குகையின் சிறப்பைப் பற்றி எழுதும்போது காரிலிருந்து இறங்கியவுடன் டிரைவர் 'ஸ்டெப்னி எங்கே?' என்றதும் தாங்கள் சட்டைத் துணியை உதறியதுதான்!

—பி. சி. சுப்பய்யா.

308, ராஸ்தாப்பேட்டை,
பூனா.
தாருண, புரட்டாசி, 31.

வீணை பவானி போன்ற மற்றொரு சிறுகதைக்காக ஒரு வருஷம் தாமதித்தது வீண்போகவில்லை.

பர்மாவிலிருந்து இந்தியாவிற்குத் தப்பி வந்த ஜனங்களின் துயரத்தை சிறிய கதையொன்றில் சித்தரித்துவிட்டீர்கள். "கடவுள் வெள்ளைக்காரர்களையும் கறுப்பு மனிதர்களையும் தனித்தனி சிறந்தோடு படைத்ததுமல்லாமல், அவர்கள் பர்மாவிலிருந்து இந்தியா போவதற்குத் தனித்தனிப் பாதையையும் படைத்திருந்த அதிசயத்தை எண்ணி எண்ணி வியந்தேன்" என்று ஒரே வாக்கியத்தில் துயரம் நிறைந்த உள்ளக் கருத்தை வெளியிட்டிருக்கிறீர்கள்.

—பொ. வெ. சுப்பிரமணியன்

பூனா.
18—10—44

கல்கி தீபாவளி மலர் கண்டோம். கனு தேசாயின் தெய்வீக அற்புதம் பொருந்திய படங்களும், அவற்றிற்கு விளக்கம் கொடுக்கும் பாட்டுக்களும் ஆனந்தத்தில் ஆழ்த்தின.

அஜந்தா யாத்திரையைப் படித்துக் கொண்டே போன எனக்கு, உங்களுடைய மோட்டார் வாடகையும், டிரைவரின் அழிச்சாட்டியங்களும் வியப்பையே அளித்தன. உங்களுடன் யாதொரு கஷ்டமுமின்றி மனோ யாத்திரை செய்த எனக்குப் பின் எப்படித் தோன்றும்? அந்த வர்ணச் சேர்க்கைகளின் ரகசியத்தை ஆயனரிடம் போய்ச் சொல்ல எனக்கு ஒரே ஆவல்.

எல்லாவற்றிலும் சிறந்த அம்சங்களைக் கொண்ட தீபாவளி மலர் சென்னையை விட்டுச் சென்ற என் போன்ற தமிழர்களுக்கு நற்றமிழ் நாட்டு நினைவுகளை தீபாவளியன்று அளித்தது.

—சரோஜினி ஜகன்னாதன்.

திருநெல்வேலி
19—10—55.

“ அஜந்தா அதிசயங்கள் ” என்ற தங்கள் கட்டுரையைப் படித்த பிறகு, என் வாழ்நாளில் எப்போதாவது ஒரு முறை அஜந்தா செல்ல வேண்டுமென்ற ஆசை உண்டாகி விட்டது. அதற்கென ஒரு உண்டியல் தயார் செய்து அதில் அஜந்தா யாத்திரைக்கு என இன்று முதல் காசு போட்டு வருகிறேன்.

—எஸ். கோபால கிருஷ்ணன்.

தென்காசி,
18—10—44.

ரயில் நெருக்கடி இல்லாமலும், டாக்ஸி செலவில்லாமலும் நம்மையெல்லாம் அஜந்தா குகைக்கு அழைத்துச் சென்று ஆனந்த மூட்டும் இந்த அஜந்தா மலருக்கு என்ன புகழ்ச்சி அளித்தாலும் தகும்.

நேற்று காலை காப்பி சாப்பிட்டவுடன் அஜந்தா குகைக்குள் நுழைந்தேன். என் தாயார் உபத்திரவத்தினால் சாப்பிட்டுவிட்டுத் திரும்பியும் அஜந்தாவிற்குள் புகுந்தேன். மாலை காப்பிக்கு வர முடியவில்லை. இரவு சாப்பாட்டிற்குப் பிறகு, குகைக்குள்ளேயே தூங்கிப் போய் விட்டேன். (கட்டுரையைப் பதினேழாவது தடவையாகப் படித்துக் கொண்டிருந்தபோது பிரயாண அசதியால் தூங்கி விட்டேன்.)

இன்று காலை ஆபீஸ் போக வேண்டிய நிர்ப்பந்தத்தால் அஜந்தாவுக்குப் போக முடியவில்லை. கண்ணனை விட்டுப் பிரியும் கோபியைப் 'பிரியும் பாதை'யில் ஸ்ரீ கனு தேசாய் காண்பிக்கிறார். அந்தக் கோபியை விடப் பதினாயிரம் மடங்கு தாபத்துடன் கல்கி மலரைப் பிரிந்து ஆபீஸ் போனேன்.

—ஆர். எஸ். சுவாமிநாதன்.

சென்னை,
20—10—44.

தாங்கள் அஜந்தா பிரயாணக் கட்டுரையை எழுதியதன் மூலம், "கல்கி" வாசகர்களையும் டிக்கெட் இல்லாமல் அஜந்தாவுக்குப் பிரயாணம் செய்வித்த குற்றத்திற்குள்ளாகிறீர்கள் என்று சொல்வதைத் தவிர வேறு என்ன இருக்கிறது!

—பி. எஸ். மணி.

தமிழ்ப் பண்ணை, சென்னை.
21—10—44

கம்பனுடைய குகன், "ஆயிரம் ராமர் பாதனுக்கு ஈடாகுமா?" என்று சொல்லுவது போல், "ஆயிரம் தீபாவளி மலர்கள் வெளி வந்தாலும் கல்கி தீபாவளி மலருக்கு ஈடாகுமா?" என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

தமிழ் உலகத்திற்குக் கல்கி மலர் ஒரு பொக்கிஷம். இப்படிப்பட்ட ஒரு அருமையான, அற்புதமான மலரை எங்களுக்குக் கொடுத்ததற்கு வந்தனம்.

—நா. அண்ணாமலை.

சென்னை,
22—10—44.

வேய்க்குழல் பொழி கீதம் என்னும் கவியின் இனிமைக்கு அந்த மாயக் கண்ணனின் குழல்கீதத் இனிமையைத்தான் நிகர் சொல்லலாம்.

பயங்கரச் சதிக் கூட்டம், போலீஸ் இன்ஸ்பெக்டர், மர்மக் கடிதம் முதலிய திடுக்கிடும் விஷயங்களைக் கொண்டே ஒரு காதல் கதையை வளர்த்ததும், ஒரு சொட்டுக் கண்ணீரைக் கொண்டு ஒரு ஹாஸ்யக் கட்டுரையை காடோடியும் அற்புதமாக எழுதியிருக்கிறார்கள்.

—கே. ஆர். கல்யாணராமன்.

பம்பாய்,
20—10—44.

இந்தத் தீபாவளி மலர் முழுக்க முழுக்க ஒரு கலை மலராகவே தோன்றுகிறது. விஷயங்களிலும், தோற்றத்திலும் கலை மணம் கமழுகிறது. கல்கத்தாவிலிருந்து வெளி வரும் பூஜா மலர்களையும், பம்பாயிலுள்ள சிறந்த தாய் பாஷைப் பத்திரிகைகள் வெளியிடும் தீபாவளி மலர்களையும் பார்த்தேன். இந்த வருஷம் முதற் பரிசை கல்கி தீபாவளி மலருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்பது என் மனப் பூர்வமான அபிப்பிராயம்.

—கே. ஏ. சிதம்பரம்.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்
மாதுங்கா,
17—10—44

கலை உருவான ஒரு சிறு மலரை தீபாவளியன்று உலகினுக்கு அளித்த பெருமை தங்களுடையது. ஒவ்வொரு இதழிலும் அறிவொளி வீசி அழகுடன் விளங்கும் இம் மலரின் அமைப்பை என்னவென்று வியப்பது!

தமிழிசை திக் விஜயம் செய்து தஞ்சை மராட்டியரையும் ஆவேசப்படுத்திய வரலாற்றை முதலாகக்கொண்டு, முறையே செஞ்சை அன்றும் ஆண்டான் பாகர விளக்கம், கிரபாசாநியைக் காக்கும் குக சில சமயங்களில் நூல் இழை போன்றது என்ற உண்மையை வெகு நுட்பமாகச் சித்திரித்துக் காட்டும் ராஜாஜியின் கதை, அஜந்தாவின் அதிசய வர்ணனை, அபூர்வச் சித்திரங்கள், மீரா யாத்திரையின் ஒப்பற்ற நிகழ்ச்சிகள், தேசிக விநாயகம், கவி ராமலிங்கம் — இவர்களின் தேனில் குழைத்த கவிதைகள், கனு தேசாய் முதலியவர்களின் உயிர் ஓவியங்கள், மகாத்மா படம் இவை ஒவ்வொன்றும் "ஒரு கோடி பெறும்." வெறும் புகழ்ச்சியில்லை; உண்மை.

உற்று நோக்கின், இம் மலரின் தத்துவம் "வழிபாடு" என்ற முதல் சித்திரத்திலேயே அடங்கி யிருக்கிறது. அழகும், மணமும் ஒளியும் ஒருங்கே அமையப் பெற்ற தமிழ் அணங்கே தமிழ்க் கடவுள் வழிபாட்டிற்கு ஞான ஒளி வீசும் மலர் விளக்கு ஏந்தி நிற்பதுபோல் அமையப் பெற்றுள்ளது. அம் மலர் விளக்கே இம் மலர்.

"காடோடி" என்னதான் சொல்லட்டும்; தமிழ் அன்பர் ஒவ்வொருவரும் இம் மலரைக் கண்டு ஒரு சொட்டு ஆனந்தக் கண்ணீராவது விடாமல் இரார்!

—எஸ். வெங்குசாமி.

பழனி
20—10—44

மயிலும் மலையும் குகனும் அழைக்கும் தமிழ்ச் சோலைக்குள் புகுந்து விட்டால் தமிழும் அழகும் பூத்துக் குலுங்கும் இன்பம் காத்துக் கிடக்கிறது.

எல்லோரும் எல்லோரா போக முடியுமா! எல்லாம் கொண்டு வந்து கொடுத்து விட்டீர்கள்.

மலரைக் கையில் எடுத்துக் கொண்டு, கிரி சுற்றி மலை ஏறி ஆண்டவன் பாதங்களில் உங்கள் சார்பாகச் சமர்ப்பித்து விட்டேன்.

—மயில் பண்ணை ஸ்ரீநிவாசய்யர்.

பெங்களூர்,
18—10—44.

கண்டேன், கண்டேன், கண்டு மகிழ்ந்தேன் தீபாவளி மலரை! உண்மையிலேயே காண்பது அற்புதம்தான். மேலட்டையையே புரட்ட முடியாமல் தவிக்கச் செய்து விட்டீரே, நல்ல ஆசாமி ஐயா நீர்! அஜந்தா குகைச் சித்திரங்களைப் பற்றிய கட்டுரையையும் படங்களையும் பார்த்த பிறகு "நாமும் அஜந்தா போய் வரவேண்டும்" என்று தோன்றுகிறது. கல்கி மலர் கிடைக்காதவர்களுக்காக 'ஒரு சொட்டுக் கண்ணீர்'; கிடைத்தவர்கள் பல சொட்டு ஆனந்தக் கண்ணீர் விட்டுத்தான் ஆகவேண்டும்.

ரா. பாலகிருஷ்ணன்.
—இ. சு. மாதவ ராவ்.

மேட்டூர் அணை.
23—10—44.

கல்கி தீபாவளி மலரைக் கண்டதும் பிரமித்துவிட்டேன். அட்டைப் படத்தைப் பார்த்ததுமே, உலக அதிசயங்களில் எட்டாவது அதிசயம் என்று திட்டமாகத் தெரிந்து விட்டது.

வெள்ளிக் காந்தியையும் அஜந்தா சித்திரங்களைப் பார்த்ததும் எனது கண்களையே நம்ப முடியவில்லை. உயிர் ஓவியங்களைப் பலமுறை பார்த்தும் என் கண்களின் ஆசையை அடக்க முடியவில்லை. யாமறிந்த மலர்களிலே கல்கி மலரைப்போல் யாங்கணுமே கண்டதில்லை. இது உண்மை; உபசாரத்துக்கல்ல!

—ப. ராமச்சந்திரன்.


சமையல் வேலைகளை
சீர்படுத்த வருகிறது
காமதேனு
வனஸ்பதி
தயாரிப்பவர்கள் :
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்.
மேட்டூர்டேம் — தென்னிந்தியா
KVK-1-TM
மானேஜிங் ஏஜண்டுகள் :
சேஷசாயி பிரதர்ஸ் லிட்.,
திருச்சிராப்பள்ளி.
சோல் விற்பனை ஏஜண்டுகள் :
அலைட் இண்டஸ்ட்ரியல் டிஸ்ட்ரிபூடர்ஸ்
லிட்., 120, அரமனைக்காரத் தெரு, மதராஸ்.

சிவகாமியின் சபதம்



அத்தியாயம் 27

இருளில் ஒரு குரல்

க்ஷண நேரம் ஜொலித்து உலகை ஜோதி வெள்ளத்தில் மூழ்குவித்த மின்னலின் ஒளியில், புத்தபிக்ஷு ஏரிக்கரையில் நின்று கைகளைத் தூக்கிப் பேய்ச் சிரிப்புச் சிரித்த காட்சியைக் கண்டதும், சற்று நேரம் குண்டோதரன் பீதியினால் கை கால்களை அசைக்க முடியாதவனாய் மரத்தோடு மரமாக நின்றான். பிறகு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு சேற்றில் தட்டுத் தடுமாறிக்கொண்டு, ஏரிக் கரைமேல் ஏறினான். ஒரு உத்தேசமாக, கரையைப் பிளந்து கொண்டு தண்ணீர் ஓடிய இடத்தை நோக்கி அவன் நடந்த போது, மறுபடியும் கண்ணைப் பறிக்கும் மின்னல் ஒன்று மின்னியது. அதன் ஒளியில், கரையில் வெட்டப்பட்டிருந்த கால்வாய் முன்னால் பார்த்ததைக் காட்டிலும் அகண்டிருப்பதையும், தண்ணீர் முன்னைவிட அதிவேகமாகக் கரையைப் பிளந்து கொண்டு போவதையும் பார்த்தான்.

புத்த பிக்ஷு நின்ற இடத்தில் அவரைக் காணவில்லை. ஆனால் மண் வெட்டி மட்டும் கிடந்த இடத்திலேயே கிடந்தது.

உடனே குண்டோதரனுடைய மனத்தில் சிறிது தைரியம் உண்டாயிற்று. கால்வாயை ஒரே தாண்டாகத் தாண்டி அப்பால் குதித்தான். கரையிலே ஒரு காலும், தண்ணீரில் ஒரு காலுமாக ஒரு கணம் அவன் நின்றபோது, தண்ணீருக்குள் கால் தரையில் தொடவில்லையென்பதையும், அதற்குள்ளே தண்ணீர் அவ்வளவு ஆழமாகப் பறித்து விட்டதென்பதையும் உணர்ந்தான். மெதுவாகச் சமாளித்து ஏறி, அக்கரையில் கிடந்த மண்வெட்டியைக் கையினால் தடவி எடுத்து அவசர அவசரமாக மண்ணைச் சரிந்து வாய்க்காலில் தள்ளினான். அப்படித் தள்ளும் போதே, "ஆஹா! இது வீண் பிரயத்தனம் போலிருக்கிறதே!" என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றியது.

அதே சமயத்தில், அவன் கழுத்தண்டை ஏதோ ஸ்பரிச உணர்ச்சி ஏற்படவே, சட்டென்று மண் வெட்டியைக் கீழே போட்டுவிட்டு நிமிர்ந்தான். அவன் எதிரே கும்மிருட்டில் ஆஜானுபாகுவான ஓர் கரிய உருவம் நின்றது. அது புத்த பிக்ஷுவின் உருவம்தான் என்பதையும், அந்த மகான் தமது இரும்புக் கைகளால் தன்னுடைய கழுத்தைப் பிடித்து நெறிக்க முயல்கிறார்

கல்கி

என்பதையும் ஒரு கணத்தில் தெரிந்து கொண்டான். குண்டோதரனுடைய வஜ்ரக் கைகள் அவனுடைய தோள் மேலிருந்த புத்த பிக்ஷுவின் கை மணிக் கட்டுக்களைப் பிடித்துக் கொண்டன.

குண்டோதரனுடைய தலைக்குமேல் பிக்ஷுவின் பேய்ச் சிரிப்பு ஒலித்தது.

இடையிடையே வானத்தைக் கிழித்துக்கொண்டு தோன்றி மறைந்த மின்னல் வெளிச்சத்தினால் இன்னும் கன்னங் கரியதாகத் தோன்றிய காரிருளில், விளிம்புவரை தண்ணீர் ததும்பி அலை மோதிக் கொண்டிருந்த ஏரிக் கரையில், கணத்துக் கணம் அகண்டு வந்த உடைப்புக்கு அருகில், குள்ள உருவமுடைய குண்டோதரனுக்கும் நெடிதுயர்ந்து நின்ற புத்த பிக்ஷுவுக்கும் இடையே பயங்கரமான மல் யுத்தம் ஆரம்பமாயிற்று.

புத்த பிக்ஷு தமது கைகளைக் குண்டோதரனுடைய கழுத்தருகே கொண்டுவர முயன்றார்; அந்தக் கைகளின் மணிக்கட்டுகளைப் பிடித்துக் கொண்டு குண்டோதரன் அவற்றை அப்புறப்படுத்த முயன்றான்.

இந்த துவந்த யுத்தம் சிறிது நேரம் நடந்துகொண்டிருந்தது.

அப்போது, கரையில் மோதிய ஏரி அலைகளின் 'ஓ' என்ற சத்தம், கரையைப் பிளந்து கொண்டு அப்பால் விழுந்த பிரவாகத்தின் 'ஹோ' என்ற சத்தம், வர வர வலுத்துக் கொண்டிருந்த 'சோ' என்ற மழைச் சத்தம், 'விர்' என்று அடித்த புயற் காற்றில் மரங்கள் பிசாசுகளைப்போல் ஆடிய மர்மர சத்தம் ஆகிய இந்த நானாவிதப் பேரொலிகளையும் அடக்கிக் கொண்டு, "குண்டோதரா! குண்டோதரா!" என்ற குரல் கேட்டது.

துவந்த யுத்தம் செய்த இருவரும் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றார்கள். ஆனால் அவர்களுடைய கைப்பிடி மட்டும் நழுவவில்லை.

அது யாருடைய குரல் என்று குண்டோதரன் சிந்தித்தான். அசோகபுரத்திலிருந்து வரும்போது, தனக்குப் பின்னாலும் குதிரையடிச் சத்தம் கேட்டது அவனுக்கு நினைவு வந்தது. ஒரு வேளை, எஜமானர் சத்ருக்னர் தான் தொடர்ந்து வந்திருக்கிறாரோ?

மீண்டும் அந்த இடி முழக்கக் குரல் கேட்டது:—

"குண்டோதரா! குண்டோதரா! சண்டையை நிறுத்து! உடைப்பை அடைக்க முயலாதே! வீண் வேலை! ஓடிப்போய் ஆயனரையும் சிவகாமியையும் காப்பாற்று! நான் சொல்வது காதில் விழுகிறதா?"

"விழுந்தது, பிரபு! ஆக்ஞை!" என்று குண்டோதரன் கூவினான்.

அந்தக் குரல் தன் எஜமானர் சத்ருக்னருடைய குரல் அல்ல.—எஜமானருக்கும் எஜமானரின் குரல் அது என்று அறிந்து கொண்டான்.

குண்டோதரன் மறு குரல் கொடுத்தானோ, இல்லையோ, இன்னொரு பெரிய மின்னல்,—ஆயிரம் சூரியனின் ஒளியை யொத்த மின்னல், — கண்களைக் குருடாக்கிய மின்னல்,—மின்னியது! அடுத்தாற்போல் ஒரு பேரிடி இடிக்கப் போகிறதென்பதைக் குண்டோதரன் உணர்ந்தான். "இடி முழக்கம் கேட்ட நாகம்போல்" என்னும் பழமொழி அச்சமயம் அவனுக்கு ஞாபகம் வந்தது. பிக்ஷுவின் கை மணிக்கட்டுகளை அவன் இன்னும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

அவன் எதிர்பார்த்தது போலவே இடி இடித்தது. அண்டகடாகங்கள் எல்லாம் இடிந்து தடதடவென்று தலையிலே விழுவது போல இடித்தது. இடி இடித்து நின்றதும், குண்டோதரனுடைய காதில் அதற்கு முன்னால் கேட்டுக்கொண்டிருந்த அலைச் சத்தம் மழைச் சத்தம் எல்லாம் ஓய்ந்து, 'ஙொய்' என்ற சத்தம் மட்டும் ஒலித்துக் கொண்டிருந்தது. "ஐயோ! காது செவிடாகிவிட்டதா, என்ன?" என்று குண்டோதரன் ஒரு கணம் எண்ணமிட்டான். ஆனால், அதே இடிச் சத்தம் காரணமாக நாகத்தின் பிடி சிறிது தளர்ந்திருப்பது என்பதை அவன் தேக உணர்ச்சி சொல்லிற்று. அவ்வளவுதான்! தன்னுடைய வஜ்ர சரீரத்தின் முழு பலத்தையும் பிரயோகித்து, பிக்ஷுவை ஒரு தள்ளுத் தள்ளினான்.

ஏரிக் கரையின் அப்புறத்தில் செங்குத்தான பள்ளத்தில் பிக்ஷு உருண்டு

உருண்டு போய், கீழே உடைப்பு ஜலம் குளம்பறித்துக் கொண்டிருந்த இடத்தில் தொப்பென்று விழுந்ததைக் குண்டோதரன் கண்டான்.

உடனே, ஒரு பெரும் அதிசயம் அவனைப் பற்றிக்கொண்டது. மின்னல் இல்லாத சமயத்தில், புத்தபிக்ஷு கரையிலிருந்து உருண்டு குளத்திலே விழுந்தது அவனுக்கு எப்படித் தெரிந்தது? — ஆஹா! இதென்ன திடீரென்று விளக்குப் போட்டதுபோல் வெளிச்சம்? — குண்டோதரன் சுற்றுமுற்றும் பார்த்தான். சற்றுத் தூரத்தில் ஒரு பனைமரம் உச்சியில் பற்றி எரிவதைக் கண்டான். ஆ! அந்த மரத்தின்மேல் இடி விழுந்து தீப் பிடித்துக் கொண்டிருக்கிறது. வெளிச்சத்திற்குக் காரணம் அதுதான்.

பற்றி எரிந்த பனை மரத்தின் வெளிச்சத்தில், குண்டோதரன் இன்னும் சில காட்சிகளைக் கண்டான். அந்தப் பனை மரத்தைத் தாண்டி ஒரு குதிரை அதி வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. அந்தக் குதிரை மேலிருந்தவர்தான் சற்று முன்னால் தனக்குக் குரல் கொடுத்தவர் என்பதை உணர்ந்தான். அதோடு, ஏரியின் ஓரமாக இன்னொரு மரத்தில் புத்த பிக்ஷு ஏறி வந்த குதிரை கட்டப்பட்டிருப்பதையும் கண்டான். அதற்கு மேல் வேறொன்றையும் பார்க்கக் குண்டோதரன் விரும்பவில்லை. அந்தக் குதிரை இருந்த இடத்தை நோக்கிப் பாய்ந்து சென்றான். நடுவில் கால் சறுக்கிக் கீழே விழுந்ததைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை.

மரத்திலிருந்து குதிரையை அவிழ்த்து விட்டு, அதன் மேல் குண்டோதரன் ஏறினானோ இல்லையோ, பனைமரத்து வெளிச்சமும் அணைந்து விட்டது. அது வரையில் சிறு தூற்றலாக இருந்தது. அப்போது பெரு மழையாக மாறியது. எத்தனையோ பெரு மழையைக் குண்டோதரன் பார்த்ததுண்டு. ஆனால் அன்றைய இரவு பெய்த மழை மாதிரி அவன் பார்த்ததேயில்லை. வானம் பொத்துக்கொண்டு, அதற்கு மேலே தங்கியிருந்த தண்ணீர் கீழே தொட தொடவென்று கொட்டுவது போல் மழை கொட்டிற்று.

"ஆஹா! ஏரி உடைப்புக்கும் இந்தப் பெரு மழைக்கும் பொருத்தந்தான். நல்ல நாள் பார்த்துத்தான் நாகநந்தி திருபாற்கடலை வெட்டி விட்டார்!" என்று குண்டோதரன் எண்ணிக் கொண்டான்.

"எப்படியும் இந்த ஏரி வெள்ளம் அசோகபுரம் போய்ச் சேர்வதற்கு முன்னால், நாம் போய்ச் சேரவேண்டும்" என்று தீர்மானித்தான்.

ஆனால், அந்தத் தீர்மானத்தை அவனால் நிறைவேற்ற முடியவில்லை. அந்த இருளிலும் மழையிலும் குண்டோதரன் வழி கண்டு பிடித்துக் குதிரையை நடத்திக் கொண்டு அசோகபுரம் போய்ச் சேர்வதற்கு வெகு நேரம் முன்னாலேயே ஏரிக்கரை நெடுந் தூரத்துக்கு நெடுந் தூரம் உடைத்துக் கொண்டு வெள்ளம் பிரளயமாக ஓடத் தொடங்கி அசோகபுரத்தையும் அடைந்து விட்டது.

அத்தியாயம் 28

"மாமல்லர் எங்கே?"

குண்டோதரனுக்கு எச்சரிக்கை செய்து விட்டுக் குதிரை மேல் விரைந்து சென்ற மனிதரை அந்தப் பயங்கரமான புயலிலும் மழையிலும் நாமும் தொடர்ந்து செல்லுதல் இந்தச் சரித்திர வரலாற்றுக்கு அவசியமாயிருக்கிறது.

அந்த மனிதர் யார் என்பதை நேயர்கள் இதற்குள் ஊகித்துத் தெரிந்து கொண்டிருப்பார்கள். சிற்பம், சித்திரம், சங்கீதம் முதலான லலித கலைகளில் வல்லவராயிருந்தது போலவே யுத்த தந்திரக் கலையிலும் தேர்ச்சி பெற்றவரும், மாறு வேடம் பூணுவதில் நிகரற்ற சாமர்த்தியம் வாய்ந்தவரும், வாதாபியின் சமுத்திரம் போன்ற சைன்யத்தை வடபெண்ணைக் கரையில் எட்டு மாதம் நிறுத்தி வைத்தவருமான மகேந்திர பல்லவ சக்கரவர்த்திதான்.

காஞ்சிக் கோட்டையிலிருந்து வட திசையை நோக்கிக் கிளம்பியது முதல்

மகேந்திர பல்லவர் கையாண்ட யுத்த தந்திரங்கள் இதைப் போல் பல சரித்திரங்கள் எழுதுவதற்குப் போதுமானவையாகும். நாகநந்தி என்னும் புத்த பிக்ஷுவின் வேஷம் பூண்டிருந்தவர் புலிகேசியின் அந்தரங்க நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு முக்கியமான மனிதர் என்று அவர் ஊகித்ததைப் பரஞ்சோதி கொண்டுபோன ஓலையிலிருந்து உறுதிப்படுத்திக் கொண்டார். நாகநந்தியின் கையெழுத்தையும் இலச்சினை (முத்திரை)யையும் மேற்படி ஓலையிலிருந்து தெரிந்து கொண்டது அவருக்குப் பல விதங்களிலும் உபயோகமாயிருந்தது. அந்த உபயோகங்களில் ஒன்றுதான், பல்லவ ராஜ்யத்தின் எல்லைப்புறத்தில் காத்திருந்த கங்க நாட்டுத் துர்விநீதனை அவசரமாகக் காஞ்சியை நோக்கி முன்னேறச் செய்தது.

புலிகேசியின் மாபெரும் சைனியத்திற்குப் பின்வாங்கிக் காஞ்சிக் கோட்டைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த மகேந்திர பல்லவர், தாம் கோட்டைக்குள் புகுந்து கொள்வதற்கு முன்னால் ஒரு பெரும் வெற்றியடைந்து பல்லவ வீரர்களுக்கும் பல்லவ சாம்ராஜ்யத்துக் குடி மக்களுக்கும் உற்சாகம் ஊட்ட வேண்டுமென்று தீர்மானித்தார். அதற்காகத்தான் நாகநந்தி எழுதியதுபோல் துர்விநீதனுக்கு உடனே காஞ்சியை நோக்கி முன்னேறும்படி ஓலை எழுதி அனுப்பினார். அதைப் பார்த்துவிட்டே அவன் தன் சைனியத்துடன் விரைந்து வந்தான்.

போருக்குத் துடிதுடித்துக் கொண்டிருந்த குமார சக்கரவர்த்தியின் ஆத்திரத்துக்கு ஒரு போக்குக் காட்டவும் இந்த சந்தர்ப்பத்தைச் சக்கரவர்த்தி பயன்படுத்திக்கொள்ள விரும்பினார். சத்ருக்னன் மூலம் மாமல்லருக்குச் சக்கரவர்த்தி போர்ச் செய்தி சொல்லி அனுப்பியபோது சத்ருக்னன் அவநம்பிக்கையுடன் தலையை அசைத்ததை நேயர்கள் பார்த்திருக்கிறார்கள். மாமல்லரையே முழுதும் நம்பிச் சக்கரவர்த்தி விட்டுவிட மாட்டாரென்றும், வேறு ஏதோ தம் மனதில் யோசனை செய்து வைத்திருக்கிறார் என்றும் சத்ருக்னன் எண்ணினான்.

சத்ருக்னன் எண்ணியது உண்மையேயாகும். ஒரு யோசனை அல்ல; மகேந்திரருடைய உள்ளத்தில் எத்தனையோ யோசனைகள் குமுறிக்கொண்டிருந்தன. தம்மைவிடப் பன்மடங்கு படைபலம் படைத்த பகைவர்களை வெல்லுவதற்கு அவருடைய உள்ளம் எத்தனையோ யோசனைகளை இடைவிடாமல் செய்து கொண்டுதான் இருந்தது.

குண்டோதரன் கொடுத்த ஓலையைப் படித்ததும் நாகநந்திக்கு ஏற்பட்ட அளவில்லாத வியப்பையும் நேயர்கள் கவனித்திருப்பார்கள். அவருடைய ஓலையின்படி தான் முன்னேறி வருவதாகத் துர்விநீதன் அதில் எழுதியிருந்தபடியால், தாம் அத்தகைய ஓலை ஒன்றும் அனுப்பவில்லையே, இதில் ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறதென்று தீர்மானித்துக் கொண்டுதான், நாகநந்தி குண்டோதரன் கொண்டு வந்த குதிரையில் ஏறிச் சென்றார். புள்ளலூர்ப் போர்க்களத்தில் துர்விநீதனைச் சந்தித்தார். இதற்குள்ளாகக் கங்க நாட்டுச் சைனியம் தோல்வியடைந்து சேனா வீரர்கள் சிதறி ஓட ஆரம்பித்துவிட்டார்கள். அந்த நிலைமையில், துர்விநீதனுடைய உயிரைக் காப்பாற்றுவது ஒன்றுதான் தாம் செய்யக் கூடியது என்பதை உணர்ந்த நாகநந்தி, அவனைத் தம்முடன் அழைத்துக் கொண்டு தெற்குத் திசையை நோக்கி விரைந்து ஓடினார்.

இந்தப் புள்ளலூர் யுத்தத்தில் மாமல்லரையும் பரஞ்சோதியையுமே முழுதும் நம்பி மகேந்திர பல்லவர் விட்டு விடவில்லை. பொறுக்கி எடுத்த ஆயிரம் குதிரை வீரர்களுடன் புள்ளலூர்ப் போர்க்களத்துக்கு வந்து சேர்ந்தார். எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத சமயத்தில் வந்து தாக்கியபடியால், கங்கர் படை பீதியடைந்து ஓடலாயிற்று. ஆனால் இது மாமல்லருக்குத் திருப்திதரவில்லையென்பதையும் முன்னமே பார்த்தோம். புதிதாக வந்த குதிரைப் படைத் தலைவன் வஜ்ரபாகுவை மாமல்லர் தம் முன்னால் தருவித்துக் காரணம் கேட்க நினைத்தபோது, அந்த வீரன்தான் தம் தந்தை என்று

அறிந்தார். அதனால் அவருடைய ஆத்திரம் அதிகமாயிற்று. இந்த ஒரு போரிலாவது தம்மை முழுதும் நம்பி விட்டுவிடக் கூடாதா என்று தந்தையிடம் சண்டை பிடித்த பிறகு, சிதறி ஓடும் கங்கர் படையைத் துரத்திச் சென்று நிர்மூலமாக்க அனுமதி கேட்டார். ஒரு நிபந்தனையுடன் சக்கரவர்த்தி அதற்கு அனுமதி கொடுத்தார். அந்த நிபந்தனை என்னவென்றால், 'தென்பெண்ணை நதி வரையில் எதிரிகளைத் துரத்திச் செல்லலாம்; நதியைக் கடந்து அப்பால் போகக்கூடாது' என்பதுதான்.

எதிரிகளைத் துரத்த மாமல்லரைத் தென் திசைக்கு அனுப்பிவிட்டு மகேந்திரர் திரும்பிப் போய்விடவில்லையென்பதையும், அவரும் தெற்கேதான் வந்திருக்கிறார் என்பதையும் சென்ற அத்தியாயத்தில் பார்த்தோம்.

* * *

குண்டோதரனுக்கு எச்சரிக்கை செய்துவிட்டுக் கிளம்பிய மகேந்திர பல்லவர், இருட்டையும் புயலையும் பெருமழையையும் பொருட்படுத்தாமல் தென் கிழக்குத் திசையை நோக்கிச் சென்றார். உதயமாவதற்கு ஒரு ஜாமம் இருக்கும் போது, தென் பெண்ணை நதிக்கரையை அடைந்தார். அப்போது மழையின் வேகம் குறைந்து, வானத்தில் மேகங்கள் கலைந்து, சில நட்சத்திரங்கள்கூடத் தெரிந்தன. அந்த இலேசான வெளிச்சத்தில் நதியும் நதிக்கரையும் அப்போது அளித்த காட்சியை வர்ணிப்பது இயலாத காரியம். நதியிலே இரு கரையையும் தொட்டுக்கொண்டு 'ஹோ' என்று இரைந்து கொண்டு நுரையும் நொங்குமாகப் பிரவாகம் போய்க் கொண்டிருந்தது. நேற்று அல்லது முந்தைய தினமாயிருந்தால் அந்தப் பிரவாகம் சற்றுத் தூரத்திலிருந்து கண்ணுக்குத் தெரிந்திராது. அடர்ந்த தோப்புக்களினால் அது மறைக்கப்பட்டிருக்கும். ஆனால், இப்போதோ நதிக்கரையில் நெருங்கி வளர்ந்திருந்த அவ்வளவு விருட்சங்களும் முறிந்து விழுந்து கிடந்தன! அதனால் சற்றுத் தூரத்திலிருந்தே நதியின் பிரவாகத்தைப் பார்ப்பது இப்போது சாத்தியமாயிருந்தது.

மகேந்திரர் நதிக்கரையை நெருங்கியதும், முறிந்து விழுந்து கிடந்த மரங்களுக்கு மத்தியிலிருந்து குதிரை ஒன்று வெளியே வந்தது. அதன்மேல் இருந்தவன் சத்ருக்னன்.

"பிரபு! எத்தனையோ இரவுகள் கவலையுடன் நான் கழித்திருக்கிறேன். ஆனால் இன்றிரவு நான் பட்ட கவலை என்றைக்கும் பட்டதில்லை. தங்களைத் தனியே அனுப்பிய என் முட்டாள்தனத்தை நினைந்து நினைந்து வருந்தப்பட்டுக் கொண்டிருந்தேன்; இந்தப் புயலிலும் மழையிலும் எப்படி வந்து சேர்ந்தீர்கள்?" என்றான் சத்ருக்னன்.

"நானும் எத்தனையோ பயங்கரமான இரவுகளைப் பார்த்திருக்கிறேன், சத்ருக்னா! ஆனால் இன்றைய இரவைப் போன்ற பயங்கரத்தைக் கண்டதில்லை. நீ இங்கே காத்திருந்தது என்ன ஆயிற்று? பயன் உண்டா?" என்று மகேந்திர பல்லவர் கேட்டார்.

"ஆம், பிரபு! இங்கேதான் அவர்கள் நதியைக் கடந்து சென்றார்கள்."

"துர்விநீதன் இருந்தானா? பார்த்தாயா?"

"வெகு சமீபத்தில் நின்று பார்த்தேன். துர்விநீதன் யானைமீதிருந்தான். மற்றவர்கள் ஏழெட்டுப் படகுகளில் சென்றார்கள். ஆஹா! அப்போது புயல் ஆரம்பிக்கவில்லை. கிட்டத்தட்ட அவர்கள் அக்கரையை அடைந்தபோதுதான் காற்று ஆரம்பித்தது. ஒரு படகுகூடக் கவிழ்ந்துவிட்டது; கரை ஓரம் போய்விட்டபடியால் தட்டுத் தடுமாறிக் கரையேறிவிட்டார்கள். அப்போது நதியில் இவ்வளவு பிரவாகமும் இல்லை."

"நீ சொன்ன இடத்துக்குத்தான் அவர்கள் போயிருக்க வேண்டும். பின்னால் படகு ஒன்றும் விட்டுவிட்டுப் போகவில்லையா?"

"ஒரு படகை விட்டுப் போனார்கள். அது புத்த பிக்ஷுவுக்காகத்தான் இருக்கவேண்டும். அதை நீங்களும் நானும் எடுத்துக் கொண்டு போய்ப் பிக்ஷுவைத் திண்டாட விடலாமென்று நினைத்தேன். ஆனால் புயல் நம்மையும் திண்டாட விட்டுப் படகை அடித்துக் கொண்டு போய்விட்டது!"

"நல்லதாய்ப் போயிற்று, சத்ருக்னா! துர்விநீதனைத் தொடர இப்போது அவகாசமில்லை. அதைவிட முக்கியமான வேலை இருக்கிறது. மாமல்லனும் பரஞ்சோதியும் எங்கே தண்டு இறங்கியிருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டாயல்லவா?"

"கிழக்கே அரைக் காத தூரத்தில் இந்த நதிக் கரையிலேதான் இருக்கிறார்கள். ஆ! புயலில் என்ன பாடு பட்டார்களோ, தெரியவில்லை!"

"உடனே, அவர்கள் இருக்குமிடம் போகவேண்டும். பொழுது விடிவதற்குள் அவர்கள் தென் பெண்ணையைக் கடந்து விடவேண்டும். உன் குதிரையின் உடம்பில் சக்தி இன்னும் இருக்கிறதா, சத்ருக்னா? என் குதிரையிடம் எனக்கு நம்பிக்கையில்லை!"



"என் குதிரை இன்னும் போகும், பிரபு! இதன்மேல் ஏறிப்போங்கள். நான் இங்கேயே இருக்கிறேன்."

"கூடாது, சத்ருக்னா! இரண்டு பேருந்தான் போகவேண்டும்......"

"பிக்ஷு இங்கு வந்தால்......?"

"பிக்ஷு இங்கு வரமாட்டார், சத்ருக்னா! நிச்சயமாக இன்றைக்கு காலைக்கு வரமாட்டார்."

"ஏன் பிரபு?"

"உன் சீடன் குண்டோதரன் அவரைத் தூக்கித் திருப்பாற் கடல் உடைப்பில் போட்டு விட்டான்!"

"என்ன? என்ன?"

"அதோ அந்தச் சத்தம் உன்காதில் விழுகிறதா, சத்ருக்னா?"

சத்ருக்னன் உற்றுக்கேட்டு விட்டு, "ஆம், பிரபு! சமுத்திர கோஷம் மாதிரி இருக்கிறது? மறுபடியும் மழையா?" என்றான்.

"இல்லை, இல்லை. மழைச் சத்தம் அப்படியிராது. திருப்பாற் கடல் உடைத்துக் கொண்டு விட்டது. நாளைப் பொழுது போவதற்குள் வராக நதியிலிருந்து தென் பெண்ணை வரையில் ஒரே பிரளயந்தான்!"

"ஐயோ!"

"வா! போகலாம்! மாமல்லனையும் பரஞ்சோதியையும் எச்சரிக்கலாம்!"



"சுவாமி, குண்டோதரன்?"

"குண்டோதரன் உடைப்பை அடைக்க முயற்சி செய்தான். 'அது முடியாத காரியம்; ஓடிப்போய் ஆயனரையும் சிவகாமியையும் காப்பாற்று' என்று எச்சரிக்கை செய்து விட்டு வந்தேன். என்ன செய்தானோ?"

"ஆஹா! அவர்கள் வேறு அகப்பட்டுக் கொண்டார்களா? இன்

றைக்கு உண்மையிலே மிகப் பயங்கரமான இரவுதான்!'' என்று சத்ருக்னன் கூறிக் குதிரையைப் போகும்படி முடுக்கினான்.

'' இந்தப் பயங்கரமான இரவினாலும் ஒரு பயன் கிடைத்தது, சத்ருக்னா! புலிகேசியை வெல்வதற்கு இன்னொரு ஆயுதத்தைக் கண்டு பிடித்தேன் '' என்றார் சக்கரவர்த்தி.

'' பிரபு! தாங்கள் உண்மையிலேயே விசித்திர சித்தர்தான்!'' என்றான் சத்ருக்னன்.

இரு குதிரைகளும் நதிக்கரையோரமாகக் கிழக்குத் திசையை நோக்கிச் சென்றன. வழியெல்லாம் முறிந்து கிடந்த மரங்களைத் தாண்டிப் போவதில் அவர்களுக்கு எவ்வளவோ சிரமம் ஏற்பட்டது. எனினும், பொழுது புலரும் சமயத்தில் அவர்கள் பல்லவ சைன்னியத்தின் பாசறையை வந்தடைந்தார்கள். அல்லோல கல்லோலமாய்க் கிடந்த அந்தப் பாசறையில் நுழைந்ததும் வீரர்களுக் கெல்லாம் வந்திருப்பவர் மகேந்திர சக்கரவர்த்தி என்பது தெரிந்து, பலமான ஜயகோஷம் எழுந்தது.

மகேந்திரர், தளபதி பரஞ்சோதியைப் பார்த்தவுடனே, அவருக்குப் பேச இடம் கொடாமல், '' தளபதி! உடனே கிளம்ப வேண்டும். இன்னும் ஒரு நாழிகைக்குள் தென் பெண்ணையைக் கடந்து அக்கரை போக வேண்டும். நீந்தத் தெரிந்தவர்கள் நீந்தட்டும். நீந்தத் தெரியாதவர்கள் மரம் மட்டை எதையாவது பிடித்துக் கொள்ளட்டும்! குதிரைகள், யானைகள் எல்லாவற்றையும் ஆற்றில் அடித்து விடுங்கள். ஆயுதங்கள், சாமக்ரியைகள் எது போனாலும் போகட்டும், மனிதர்கள் பிழைத்தால் போதும்!'' என்றார்.

இந்த விசித்திரமான கட்டளையைக் கேட்டுத் திகைத்து நின்ற பரஞ்சோதியைப் பார்த்து, '' ஓஹோ! காரணம் சொல்லவில்லையா? திருப்பாற் கடல் உடைத்துக் கொண்டு விட்டது! அதோ கோஷத்தைக் கேளும், இன்னும் ஒரு ஜாமத்தில் வெள்ளம் இங்கே வந்துவிடும்!'' என்றார்.

பரஞ்சோதியின் முகத்தில் அப்போது சொல்ல முடியாத பீதி தோன்றியது. '' பிரபு!...பிரபு!...'' என்று மேலே பேச முடியாமல் அவர் தயங்கி நிற்பதைக் கண்டு, '' என்ன விசேஷம், தளபதி! மாமல்லன் எங்கே?'' என்று சக்கரவர்த்தி கேட்டார்.

'' நேற்று இருட்டிய பிறகு, அசோகபுரத்துக்குப் புறப்பட்டுப் போனார், பிரபு! அங்கே ... அங்கே ...'' என்று மேலும் பரஞ்சோதி தயங்கினான்.

'' தெரிந்து கொண்டேன், தளபதி! அசோகபுரத்திலே ஆயனர் இருக்கிறார், அந்தச் சிற்ப சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்காகக் குமார சக்கரவர்த்தி புறப்பட்டுப் போனார்!... நல்லது; மாமல்லனைக் காப்பாற்றும் பொறுப்பு இனி நமக்கு இல்லை; அது ஏகாம்பர நாதனுடைய பொறுப்பு! இங்குள்ள மற்ற வீரர்களை நாம் காப்பாற்றுவோம்!'' என்றார் மகேந்திரர்.

* * *

மாமல்லரைப் பற்றிய அநாவசியமான கவலை நமது வாசகர்களையும் பீடிக்காமலிருக்கும் பொருட்டு, அச்சமயம் அவர் எங்கே இருந்தார் என்பதைச் சொல்லிவிட விரும்புகிறோம்.

கிழக்கு வெளுத்துப் பொழுது புலரத் தொடங்கியிருந்த அதே நேரத்தில், அசோகபுரத்து புத்த விஹாரத்தின் அருகில், மாமல்லரும் அவர் ஏறியிருந்த குதிரையும் எதிர் வெள்ளத்தில் நீந்தித் திணறிக் கொண்டிருந்தார்கள்.

விஹாரத்தின் மேல் தளத்தில், ஆயனரும் சிவகாமியும் அத்தையும் நின்று ஆவலுடன் அவருடைய வருகையை நோக்கிக் கொண்டிருந்தனர். ரதியும் சுகப் பிரம்ம ரிஷியும்கூட அங்கே காணப்பட்டனர்.

அதே சமயத்தில் நீர் சூழ்ந்த அந்தப் புத்த விஹாரத்தின் ஓரமாகப் பானைத் தெப்பத்தில் குண்டோதரன் வந்து கொண்டிருந்தான்.

தெருவிலும் மற்றும் சுற்றுப் புறமெங்கும் வெள்ளம் சுழித்துச் சுழித்து வேகமாக ஓடிக் கொண்டிருந்ததுடன் கணத்துக்குக் கணம் பெருகிக் கொண்டுமிருந்தது.


சின்னப்பா
கண்ணாம்பா
கிருஷ்ணன்..
மதுரம்............
சரோஜா........
மீனலோசனி
JUPITER PICTURES
மஹா
மாயா
S.I.P
ரிலீஸ்
டைரக்ஷன் : T.R.ரகுநாத் & இளங்கோவன் • ஸ்டுடியோ: நியூடோன்

பீமனும் ஹனுமானும்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

"அருச்சுனன் இல்லாமல் இந்தக் காம்யக வனம் எனக்கு அழகாகவே காணப்படவில்லை. சவ்யசாசியைக் காணாமல் எனக்குச் சந்தோஷமில்லை" என்று அடிக்கடி திரௌபதி சொல்லி வந்தாள். திவ்யாஸ்திரங்களைப் பெறுவதற்காக அருச்சுனன் இமயமலையில் தவம் செய்து கொண்டிருந்த காலத்தில் பாண்டவர்களுக்கும் பாஞ்சாலிக்கும் வனவாசம் மிகக் கஷ்டமாயிருந்தது.

பாஞ்சாலியைப் பார்த்து, பீமசேனன் "கல்யாணி! நீ அருச்சுனனை நினைத்துச் சொல்லும் சொற்கள் என் உள்ளத்தில் அமிர்தம்போல் ஆனந்தமாய்ப் பாய்கின்றன. தம்பியைக் காணாத என் கண்களுக்கும் இந்த அழகிய வனம் ஒளியிழந்த இருட்டாகக் காணப்படுகிறது. பல்குனனைப் பாராமல் என் மனத்தில் அமைதி இல்லை. எல்லாத் திசைகளும் இருட்டில் மூடப்பட்டது போல் தோன்றுகிறது. சகதேவா, உனக்கு எப்படி இருக்கிறது?" என்றான்.

"அண்ணனில்லாத இந்த ஆசிரமம் சூனியமாக இருக்கிறது. இந்த இடத்தை விட்டு வேறு எங்கேயாவது போய் அவனை மறக்கப் பார்க்கலாம்" என்றான் சகதேவன்.


யுதிஷ்டிரன், புரோகிதர் தௌம்மியரைப் பார்த்து, "அஸ்திரங்களைப் பெறுவதற்காகத் தம்பியைத் தேசாந்தரம் அனுப்பினேன். வீரனும் சமர்த்தனுமான அவன் இன்னும் திரும்பவில்லை. பீஷ்ம துரோணர்களையும் கிருபரையும் அசுவத்தாமரையும் ஜெயிக்கக் கூடிய அஸ்திரங்களை தேவராஜனிடமிருந்து அடைவதற்காக அவனை இமயமலைக்கு அனுப்பினேன். பீஷ்மரும் துரோணரும் கிருபரும் திருதராஷ்டிர புத்திரர்களின் பட்சத்தில் நின்று யுத்தம் செய்வார்கள் என்பது நிச்சயம். கர்ணனும் திவ்ய அஸ்திரங்களை அறிந்த மகா ரதன். அவன் அருச்சுனனோடு போர் புரிவதில் அதிக விருப்பம் கொண்டவன். அருச்சுனன் இந்திரனை நேரில் கண்டு அஸ்திரங்களைப் பெற்று வந்தானேயாகில் இந்த மகா ரதர்களை எதிர்த்து வெற்றி பெறலாம் என்று ஆசைப்பட்டு அவனைத் தேசாந்தரம் அனுப்பினேன். மிகவும் கஷ்டமான காரியத்திற்கு அவனை அனுப்பிவிட்டு நாங்கள் இங்கே சுகமாக இருக்கிறோம். அவன் பிரிவை எங்களால் பொறுக்க முடியவில்லை. அவனோடு இருந்த இந்த இடத்தை விட்டு வேறு எங்கேயாவது போய் அவன் பிரிவை மறக்கப் பார்க்கலாம் என்று எண்ணுகிறேன். போகும்படியான இடங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும்" என்று புரோகிதரைக் கேட்டான்.

தௌம்மியர் அநேக வனங்களையும் புண்ணிய தீர்த்தங்களையும் பற்றிச் சொன்னார். அந்த இடங்களுக்குச் சென்று அருச்சுனன் பிரிவை ஒருவாறு ஆற்றிக் கொள்ளலாம் என்று எல்லாரும் புறப்பட்டார்கள். பல ஸ்தலங்களுக்குச் சென்று, அந்த இடங்களின் புண்ணிய கதைகளைக் கேட்டுக் கொண்டு பல ஆண்டுகள் கழித்தனர். சில இடங்களில் மலைகள் ஏறியும் காடுகள் தாண்டியும் சிரமம் தாங்காமல் திரௌபதி களைத்து விடுவாள். பீமன் அந்தச் சமயங்களில் எல்லாருக்கும் தைரியம் உண்டாகும்படியான சேவை செய்து வந்தான். அவனுக்குத் துணையாக சில சமயம் பீமனுடைய அசுர மனைவியின் மகன் கடோத்கஜனும் வந்து உதவுவான்.

* * *

இமயமலைப் பிரதேசத்தில் பல இடங்களைப் பார்த்துக் கொண்டே போனபோது, ஒரு இடத்தில் பயங்கரமான காட்டில் பாதை மிகக் கடினமாயிருந்தது. அதைக் கண்டு கவலையுற்ற யுதிஷ்டிரன் பீமசேனனைப் பார்த்து, "குந்திநந்தன! திரௌபதி இந்த இடத்தில் நடந்து வருவது கஷ்டம். நானும் நகுலனும் லோமச ரிஷியும் போவோம். நீ சகதேவனுடன் ஜாக்கிரதையாகத் திரௌபதியைப் பாதுகாத்துக்கொண்டு கங்கா துவாரத்தில் வசித்துக் கொண்டிரு. திரும்பிச் சென்று அந்த இடத்தில் நாங்கள் வரும் வரையில் இருப்பாயாக" என்றான்.

"மகாராஜாவே! திரௌபதி இதற்கு



ப்புக்கொள்ள மாட்டான். அருச்சுனன் ஒருவனுடைய பிரிவே உமக்கு இவ்வளவு வருத்தம் தந்திருக்க, சகதேவனையும் னையும் திரௌபதியையும் பாரா ல் நீர் மன வருத்தம் தாங்க மாட்டீர். ராக்ஷசர்களும் மிருகங்களும் நிறைந்த இந்தக் காட்டில் உம்மைத் தனியாக அனுப்ப நான் ஒரு பொழுதும் ம்மதிக்க மாட்டேன். பாஞ்சாலியும் இதற்கு ஒப்ப மாட்டாள். அவள் டக்க முடியாத இடங்களில் நான் அவளைத் தூக்கிச் செல்வேன். நகுல சகதேவர்களையும் நான் தூக்கிச் செல் வேன். நீர் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்" என்றான் பீமசேனன்.

இவ்வாறு தம்பி சொன்னதைக் கேட்ட தருமபுத்திரன் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டு, "பீமனே! உன்னுடைய தேகபலம் எப்பொழுதும் வளர்ந்து கொண்டே போகக்கடவது!" என்று ஆசீர்வதித்தான்.

பாஞ்சாலி சிரித்துக் கொண்டு தரும ராஜனைப் பார்த்து, "என்னை யாரும் தூக்கிச் செல்ல வேண்டியதில்லை. நான் நடப்பேன். என்னைப் பற்றிக் கவலை வேண்டாம்!" என்றாள்.

* * *

இமயமலைப் பிராந்தியத்தில் சுபாகுவின் தேசமாகிய குளிந்த நாட்டை அடைந்தார்கள். அவ்விடம் அந்த அரசன் செய்த மரியாதைகளைப் பெற்றுக் கொண்டு களைப்பாறினார்கள். அதன் பிறகு மிக ரம்மியமான நாராயணாசிரம வனத்தை அடைந்தார்கள். அந்த இடத்தில் சில நாள் தங்கினார்கள்.

* * *

ஒரு நாள் வடகிழக்கிலிருந்து வீசிக் கொண்டிருந்த காற்றில் அடிக்கப்பட்டு ஒரு திவ்வியமான மலர் பாஞ்சாலியிடம் வந்து விழுந்தது. அந்தப் புஷ்பத்தை திரௌபதி கையில் எடுத்து அதன் அழகிலும் வாசனையாலும் பரவசமானாள்.

"பீமசேனா! இந்த மலரைப் பார். என்ன வாசனை! என்ன அழகு! இதை தர்மபுத்திரனுக்குக் கொடுப்பேன். நீ சென்று இந்த வகையைச் சேர்ந்த இன்னும் சில புஷ்பங்களைப் பறித்துக் கொண்டு வா! நம்முடைய காம்யக வனத்தில் இந்தச் செடியைக் கொண்டு போய் வளர்க்க வேண்டும்" என்றாள். இவ்வாறு பீமனுக்குச் சொல்லிவிட்டுத் திரௌபதி புஷ்பத்தை எடுத்துக் கொண்டு யுதிஷ்டிரனிடம் ஓடினாள்.

* * *

காதலி சொன்ன சொல்லால் ஏவப்பட்டு பீமன் அந்த மலர் உண்டான செடியைத் தேடிக்கொண்டு சென்றான். மலரின் வாசனையைக் காற்றில் முகர்ந்து கொண்டே அந்தத் திக்கில் வெகு தூரம் தனியாகப் போனான். வழியில் அநேகக் காட்டு மிருகங்களைக் கண்டாலும் லட்சியம் செய்யாமல் சென்றான்.

பருவதத் தாழ்வரையில் ஒரு பெரிய வாழைமரச் சோலையை அடைந்தான். சோலையின் நடுவில் வழியை அடைத்துக் கொண்டு நெருப்பைப் போல் பிரகாசித்துக்கொண்டு ஒரு வானரம் தனிமையாகப் படுத்திருப்பதைக் கண்ட பீமன் தன்னையும் அறியாமல் ஒரு பெரிய சத்தம் போட்டான்.

வானரம், தன் கண்களைச் சிறிது திறந்து அலட்சியமாக பீமனைப்பார்த்து, "எனக்கு உடம்பு சரியாக இல்லை. படுத்திருக்கிறேன். நீ ஏன் என்னை எழுப்பினாய்? மனிதனாகிய நீ அறிவு படைத்திருக்கிறாய். விலங்குகளாகிய எங்களுக்குப் பகுத்தறிவு இல்லை. பகுத்தறிவு படைத்திருக்கும் மனிதர்கள் பிராணிகளிடம் கருணை காட்டுவது முறை. உன்னைப் போன்ற புத்திமான்கள் மிருகங்களை இம்சிக்கலாகாது. நீ தருமத்தை அறியவில்லை போலிருக்கிறது. நீ யார்? எங்கே போக வந்திருக்கிறாய்? இந்த மலையில் இதற்கு மேல் செல்ல முடியாது. இது தேவலோகத்திற்குப் போகும் பாதை. மனிதர்கள் இதைத் தாண்டிப் போக முடியாது. உன் வரவு நல் வரவு ஆகுக. நீ இங்கே



பழங்களைப் புசித்து விட்டுத் திரும்பு. நான் சொல்வதைக் கேள்'' என்றது வானரம்.

பீமனுக்குக் கோபம் பொங்கிற்று. "நீ யார்? வானர சரீரத்தை அடைந்து இவ்வளவு பேசுகிறாய்! நான் க்ஷத்திரியன். குரு வம்சத்தில் பிறந்த வீரன். குந்தி தேவியின் மகன். வாயு புத்திரன் என்று என்னை அறிவாயாக. என்னைத் தடுக்காதே. வழியை விட்டு விலகு!'' என்றான்.

குரங்கு இந்தப் பேச்சைக் கேட்டுக் கொஞ்சம் புன்சிரிப்புச் செய்து, "நான் ஒரு குரங்கு. இந்த வழியில் சென்றாயானால் நீ நாசத்தை அடைவாய்'' என்றது.

பீமசேனன், "வானரமே! நான் நாசமடைந்தாலும் சரி, ஏதானாலும் சரி, உன்னை நான் கேட்கவில்லை. எழுந்து வழியை விட்டுப் போ. எனக்குக் கோபம் உண்டாக்க வேண்டாம்'' என்றான்.

"எனக்கு எழுந்திருக்கச் சக்தி இல்லை. நான் கிழக் குரங்கு. அவசியம் போக வேண்டுமானால் என்னைத் தாண்டிச் செல்வாயாக'' என்றது வானரம்.

"பிராணியைத் தாண்டிச் செல்லலாகாது என்பது சாத்திரம். நான் உன்னைத் தாண்டிச் செல்ல மாட்டேன். இல்லாவிடில் ஹனுமான் சமுத்திரத்தைத் தாண்டியது போல் உன்னையும் மலையையும் ஒரே பாய்ச்சலாகத் தாவிச் சென்றிருப்பேன்'' என்றான் பீமன்.

"நர சிரேஷ்டனே! கடலைத் தாண்டிய அந்த ஹனுமான் யார்? உனக்குத் தெரிந்திருந்தால் எனக்குச் சொல்ல வேண்டும்'' என்றது வானரம்.

"ராம பத்தினியைத் தேடுவதற்காக நூறு யோஜனை அகலமுள்ள கடலைத் தாண்டியவனும், எனக்கு அண்ணனுமான ஹனுமானை, உனக்குத் தெரியாதா? பலத்திலும் பராக்கிரமத்திலும் நான் அவனுக்குச் சமானமானவேன்! ஒரு காரியமாக நான் இங்கே வந்திருக்கிறேன். வழியை விடு, எழுந்திரு; நான் சொன்னதைக் கேளாயாகில் உன்னை யம லோகத்துக்கு அனுப்புவேன்'' என்று பீமன் வானரத்தை அதட்டினான்.

"வீரனே! தோஷமற்றவனே! கோபம் தணிவாயாக! முதுமையால் எனக்கு எழுந்திருக்கச் சக்தி இல்லை. என்னைத் தாண்டிச் செல்ல உனக்கு ஆட்சேபனை இருந்தால் என் வாலைக் கருணை கொண்டு இந்த வாலை நகர்த்தி விட்டுச் செல்வாயாக'' என்றது வானரம்.

தன்னுடைய புஜபலத்தில் கர்வம் கொண்ட பீமன் இவ்வாறு சொல்லப் பட்டவுடன், "இந்தக் குரங்கை வாலைப் பிடித்து இழுத்து அப்புறம் தள்ளுவேன்'' என்று எண்ணி அதனுடைய வாலைப் பிடித்தான். வாலை அசைப்பதற்கும் முடியவில்லை. பீமன் வியப்படைந்தான்! இரு கைகளையும் கொண்டு இழுத்துப் பார்த்தான். புருவங்கள் நெளிந்து விழி பிதுங்கி உடல் வியர்த்தது. வாலைத் தூக்கக்கூட முடியவில்லை. வெட்கப்பட்டுத் தலை குனிந்து நின்றான். "நீர் யார்? என்னைப் பொறுக்க வேண்டும். நீர் சித்தரா? தேவரா? கந்தர்வரா? நீர் யார்? சிஷ்யன் கேட்கிறேன்; சரணம்'' என்றான் பீமன். பலவானைக் கண்டால் பீமனுக்கு ரொம்ப பக்தி.

"பாண்டவ வீரனே! தாமரைக் கண்ணனே! சர்வ லோகங்களுக்கும் பிராணாதாரமான வாயுவின் மகன் ஹனுமான் நான்தான். தம்பி, பீம! யக்ஷரும் ராக்ஷதர்களும் இருக்கும் இந்த வழியில் நீ சென்றால் ஆபத்துக்கு ஆளாவாய் என்று உன்னை நான் தடுத்தேன். இது தேவலோகம் போகும் வழி. இதில் மனிதர்கள் செல்ல முடியாது. நீ தேடி வந்த சௌகந்திகச் செடி இருக்கும் நீரோடையும் மடுவும் அதோ பார்!'' என்றான் ஹனுமான்.

"வானர சிரேஷ்டரே! உம்மைக் கண்டேனாதலால் என்னைக் காட்டிலும் பாக்கியசாலி யாருமில்லை. உம்முடைய கடல் தாண்டிய வடிவத்தைப் பார்க்க ஆசைப் படுகிறேன்'' என்று சொல்லி பீமன் ஹனுமானை நமஸ்கரித்தான்.

ஹனுமான் நகைத்துத் தன்னுடைய உருவத்தை விருத்தி செய்து கொண்டு இரண்டாவது மலைபோலே திசைகளை வியாபித்து நின்றான். பீமசேனன் அதுவரையில் கேள்விப்பட்டு மகிழ்ந்து வந்த தன் தமையனாரின் திவ்ய ரூபத்தை இப்போது நேரில் பார்த்து ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தான். சூரியனைப்போல் ஜொலிக்கும் அந்தப் பிரகாசத்தைத் தாங்காமல் கண்ணை மூடிக் கொண்டான்.

"பீமனே! இதற்கு மேல் வளர்ந்து உனக்குக் காட்ட இது சமயமல்ல; பகைவரின் முன் என் சரீரம் இன்னும் பெரிதாக வளரும்'' என்றான்.

பிறகு ஹனுமான் தன் வடிவத்தை முன் போல் சுருக்கிக்கொண்டு பீமசேனனை அன்போடு தழுவிக் கொண்டான். மருதியால் ஆலிங்கனம்

செய்யப்பட்டு பீமனுடைய உடலில் இருந்த சிரமம் எல்லாம் நீங்கி அவனுக்கு முன்னைவிட அதிக பலம் உண்டாயிற்று என்கிறார் வியாச பகவான்.

"வீரனே! உன் இருப்பிடத்துக்குப் போ! சமயம் நேரிட்டபோது என்னை நினைக்கக் கடவாய். உன்னுடைய நானிட தேகத்தை நான் ஆலிங்கனம் செய்தபோது முன் நாட்களில் ஸ்ரீ ராமனுடைய தேகத்தைத் தீண்டியதுபோல் மகிழ்ச்சி யடைந்தேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றான் அனுமான்.

"வானர சிரேஷ்டரே! உம்மை நான் கண்டதால் பாண்டவர்கள் எல்லாருமே பாக்கிய சாலிகள் ஆனோம். உம்முடைய பலத்தினால் நாங்கள் எல்லாச் சத்துருக்களையும் ஜெயிப்போம்" என்றான் பீமன்.

"நீ யுத்தத்தில் எப்போது சிம்மநாதம் செய்வாயோ, அப்போது என்னுடைய குரலும் உன்னுடைய சத்தத்துடன் சேர்ந்து பகைவர்களை நடுங்கச் செய்யும். உன் தம்பி அருச்சுனனுடைய தேரின் கொடியில் நான் இருப்பேன். உங்களுக்கு வெற்றி உண்டாகும்" என்று தம்பியை அண்ணனாகிய மாருதி ஆசீர்வதித்தான். பக்கத்தில் நீர் ஓடையில் பீமன் தேடி வந்த சௌகந்திக மலர்களையும் காண்பித்தான்.

அதைக் கண்டதும் வனவாசத்தால் பீடிக்கப்பட்டு வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் திரௌபதியிடம் பீமன் மனம் சென்றது. புஷ்பங்களைப் பறித்துக் கொண்டு திரும்பி வேகமாகச் சென்றான்.



"இன்றைக்காவது பூ வாங்கித் தரப் போகிறீர்களா, இல்லையா?"

"இதோ பார்! இந்தக் காளானைக் கண்டிப் போட்டு பூவா தலையா பார்த்து விடலாம். விழுந்தால் உனக்குப் பூ உண்டு. தலை விழுந்தால், வெறுந் தலைதான், பூ கிடையாது!"

பல சரக்கு

ஒரு பிரசித்தி பெற்ற அமெரிக்கச் சித்திரக்காரரும், ஹாஸ்ய நடிகரான சார்லி சாப்ளினும் ஒருசமயம் சேர்ந்தாற் போல் ரயில் பிரயாணம் செய்ய நேரிட்டது. அப்பொழுது, சித்திரக்காரர் எதிரிலுள்ள இயற்கைக் காட்சிகளை ஓயாமல் புகழ்ந்து கொண்டு வந்தார். "இந்த சூரியாஸ்தமனக் காட்சியைப் பாருங்கள்! என்ன அழகு! என்ன அற்புதம்!" என்று வர்ணித்து விட்டு, "இதை இரண்டு நிமிஷம் பார்ப்பதற்கு 100 பவுன்கூடக் கொடுக்கலாமே!" என்றார். சட்டென்று சார்லி சாப்ளின் அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடித்து இழுத்தார். "ரயிலை நிறுத்தி விட்டேன்! பேஷாகப் பாருங்கள்! இரண்டு நிமிஷத்துக்கு ஐந்து நிமிஷமாகப் பாருங்கள்! பார்த்து விட்டு, 100 பவுன் கொடுக்க வேண்டாம்; — ரயிலை நிறுத்தியதற்கு 5 பவுன் அபராதம் கொடுத்தால் போதும்!" என்றார் சார்லி சாப்ளின்!



★

ஒருசமயம் திருவாங்கூர் திவான் சச்சிவோத்தம ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்கள் இங்கிலாந்துக்கு விஜயம் செய்தார். அப்போது, தம்முடைய சமையற்காரரையும் அழைத்துச் சென்றிருந்தார். ஸி. பி. யைப் போலவே சமையற்காரரும் கம்பீர ஆகிருதி வாய்ந்தவர். இதனால் வரவேற்கக் காத்திருந்த நண்பர்களுக்கு யார் ஸி. பி. என்ற சந்தேகம் வந்து விட்டது! யாருக்கு மாலை போடுவது என்று தெரியாமல் அவசரத்தை முன்னிட்டு ஸி. பி. யின் கழுத்திலேயே மாலையைப் போட்டு விட்டனர். அப்போதும் சந்தேகம் தீராமல் போகவே, அவர்களில் ஒருவர் சமையற்காரரிடம் சென்று, அசட்டுச் சிரிப்புடன், "தங்களுக்குப் பதிலாக அவரை ஸி. பி. என்று நினைத்துத் தவறுதலாக மாலை போட்டு விட்டோம்" என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டாராம்!



பர்மா போர்முனையிலுள்ள ஒரு அமெரிக்க ஸோல்ஜர் தன் தாயாருக்குப் பின்வரும் கடிதம் எழுதினாராம்:


"இங்கே உள்ள காடுகளில் பயங்கரமான புலிகள் நடமாடுகின்றன. வெள்ளை வர்ணம் பூசின கைத்தடி ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு போனால் புலி அருகில் அண்டாது என்று எனக்குச் சொன்னார்கள். ஆனால் இந்த உபாயத்தை நான் கையாளவில்லை. ஏன் என்றால், அந்தத் தடியை எடுத்துக்கொண்டு எத்தனை மைல் வேகத்தில் ஓட்டம் பிடிக்க வேண்டும் என்று என்னிடம் ஒருவரும் சொல்லவில்லை!"




★

முஸோலினியைப் பற்றி ரோம் நகரில் பின்வரும் கதை உலாவி வருகிறது:—

முஸோலினி ஒரு நாள் பரலோகம் போய்ச் சேர்ந்தார். அங்கே அவர் காலம் சென்ற இதாலி தேசத்துப் பிரமுகர்களாகிய ஸீஸர், மைக்கவலி முதலியோரைச் சந்தித்தார். அப்பொழுது ஒரு தூதன் வந்து கடவுள் அந்தப் பக்கம் வரப் போவதாகத் தெரிவித்தான். இதைக் கேட்ட ஸீஸர் முதலியோர் எழுந்து நின்றார்கள். ஆனால், முஸோலினி மட்டும் எழுந்திராமல், அகம்பாவத்துடன் உட்கார்ந்திருந்தார். கடவுளும் அருகில் வந்து விட்டார். மற்றவர்களுக்கு என்ன செய்கிறதென்று தெரியவில்லை. அப்பொழுது, பெரிய ராஜதந்திரியான மைக்கவலி, முஸோலினி அருகில் சென்று ஏதோ கூறினார். சட்டென்று முஸோலினி எழுந்து வெகு விரைப்பாக நின்றார்! கடவுள் அவர்களைத் தாண்டி அப்பால் சென்றதும், எல்லோருக்கும் மே ஆறுதல் ஏற்பட்டது. மைக்கவலி என்ன சொன்னார் என்று நினைக்கிறீர்கள்? "வருகிறது கடவுள் அல்ல! போட்டோ பிடிப்பவர்!" என்றுதான்.



ஏழ்மையில் இன்பம்





கி. ரா. கோபாலன்

சக்கரம் 'கர கர' வென்று வேகமாகச் சுழன்று கொண்டிருந்தது. நிமிஷத்திற்கு ஒரு சிருஷ்டி! பக்கத்திலிருந்த மண் குவியலிலிருந்து கொஞ்சம் எடுத்து வைப்பான். தொழிலில்தான் என்ன அசிரத்தை? கைமட்டும் சுறுசுறுப்பாக வேலையில் முனைந்திருக்கிறது.

"என்ன வேலாயி, அப்படி பொம்மை கணக்கா நின்னுகிட்டுப் பாக்கிறே? முளிச்ச விளி கொட்டாமே?" என்றான் சோமு தன் பக்கத்தில் நிற்கும் ஒரு இள மங்கையைப் பார்த்து. அவனுடைய கண் பார்வை முழுதும் அந்தப் பெண்ணின் மீதே ஆரோகணித்திருந்தது.

"இல்லே. ஒரு குண்டு சட்டி வாங்க வந்தேன். அப்படியே கொஞ்சம் வேடிக்கை பாக்கலாம்னு......" என்று தன் பார்வையை வேறு பக்கம் திருப்பினள் வேலாயி.

"சரிதான்; குண்டு சட்டி தானே வேணும்? பார்த்து நல்லதா ஒண்ணு எடுத்துக்க. இல்லாட்டி நான் வரட்டுமா?"

"இல்லே, நானே எடுத்துக்கிறேன்" என்று சொல்லி அங்கு அடுக்கி வைத்திருந்த சட்டிகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தாள் வேலாயி.

சிறிது நேரம் கழித்து, "என்ன ஒரு நாளியாப் பொட்டறே, உருப்படியா ஒண்ணும் அகப்படல்லியா? இரு, நான் வரேன்" என்று கைக் களிமண்ணை வழித்தெறிந்து விட்டு எழுந்தான் சோமு.

அடுக்கி வைத்திருந்த பானைகளில் ஒன்றை எடுத்து, "இதோ பாரு! இதை சேத்துத்தான் காளவாயிலிருந்து எடுத்தேன். வெண்கலம் மாதிரி" என்று தட்டிக் காண்பித்து விட்டுச் சிரித்துக்கொண்டே, "ஒரு புருசன் பெஞ்சாதி ஆக்கித்தின்ன சரியாயிருக்கும்" என்றான்.

வேலாயி வெட்கத்துடன் அதை வாங்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

அவள் சட்டிக்குக் காசு கொடுக்க வேண்டுமென்பதை ஞாபகப் படுத்துகிறவன் போல், "என்ன? காசு இப்ப இல்லியா?" என்றான் சோமு.

வேலாயி சட்டென்று நின்று, "எத்தினி?" என்றாள்.

"எல்லாருக்கும் ஒரு அணான்னு கொடுக்கிறேன். நீ காலணாக் காசு கொடு போதும்."

வேலாயி ஆச்சரியத்துடன் "எனக்குன்னு என் ஒண்ணரைக் காசு கொறைச்சல்?" என்றாள்.

சிறுகதைப் போட்டி
முதற் பரிசுக் கதை
தெ. 2.


"மாமன் மவனல்லவா நீ? உங்கிட்ட காசே வாங்கக் கூடாது. வயத்துப் பொளப்பு."

வேலாயி அவனை இரக்கத்துடன் பார்த்தாள். புடவைத் தலைப்பிலிருந்து நாலணாவை அவிழ்த்து அவனிடம் கொடுத்தாள். அவன் அவளுக்குப் பாக்கி காலணா கொடுப்பதற்காக, காசு கொடுக்க உள்ளே சென்றான். வேலாயி அவன் வருவதற்குள் சட்டியை எடுத்துக் கொண்டு வேகமாய்ப் போய் விட்டாள்.

2

கந்தசாமி வேலாயியின் தகப்பன். அவனும் ஜாதியிலே குயவன்தான். ஆனால் அவன் பணக்காரன். அவனுக்கு ஐந்தாறு செங்கல் காளவாய் இருந்தது. அவனிடம் பதினைந்து ஆட்கள் வேலை செய்து வந்தனர். சோமு அவனுக்கு ஒன்றுவிட்ட தங்கச்சி மகன்; ஏழை. அவனைக் கைதூக்கி விடக் கந்தசாமி முயன்றான். ஆனால் சோமு அதையெல்லாம் விரும்பவில்லை. தினம் தினம் வித விதமான சட்டி, பானைகளைச் செய்வான். அவனுடைய சகோதரி ராக்காயி அவைகளைச் சுற்றுப்புறமுள்ள ஊர்களில் கொண்டுபோய் விற்று வருவாள்.

கந்தசாமியின் கையில் பணம் ஏற ஏற, சோமு அவனை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாய் விலகிக் கொண்டே வந்தான். இரண்டொரு வருஷங்களில் கந்தசாமி சோமுவின் மீது கொண்ட அனுதாபத்தையும் விட்டு விட்டான்.



* * *

சோமு வேலாயிக்குக் கொடுக்க வேண்டிய காலணாவை வைத்துக்கொண்டு காத்திருந்தான். ஒருநாள் தற்செயலாகக் குளக்கரையில் அவளைத் தனியாகச் சந்தித்தான். "இந்தா வேலாயி, அன்னிக்கி பாக்கி ஒண்ணரைக் காசே வாங்கிக்காமே ஓடிட்டியே" என்று மடியிலிருந்து காலணாவை எடுத்துக் கொடுக்கப் போனான்.

"நீ தான் சட்டி விலை ஒரு அணான்னு சொன்னியே, அத்தான்!"

"ஆமாம்; உனக்காகக் காலணா கொறச்சேன், மாமன் மவளாச்சேன்னு!"

"சரிதான்! நீ என் அத்தை மவன்னு இன்னும் ஒண்ணரைக் காசு கொடுக்கிறேன் வாங்கிக்கோ!"

சாதாரணமாய்ச் சிரித்தபடியே சொன்ன இந்த வார்த்தை சோமுவிற்கு அவ்வளவு கோபத்தை உண்டாக்கி இருக்க வேண்டாம்.

"இந்தா, வேலாயி, நான் ஏழைன்னு தானே இப்படிச் சொல்றே ... நான் ஏழையா இருந்தா இருந்துவிட்டுப் போறேன். இதோ பாரு! கையுள்ள வரையில் கடவுள் கூலி கொடுப்பாரு. இதுக்காக ஒறவு மொறை பேசிக்கிட்டு ஒங்க கிட்ட வந்து நிக்க மாட்டேன்."

இவ்வார்த்தைகள் வேலாயியின் பொறுமையைச் சோதிப்பதாக இருந்தன. அவள் சோகத்துடன் "இந்தா, அத்தான்! ஏன் இப்படி 'பட பட'ன்னு பேசறே? ஒலகத்திலே ஏழை பாழைங்க இல்லையா? அதுக்காக அவுங்களை இளக்காரம் பண்ணிடுவாங்களா? எங்கப்பா பொறக்கும்போதே பணக்காரராப் பொறந்தாரா? அவரு உங்க மாமன் தானே? உனக்கு நல்லதைத்தான் சொல்வாரு — நீதான் ஏழை — பணக்காரன்னு சொல்லிக்கிட்டுத் திரியறே — என்ன இருந்தாலும் அவருக்குத் தங்கச்சி மவன்கிற அனுதாபம் போவுமா?"

"ஹாம்! உங்கப்பாரு நல்லதையா சொல்றாரு?— அவருகிட்டே வந்து காளவாயிலே நான் வேலை செய்யணுமாம்! — போரும், ஒங்கப்பாரு பிரியம்! சோம்பேறிப் பயல் காளவாயில் வேலை செய்வான்! எந்த மனுசனாவது ஒக்காந்து நாளு முழுக்கக் கல்லு அச்சுப் போடுவானா? இந்தா! நான் என் ஒத்தரு கிட்டே கைகட்டிச் சேவகம் பண்ணணும்? அதுவும் ஒறமுறையாங்கிட்டே? ஒங்கப்பாரு என்னை ஒட்டுக்காளவா போடுறயாங்கிறாரே, அப்போ என்னை வக்கத்தவன்னுதானே நினைப்பு வச்சிருக்காரு. எனக்கென்ன? அக்கா ஒருத்தி இருக்கா; போன மூணு வருஷத்துக்கெல்லாம் வீட்டுக்கு வந்துட்டா. அவளும் நானும் இன்னிக்கெல்லாம் வேலை செஞ்சால் ஒரு ரூவாய் சம்பாரிக்க மாட்டோம்?"

வேலாயி இதையெல்லாம் மௌனமாகத்தான் கேட்டு வந்தாள். சோமுவின் வார்த்





தைகள் அவன் உள்ளத்தை உருக்கிக் குலைத்தன. அவன் மீது அவளுக்கு அனுதாபம் ஏற்பட்டது. ஆனால் அவளுடைய அனுதாபத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை சோமு. அவள் கண்களில் தங்கிய கண்ணீரைச் சோமு பார்க்காத வண்ணம் துடைத்துக் கொண்டே, "அத்தான்! அப்பாவை வீணா கோவிக்காதே. அவரு உன்னை மண்ணு பிசையவும் கூப்பிடலே; அச்சு வாக்கவும் கூப்பிடல்லே! நீ எதாவது நினைச்சுக்கிட்டுக் கொளம்பறே. காளவாய் மேம்பார்வை பார்க்கப் பொறுப்பா ஒருத்தரும் இல்லையேன்னு உன்னைக் கூப்பிட்டார்" என்றாள்.

"சரிதான்! எதுவா இருந்தா என்ன? கையிலிருக்கிற வேலையை விட்டுவிட்டு ஒங்கப்பாருகிட்டே வந்து நிப்பானேன்? இன்னிக்கி என்னை ஊர்லே யாராவது என்னவாவது சொல்ல முடியுமா? உங்கப்பாருகிட்ட வேலை செய்தா, நாளைக்கு நாலு பேரு நாலு சொல்லுவாங்க."

"அத்தான்! உன் இஷ்டம். ஆனா அவுங்க பணக்காரங்க, பணக்காரங்கன்னு மாத்திரம் சொல்லாதே. என்னை அது என்னவோ பண்ணுது. நாங்க இந்த ஊர்லே மாடி வீடு வச்சுக் கட்டினாலும் நீ சட்டிப் பானை வியாபாரம் பண்ணினாலும் மாமன்—மருமவன்னு சொல்லாதே இருக்க மாட்டாங்க. தண்ணியோட தண்ணி அடிச்சா விலகிடுமோ?" என்று சொல்லிவிட்டு வேகமாய் நடந்து போய்விட்டாள்.

சோமு கையில் காலணாவை வைத்துக் கொண்டே அவள் போன திசையைப் பார்த்துக் கொண்டு நின்றான். "மாமன் மகள்; நான் உரிமைக்காரன்; தாலிகட்ட வேண்டியவன்" என்று அந்த விநாடி அவன் மனது நினைத்தது. ஆனால் மறு விநாடி ஒரே ஏமாற்றம். "என்ன இருந்தாலும் பணம் பந்தியிலே குலம் குப்பையிலேதான். முறைக்காரன், சொந்தம், உரிமைக்காரன் இதெல்லாம் பணமிருந்தாத்தான். இவ்வளவு நாளும் பேசறானே, என்னைக் கல்யாணம் செய்துக்கோன்னு?.........அப்போ தெரியும். ஊஹூம்! அவளை எனக்குக் கட்டிக் கொடுக்கிறேன்னு மாமன் சொன்னாலும் வேண்டாம். நமக்குத் தகுந்த சம்பந்தந்தான் பண்ணணும். என்ன ஒறமொறையா யிருந்தாலும் பணக்காரங்க வீட்டிலே சம்பந்தம் பண்ணினா மானக்கெட்டுத்தான் போவணும். அவுங்க அதிகாரந்தான் வலுக்கும்"—இப்படிப் பலவிதமாக எண்ணியபடியே வீடு போய்ச் சேர்ந்தான் சோமு.

3

வீட்டுத் திண்ணையில் கந்தசாமியும் நாட்டாண்மைக்காரரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். வேலாயி இவர்கள் சம்பாஷணையை ஜன்னலில் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள். பேசப்பட்ட விஷயம் அவள் சம்பந்தப்பட்டதாக இருந்ததால்தான் அவள் ஊன்றிக் கவனிக்க நேரிட்டது.

"என்ன கந்தசாமி! மவளுக்கு வயசாயிடுத்து போலிருக்கே. காலா காலத்துலே எங்காவது பிணைச்சுட்டால் நல்லாயிருக்கும்."

"ஆமாங்க, வெத்திலே போடுங்க. அதான் பார்க்கிறேன். சரியா ஒண்ணும் அம்புடலே! நமக்கு இருக்கிறது ஒண்ணு. அதை எங்கேயாவது கண் காணாத இடத்திலே கொடுக்க வாணும்னுல்லே பார்க்கிறேன்?"

"அது வாஸ்தவம். உன் தங்கச்சி மவன், அதா அந்தப் பய சோமு இருக்கானே!......ஆனா, என்ன இருந்தாலும் கொஞ்சம் பசையுள்ள இடமாப் பாக்கணுமில்லே."

"காசு பணங் கிடக்குங்க; பையன் நல்லவனா சாமர்த்தியக்காரனா இருந்தாப் போதுங்க. இந்தப் பய சோமு நல்லவன் தான். கெட்டிக்காரன். ஆனா வளிக்கு வரமாட்டேங்கறானே?"

"என்ன அப்படிச் சொல்லிப்பிட்டயே!"

"உங்களுக்கு விவரம் தெரியாதுங்களா? நான் அந்தப் பயலைக் கூட்டி, 'இங்கே வாடா, இப்படியே



சட்டிப்பானை பண்ணிக் கிட்டிருந்தா யோக்கிதைப் படாது; ஒட்டுக் கிராக்கி மிஞ்சுது, ரெண்டு காளவா ஒடு போட்டா நல்லது; எங்கிட்ட வசமான ஆளா ஒருத்தரும் இல்லே; என்னாலேயும் எல்லாத்தையும் பார்க்க முடியல்லே; நீ வந்து கூடமாட இருந்தா கார்வாரு பண்ணிக் கிட்டிருன்னு சொன்னேன். அதுக்கு அந்தப் பயல் என்ன சொன்னான், தெரியுமா அண்ணே? அட! போங்க, விடுங்க களுதையை..."



"என்னதான் சொன்னான்?"

"எங்கிட்ட ஒண்ணும் சொல்லல்லே; நடேசன் கிட்டச் சொன்னானாம். 'கையிருக்கு, வேலை செய்யறேன்; ஒற மொறையாக்கிட்டே நான் என் கையைக் கட்டிக்கினு நிக்கணும்? அவுங்க பணக்காரங்க, நம்மைக் கேவலப் படுத்துவாங்க. நான் பொளைக்க மாட்டாமே அலையறேனா, இவங்க கிட்டே வந்து சேவகம் செய்ய?" என்று சொன்னானாம். இன்னும் என்னென்ன சொல்லி யிருக்கான் தெரியுமா? அட போங்க, மனசு அப்படியே இந்துப் போவுது. இதோ பாருங்க, அவனுக்குப் பொண்ணு கொடுக்கிறதைவிடக் கொளம் குட்டையிலே தள்ளிப்புடலாம். கல்லுக் காளவா போடறவங்களெல்லாம் சொப்பேறிகளாம்! என்ன அண்ணே! பேசப் போற ரீதியைப் பாருங்க! 'என்னைக் கல்லு அச்சு வாக்கரவன்னு நினைக்கப்புடாதே!' என்கிறானாம்! இந்த மாதிரி புள்ளே எங்கே பொளைக்கப் போவுது? நமக்குத் தான் ஒத்து வருமா?"

"அடடடே! அந்தப் பையன் அப்படி இருப்பான்னு நான் நினைக்கலேப்பா. நல்ல யோக்யமான பையனாச்சே! இருந்தாலும் நான் அவனுக்குக் கொஞ்சம் புத்தி சொல்றேன். முறையிருக்கச்சே தவறி சம்பந்தம் பண்ணறது நியாயமில்லே. பிணைக்கப் போட்டுட்டா எல்லாஞ் சரியாப் பூடும். சரி, நான் வரேன், வயக்கரைப் பக்கம் போவணும்" என்று சொல்லிக் கொண்டே சென்றார் நாட்டாண்மைக்காரர்.

கந்தசாமி உட்கார்ந்தபடியே சிறிது நேரம் யோசனை செய்து விட்டு, ஒரு பெரு மூச்சு விட்டுக் கொண்டு காளவாயை நோக்கி நடந்தான்.

வேலாயிக்கு அவ் விருவருடைய சம்பாஷணையும் மனக் கிளர்ச்சியை உண்டாக்கியது. அந்தச் சம்பாஷணைக்குப் பிறகுதான் தனக்கும் சோமுவுக்கும் அந்தரங்கத்தில் ஏற்பட்டிருக்கும் சம்பந்தத்தை உணர்ந்தாள். சோமுவிடம் அதுவரையில் ஏற்படாத ஒரு புது அனுபவமும், ஆசையும் ஏற்பட்டது. அவனுடைய நிலையை எண்ணினாள். அழுகை அழுகையாக வந்தது. அவனுடைய பிடிவாதத்தை மாற்றப் பிரயத்தனப்பட்டாள்.

4

மறு நாள் காலையில் தண்ணீர் குடத்தைச் சுமந்து ஆற்றுக்குப் போகிறவள் போல் சோமுவின் குடிசையை நோக்கி நடந்தாள். சோமு எங்கேயோ போயிருந்தான். அவன் சகோதரி ராக்காயி களிமண்ணைப் பதம் செய்து கொண்டிருந்தாள். அவள் வேலாயியைக் கண்டதும், "வா! மாமன் மகளே! இந்த ஏழை எளியவங்க குடிசையும் உங் கண்ணுலே பட்டுதா?" என்றாள்.

"என்னக்கா! அத்தாத்தான் இப்படியெல்லாம் சொல்லுது, நீயுமா சொல்றே? நீங்க ரெண்டு பேருமா எங்களைச் சாதியை விட்டுக் கூடத் தள்ளிப்புடுவீங்க போலிருக்கே!"

"சாதியிலேந்து ஒதுக்க நாங்க என்ன அதிகாரியாம்மா! என்ன இருந்தாலும் பணக்காரங்க பணக்காரங்கதான், ஏழை ஏழைதான்; மச்சு வீடும் குச்சு வீடும் ஒண்ணாயிடுமா?"

"மச்சு வீட்டிலே இருக்கறவங்களும் மனுசாதான்; குச்சு வீட்டிலே இருக்கறவங்களும் மனுசாதான், அக்கா! என் மனசிலே

எதனுச்சம் இருந்தா 'அக்கா' சொல்லிக் கிட்டு இங்கே வருவேனு?"

"உன் மனசிலே ஒண்ணும் இருக்க வாணும் — மத்தவங்க?......உங்கப்பாரு..."

"அக்கா! அப்படி ஒண்ணும் நினைக் காதே! அப்பாரு — அவரு மனசிலே என்ன எண்ணிக்கிட்டிருக்காரு தெரியுமா?"— அவன் என்னமோ சொல்ல நினைத்தாள். வெட்கம் அவ் வார்த்தையை வெளியே கொண்டு வராமல் தடுத்தது. ராக்காயியின் கவனம் முழுவதும் களி மண்ணின்மீது இருந்தது. அவள் வேலாயியைக் கவனிக்காமல், "என்ன நினைத்துக்கிட்டிருக்காரு — தங்கிட்டே வேலைக்கு வச்சுக்கலாம்னு தானே! என் தம்பி அப்படிப்பட்டவனில்லே! இதோ பாரு! அவன் கையுள்ள வரையிலே பானை, சட்டி செஞ்சுப் போட்டும்—எனக்குக் காலுள்ள வரையில் ஊரைச் சுத்தி வித்துக்கிட்டு வரேன். அப்புறம் ஆண்டவன் விட்ட வழி!"

"நீங்க அத்தானை அவரு சேவகம் செய்யத்தான் கூப்பிட்டாருன்னு நினைச்சுக்கிட்டிருக்கீங்க — நேத்து நாட்டாமைக்காரருகிட்டே சொல்லிக்கிட்டிருந்தாரு. நீ வேணுமானு நாட்டாமைக்காரரைக் கேளு."

"என்ன சொன்னாரு? நீதான் சொல்லேன்."

"நாங்க பணக்காரங்க என்கிற நினைப்பிலேயே நீங்க எல்லாத்தியும் மறந்துப்புட்டீங்க. நாங்க ஏழையா இருந்தா ஒக்க ஒடமையை மறப்பீங்களா?"

அது வரையில் களி மண்ணில் கவனத்தைச் செலுத்தியிருந்த ராக்காயி தலை நிமிர்த்து வேலாயியைப் பார்த்தாள். அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது. "நீ என் தம்பிக்கு ஒடமைப் பட்டவதான். இதோ பாரு! என் தம்பிக்கு உன் கையைப் பிடிக்கிற அவ்வளவு மவுசு ஏது? நான் அதை மறந்துபுடல்லே. உன்னைப் பாக்கற போதெல்லாம் நினைக்கிற போதெல்லாம் எனக்கு மனசு அத்துப் போவுது. ஆயிரந்தான் நீ பணக்காரியாயிருந்தாலும் உனக்கு என் தம்பியைப் போலவும் — என் தம்பிக்கு உன்னைப் போலவும் கிடைக்குமா?"



"அக்கா! இதைத்தான் நேத்து அப்பாரு நாட்டாமைக்காரருகிட்டே சொல்லிக்கிட்டிருந்தாரு......"

"நிஜந்தானு? மாமா என் தம்பிக்கு உன்னைக் கட்டிக் கொடுக்கிறேங்கறாரா?"

"நான் சொல்லுவானேன்? நீ நாட்டாமைக்காரரையே கேட்டுக்க — அப்பாருக்கு நல்ல மனசுதான், நீங்கதான் விலகி ஒதுங்கீங்க."

ராக்காயி தன் கைக் களி மண்ணை வழித்தெறிந்து விட்டு, வேலாயியின் கன்னத்தில் கையை வைத்துத் தன் தலையில் சொடுக்கிக் கொண்டு, "நீங்க எப்படியாவது சௌக்கியமா யிருந்தா எனக்குச் சந்தோசத் தாம்மா!" என்றாள்.

சிறிது நேரம் சம்பாஷணைக்குப் பிறகு வேலாயி ஆற்றங்கரையை நோக்கி நடந்தாள். அவள் மனதில் ஒரு குதூகலம். நடக்கையிலேயே ஒரு இன்பக் கனவு; ஒரு மணக் காட்சி; அது தனக்கும் சோழுவுக்கும் நடக்கப் போகும் மணக் காட்சிதான்.

ஆற்றங்கரை ஓரமாயுள்ள அரச மரத்தடியில் சோழுவும், நாட்டாண்மைக்காரனும் படையாச்சியும் பேசிக்கொண்டிருந்தனர். வேலாயியின் நடைச் சொப்பனத்திற்கு அவ்விருவர்களுடைய வார்த்தைகளும் முடிவை உண்டாக்கின. அவள் வெட்கத்துடன் ஆற்றை நோக்கி வேகமாய் நடந்தாள். கடைசியாக அவள் காதில் விழுந்த வார்த்தைகள்: "நான் ஏழையா இருக்கலாம்; இருந்தாலும் என் ஒடமையை நான் விட்டுடுவேனு? வேறொருத்தன் வந்து வேலாயியைத் தொட்டுடுவானு?"

"இதோ பாரு! ஊரிலே நாங்கதான் பாத்துக்கிட்டிருப்போமா? பஞ்சாயத்துன்னு என்னத்துக்கு இருக்குது?

உங்க மாமனுக்கும் உனக்குக் கட்ட வாணுங்கற எண்ணமில்லே!"

அத்தான் சண்டைவிட்டாவது தன்னைக் கலியாணம் செய்து கொள்ளத் தயாராய் இருக்கிறான் என்பது கேட்டு அவள் உள்ளம் பூரித்தது. ஆற்றில் தண்ணீர் மொண்டு கொண்டு கரை ஏறினாள். சோமு அவள் எதிரில் வந்து நின்றான். என்றுமில்லாத வெட்கம் இன்று அவளை வந்து கப்பிக் கொண்டது. அவள் புன் முறுவலுடன் தலை குனிந்து நின்றாள்.

"இந்தா, மாமா வூட்டிலே இருக்காரா?" என்றான் சோமு. அவனுடைய வார்த்தையிலும் ஏதோ புது மாறுதலிருந்தது.

"இருக்காரு அத்தான்!" என்று சொல்லிக்கொண்டே சென்றாள் வேலாயி. என்றுமில்லாமல் இன்று ஏன் அவளுக்கு அவ்வளவு வெட்கமும் கூச்சமும்?

5


சோமுவும் வேலாயியும் புருஷன் மனைவியாவதற்கு நாளாகி விடவில்லை. சீக்கிரத்திலேயே நடந்து விட்டது. இன்று அவர்கள் இணைபிரியா தம்பதிகள். இரண்டு குடும்பமும் ஒரு குடும்பமாய் விட்டது. அந்தச் சிறிய குடிசை — சக்கரம், பானை, சட்டி, களிமண் — அந்த உலகம் மறைந்து விட்டது. காதிலே கடுக்கன், கையிலே காப்பு — சட்டை — உருமாலை, கையிலொரு மூங்கிற்குச்சி, இந்த விதக் கோலத்தோடு சோமு செங்கற் காளவாயடியில் நின்றுகொண்டு ஆட்களை வேலை வாங்குவதைப் பார்த்தால், அவன் வேறொரு உலகத்திற்கு வந்துவிட்டான் என்பது எளிதில் விளங்கும்.

மாதம் ஆறு ஆகிவிட்டது. வாழ்க்கை சந்தோஷமாய்த்தான் நடந்து கொண்டிருந்தது. ஒருநாள் மாலை வேளை. சோமு காளவாயைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு வந்தான். பெரிய காளவாயின் ஒரு பக்கத்தை சோமு பார்த்துக் கொண்டிருக்கும்போது மறுபக்கத்தில் யாரோ இருவர் பேசிக்கொண்டிருப்பது காதில் விழுந்தது.

"அண்ணே! சின்ன எஜமான் என்ன ரொம்ப விரட்டுறாரே; எல்லாம் மறந்திடுச்சுப் போலிருக்கு!"

"ஆமாப்பா, மறக்காமெ குந்திகிட்டிருக்குமா? குப்பையைத் தூக்கிக் கோபுரத்திலே வச்சா சும்மாக் குந்திகிட்டிருக்குமா? குதிக்கத்தான் செய்யும்!"

"ஆமாம், சட்டி வனைஞ்சிகிட்டிருந்தவன் தானே! குதிக்கத்தான் குதிப்பான்!"



அமைதியாக இருக்கும் நீரில் ஒரு சிறு கல் விழுந்தால் போதாதா? என்ன இருந்தாலும் புது வாழ்வு தானே! அவன் கையால் உழைத்த காசா, காப்பு—கடுக்கன் — அதிகாரம் — அந்தஸ்து எல்லாம்? புதிதாய்ப் புனைந்த வேடத்திற்கு உண்மையான ஆதாரம் ஏதாவது இருக்கிறதா? அந்த வேலைக்காரர்கள் இருவரும் சொன்ன வார்த்தைகளை அவ்வளவு சுலபமாக ஜீரணம் செய்துவிட முடியுமா? அவன் ஹிருதயத்தில் ரத்தம் கசியும்படி அடித்த ஒரு அடி அது. உள்ளம் கலங்கி நின்றான் சோமு. மனக் குழப்பத்தோடு வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான். பாதையில் அவன் முன்பு இருந்தது குடிசை. இத்தனை நாள் அது அவன் கண்களில் படாதது ஆச்சரியமல்ல. இன்று அது அவன் எதிரே வந்து, "என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாய்! — ஆனால் நான்தான் உன் மானத்தைக் காப்பாற்றுவேன்!" என்று சொல்வது போலிருந்தது.

அன்று இரவு அவன் தூங்கவில்லை. இருதயத்தில் பட்ட அடியை அவன் சமாளிக்க எண்ணினான். காலையில் தனக்குத்தானே மன ஆறுதல் செய்துகொண்டு ஒற்றையடிப் பாதை வழியாகக் காளவாயை நோக்கி நடந்தான். அவனுக்கு முன்னால் இரண்டு ஸ்திரீகள் ஆற்றுக்கு நீரெடுக்கச் சென்று கொண்டிருந்தனர். சோமுவின் மாமியும் மற்றொருத்தியுந்தான் அது. பாவம்! அவர்கள் சம்பாஷணை வேறு இவன் காதில் விழ வேண்டுமா?

"இதோ பாரு! நான் அவருக்கு மூந்தியே சொன்னேன்! நமக்குத் தகுந்த சம்பந்தம் பண்ணுங்கன்னு! தகப்பனும் பொண்ணுமா யிருந்து பிடிவாதமா செஞ்சுகிட்டாங்க. எந்த மானமுள்ள மனுசனாவது மாமனாரு வூட்டோடே குந்திகிட்டிருப்பானு? அக்காளையும் வேறே அழைச்சுகிட்டு வந்துட்டான். என்னமோ ராசாங்கம் நடக்குது. என் தம்பிக்கி என்ன கொறைச்சல்? இவுங்களைப்போல பக்கியா, பண்ணையா? மாசம் ஐஞ்சு காளவா போடுவான். ஆனமட்டுஞ் சொன்னேன் அவனுக்குக் கட்டிப்புடுங்கன்னு. அவன் கள்ளுக் குடிக்கான்னு சொல்லி, தன் தங்கச்சி மவனுக்கே கட்டினாரு—ஊர்லே எத்தனை பேர் கள்ளுக் குடிக்கல்லே? அவுங்களெல்லாம் குடித்தனம் பண்ணலியா? தன் வயித்தைக் கழுவ யோக்கிதை யில்லாதவன் பொண்சாதியை எப்படிக் காப்பாத்தப் போறான்?"

சோமு திகைத்து நின்றான். முன்னால் ஓரடி விழுந்தது. அதைச் சமாளிக்க நினைக்கும் பொழுது, மேலும் ஒரு பலமான அடி! அவனுடைய மானத்தையும், ரோஷத்தையும்



தீவிரமாக சோதனை செய்வது போலிருந்தது, மாமியின் வார்த்தைகள். அவன் மனம் குழம்பவில்லை. சட்டென்று ஒரு நிர்மானத்திற்கு வந்து விட்டான்.

அன்று மத்தியானம் சாப்பாட்டிற்கு வீட்டிற்கு வந்தான். வந்தவுடன் அவசரமாகத் தன் சகோதரியிடம் போய், "அக்கா! இனிமே இந்த வூட்டிலே இருக்க நமக்கு அவ்வளவு யோக்கியதைப் படாது. நீ என்ன சொல்றே?" என்றான். "உங்கிட்ட சொல்ல வாண்டாம்னு இத்தினி நாள் இருந்தேன். நீ ஏதாவது பண்ணிப்புடுவே, நாளைக்குத் தெருவிலே என் தலே கிடந்து உருளும்னு தான் சும்மா இருந்தேன். இங்கே வந்திலிருந்து மாமி என்னென்னமோ ஜாடைமாடையாச் சொல்லு, தம்பி! உனக்காகவும் உம் பொஞ்சாதியின் நல்ல குணத்துக்காகவும் நான் பொருத்துக்கினு இருக்கேன். இத்தினி நாள் இவுங்க வீட்டு வாசல்லயா காத்துக்கினு நின்னோம்?"

"இப்போ என்ன குடி முழுகிப் போச்சு? நம்ப குடிசை யிருக்கு. பூமிதேவி மண்ணுனு னும் பொன்னு யிருக்கா."

"உம் பொஞ்சாதி நம்பளோடே வருவாளா?"

"வராக்காட்டியும் அப்பாரு வூட்டோடே அடஞ்சு கிடக்கட்டுமே. பெண்டாட்டிக்காவ மானத்தை வித்துப்பூடுவேனு?"

இவர்கள் சம்பாஷணைக் கிடையே வேலாயி சோமுவைச் சாப்பிட அழைத்தாள். சோமு சாப்பிட்டுக் கொண்டே, "இந்தா, ஒனக்குத்தான்; ஒரு சங்கதி!" என்றான்.

வேலாயி, "என்ன?" என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

"நாளைக்கு நம்ப குடிசையிலே சாப்பாடு."

"நீங்க சொல்றது ஒண்ணும் புரியல்லியே?" என்றாள் வேலாயி.

"உங்கப்பாருகிட்டே மேஸ்திரி வேலே பாக்கறது எனக்குப் புடிக்கல்லே. இந்த வேலையை விட்டுட்டு, நம்ப வேலே யைப் பாக்கணும்."

"ஏன்?"

"என்னு கேக்காதே. நீ என் குடிசைக்கு வாரியா இல்லியா? அங்கே இதைவிடச் சந்தோசமாயிருக்கலாம்."

"நா வரமாட்டேன்."

"வராட்டி இங்கேயே இரு. நான் சொன்னதைக் கேக்காத பொஞ்சாதி எனக்கு வாண்டவே வாண்டாம்!"

இந்த வார்த்தைகளைக் கோபமாகவே உச்சரித்தான் சோமு.

வேலாயி களுக்கென்று சிரித்துவிட்டு, "அப்பா! என்ன கோவம்! இதோ, பாரு! உங்களை வுட்டுட்டு இந்த வூட்லே எனக்கு என்ன வச்சிருக்குது? இந்த வூடே எனக்குப் புடிக்கல்லே. அம்மாவுக்கு அக்காளைக் கண்டா புடிக்கல்லே. எப்பப் பார்த்தாலும் கரு முருன்னுதான் இருக்கா. நான் அப்பாருகிட்டே அப்பவே சொல்லிப்புட்டேன். நாங்க தனியாப் போறதுதான் நல்லதுன்னு! அவரும் 'சரி'ன்னுட்டாரு."

சோமு சிரித்துக் கொண்டே, "எனக்குத் தெரியும், நீ கெட்டிக்காரின்னு" என்றான்.

"நான் உங்களோடே வந்தா எனக் கொண்ணு கத்துக் கொடுக்கிறீங்களா?"

"என்னது?"

"நீங்க சட்டி, பானை செய்யறது மாதிரி நானும் செய்யணும்!"

சோமு சிரித்துக்கொண்டே, "நீ பொம்பளே— களி மண்ணு பதம் பண்ணி வச்சாப் போதாதா?" என்றான்.

"பொம்பளென்னு ஒண்ணும் தெரியாதாக் காட்டியும்! நீங்க மாத்திரம் அதை எனக்குக் கத்துக் கொடுத்துங்க. நான் செய்யச் செய்ய அக்கா கொண்டுபோய் வித்துக் கிட்டு வந்துடும்.— என்ன, கத்துக் கொடுக்கிறீங்களா?"

"சரி; கத்துக் கொடுக்கிறேன்!" என்று சொல்லி இலையைப் பார்த்தான் சோமு.— இவ்விரு இளந் தம்பதிகளின் சம்பாஷணைக் கிடையே, இலையிலிருந்த பதார்த்தங்கள் மாயமாய் மறைந்து போனது அவ்வளவு ஆச்சரியப்படக் கூடியதா?

கொடுத்து வைத்தது!

பூசுரன்

"ஹூம்......என் தலையெழுத்து! அவளைச் சொல்வதில் என்ன தப்பு? பெத்து வளர்த்துப் பாழுங் கிணற்றிலே தள்ளினவாளைச் சொல்லணும்..."

"நீ சொல்றது ரொம்ப சரி; நூத்திலே ஒரு வார்த்தை..."

"இந்த ஜன்மத்துக்குக் கேலி வேறே, சிரிப்பு வேறே? இதைவிட நாய் கூட கௌரவமா வயித்தைக் கழுவும்!"

"யார் இல்லேன்னா?"

அதற்கு மேல் அலமேலு வாய் திறக்கவில்லை; கண்கள் அதற்கு ஈடு செய்வது போல் திறந்து கொண்டன. கண்ணீர் முத்து முத்தாக மஞ்சள் ரேகை படிந்த கன்னங்களில் உருண்டு ஓடிற்று.

துக்கம் நெஞ்சை அடைத்துக் கொள்ள, "இங்கே வாக்கப்பட்டதற்கு இந்தக் கேலிப் பேச்சுத்தான் மிச்சம்... உம்......அப்பொழுதே அம்மா ஒரு காலாலே நின்னு, 'இந்தச் சம்பந்தம் வேண்டாம்'னா; தஞ்சாவூர்க்காரனுக்குக் கொடுக்கணும்னு ஆனமட்டும் முட்டிண்டா; எனக்குத் தகப்பன்னு ஒண்ணு வந்து தொலைந்ததே, அது கேட்கவில்லை. படிச்சவன், படிச்சவன்னு இங்கே கொண்டு வந்து தள்ளினா. அதோ தஞ்சாவூர்க்காரர் மாதம் நூத்தம்பது ரூபாய் சம்பாதிக்கிறார்; பி. ஏ. கூட பாஸ் பண்ணவில்லை. என் தலையெழுத்து இங்கே வந்து கஷ்டப்படணும்னு எழுதியிருக்கு" என்று பொருமினாள் அலமேலு.

அலமேலு தாசில்தார் பெண்; சின்ன வயதிலே, பிறந்த வீட்டில் செல்வமாகவும் ஆடம்பரமாகவும் வாழ்ந்தவள். கஷ்ட நிஷ்டூரங்களின் புகைச்சல் அவள் கண்களில் படவில்லை. பழகின இடங்களும் நடுத்தரமான பணக்காரக் குடும்பங்கள். அதனால் நகை, நட்டு, ஆடம்பரத்திலே அவள் உணர்ச்சிகள் ஊறியிருந்தன.

அலமேலு ஆத்மநாதனுக்கு வாழ்க்கைப் படுவதற்கு முன் தஞ்சாவூரிலிருந்து ஒரு வரன் வந்தது. பெயர் ராமசாமி; பார்ப்பதற்கு லட்சணமாயிருந்தான். அவனுடைய தகப்பனாரான நாகசாமி அய்யர் தஞ்சாவூரிலேயே பெரிய வக்கீல். பிள்ளைக்குப் படிப்பு அதிகமில்லை என்பதற்காக அலமேலுவின் தகப்பனார் அவனுக்குத் தம் பெண்ணைக் கொடுக்க மறுத்து விட்டார்.

ஆத்மநாதன் அவ்வளவு அழகனாக இல்லாவிட்டாலும், அவலட்சணமாயும் இல்லை. பி. ஏ. வரையில் படித்திருந்தான். ஆனால் அதிர்ஷ்டமில்லை. நாற்பது ரூபாய் சம்பளத்தில் நாலு வருஷமாகக் குட்டிக்கரணம் போட்டுக் கொண்டிருந்தான்.

அலமேலுவிற்கு நகைகளில்லாமலே அவளுடைய அழகு சம்பூர்ணமாகத்தான் விகசித்தது. ஆனால் இயற்கை அழகு மட்டும் இருந்து என்ன செய்வது? அதை ஆயிரம் மடங்காகத் தூக்கிக் காட்ட இரண்டு நகைகளும் நாலு பட்டுப் புடவைகளும் இருக்க வேண்டாமா? வாரத்திற்கு ஒரு தடவை சினிமா, பாட்டுக் கச்சேரி என்று போய் வந்தால் அந்த அழகே பிரகாசிக்கிற விதம் வேறுதான்!

இப்படியெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, அலமேலுவுக்கு ஆத்மநாதன்மீது கோபம் கோபமாய் வரும்.

அதற்காகத் தன்னைப்பற்றிக் கேவலமாகவும், தஞ்சாவூர் மாப்பிள்ளையைப் பற்றி உயர்வாகவும் குறிப்பிட்டால் அவனால் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா? ஆகவே, "ஸ்ரீமதி தாசில்தார் புத்திரியே! நீ தஞ்சாவூர் மாப்பிள்ளைக்கோ, கோயம்புத்தூர் கோமல்வரனுக்கோ மாலை போடுவதில் யார் குறுக்கே நின்றது? பார்க்கப் போனால் உன்னுடைய பெற்றோர்கள் நிறைய வரதட்சணை தருவதாக ஆசைகாட்டி உன்னை என் கழுத்தில் கட்டி விட்டார்கள். அதனால் ராஜம் எனக்குக் கிடைக்காமல் போய்விட்டாள்!" என்று தன் உள்ளத்தில் அதுவரை கொதித்துக் கொண்டிருந்த கோபத்தை வெளியே கொட்டி விட்டான்.

"அவன் அதிர்ஷ்டம் பண்ணினவன், இங்கே ஏன் வருவான்?" என்று சொல்லிவிட்டு அலமேலு கிணற்றங்கரையில் வைத்திருந்த குடத்தை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள்.

★

ஆத்மநாதன் தாயாரும் அவ்வூருக்குப் புதியதாக குடி வந்திருந்த ராஜத்தின் தாயாரும் முதல் முதலாகக் கோவிலில் சந்தித்து, சிநேகம் செய்து கொண்டவர்கள். பிறகு ஒருவர் வீட்டிற்கு மற்றவர் போய் வருவது வழக்கம். அந்தப் பழக்கத்தால் கல்யாணப் பேச்சு

நடந்தது. ஆத்மநாதன் தாயார் ராஜத்தின் அழகுக்கும் அமரிக்கையான குணத்திற்கும் ஆசைப்பட்டு அவளைத் தன் மருமகளாகக் கொள்ள விரும்பினாள். ஆனால் ராஜத்தின் தகப்பனால் பிள்ளை வீட்டார் கோரின அளவு வரதக்ஷிணை அளிக்க முடியவில்லை. அந்தச் சமயத்தில் அலமேலுவின் தகப்பனார் போட்டி போட்டுக் கொண்டு அதிகமாக வரதக்ஷிணை கொடுப்பதாகச் சொல்லி அலமேலுவை ஆத்மநாதனுக்கு நிச்சயம் செய்தார்.

கடனால் தலை நரைத்து வரும் தன் தகப்பனாரின் தீனமான வேண்டுகோளுக்கும் தன் தாயாரின் கண் கலங்கிய மௌனத்திற்கும் முன் ஆத்மநாதன் தலை குனிந்து விட்டான்.

தன் மனைவி தன்னை இடித்துக் காட்டின பொழுது, ஆத்மநாதனுக்குத் தன்னுடைய கன்னிக் காதல் தேவதையான ராஜத்தை ஒரு முறை பார்க்க வேண்டுமென்ற ஒரு பைத்தியக்கார எண்ணம் தோன்றிற்று. அவளுடைய கிரஹதர்மம், புத்திரப் பேறு முதலியவைகளை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஒரு ஆவலும் அவனுக்கு உண்டாயிற்று. அந்தக் காலத்தில் அவள் எவ்வாறு தன்னுடைய மனதை அணு அணுவாகக் கவர்ந்திருந்தாள் என்பதையும் தன்னிடம் எந்த வகையான உரிமை கொண்டாடினாள் என்பதையும் அவன் நினைத்துப் பார்த்த பொழுது, அவன் மனம் மிகவும் வேதனையடைந்தது.

★

இப்படி நினைத்துக் கொண்டே வாசலை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு வண்டி வந்து அவனுடைய வீட்டு வாசலில் நின்றது. அடுத்த நிமிஷம் ஒரு காலத்தில் அவனுடையவள் என்று உரிமை கொண்டாடின ராஜமே இறங்கினாள்! கையில் இருந்த மூன்று வயதுப் பெண், அவளையே உரித்து வைத்ததுபோல் இருந்தது.

"ராஜம், வா! உனக்கு ஆயுசு நூறு! இப்பொழுதுதான் உன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்!" என்று வரவேற்றுக் கொண்டே, "அலமு, இங்கே யார் வந்திருக்கா, பாரு!" என்று தன் மனைவியைக் கூப்பிட்டான்.

அலமேலு புகையினால் சிவந்து கண்ணீர் கக்கும் கண்களைக் கசக்கிக் கொண்டே சமையலறையிலிருந்து வந்தாள். அடுத்த நிமிஷத்தில் வந்தவள் ராஜம் என்பதைத் தெரிந்து கொண்டதும், "உள்ளே வாயேன்" என்று அழைத்தாள்.

"அப்பா! உங்களைப் பார்த்து ஆறு வருஷமாவது இருக்கும் இல்லே! உடம்பு என்ன ஒரே இளைப்பாயிருக்கே!" என்று ஆத்மநாதனைப் பார்த்துக் கூறிக் கொண்டே சமையல் கட்டில் நுழைந்தாள் ராஜம்.

அலமேலு ராஜத்தை முழுங்கிவிடுபவள்போல் உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். ராஜத்தின் அபூர்வமான அழகின் முன்னால் தன்னுடைய அழகு மிகவும் குறைந்தது என்பதைக் கண்டு பிடிக்க அவளுக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. கொடி போல எடுப்பான உயரமும், நல்ல சிவப்



பும் உள்ள தேகம். முகத்தில் அழகு பொலிந்து ஜொலித்தது. இவ்வளவிற்கும் உடம்பில் நகைகளே யில்லை— கையில் ஒரு கட்டைக் காப்பைத் தவிர.

"உம், அலமேலு! உன்னைப் பார்க்கணும்னுதான் வந்தேன். போறதம்மா, உனக்குக் கொடுத்து வைத்தது! நீ அதிர்ஷ்டசாலிதான்!"

"எதைச் சொல்றே, ராஜம்?"

"பெண்களுக்கு அதிர்ஷ்டம்னு என்ன வேண்டும்? ஆம்படையானைத்தான் சொன்னேன்! உன் அகத்துக்காரரைப் போலக் கொடுத்து வைக்க ஆயிரம் வருஷம் தபசு பண்ணணும்!"

"நீதானம்மா பொறுமைப்படணும்! நாற்பது ரூபாய் காசிலே நாலு வருஷமா உட்கார்ந்திருக்கிறார். அதிர்ஷ்டமாம் அதிர்ஷ்டம்!"

"அடி அசடே! நாற்பது சம்பாதித்தால் என்ன, நானூறு சம்பாதித்தால் என்னடீ! இதோ, என் புருஷர் மாதம் நூத்தம்பது சம்பாதிக்கிறார்; இருநூறு செலவழிக்கிறார். எங்க அம்மா போட்ட நகைகள் எல்லாம் ஒன்றொன்றாய்ப் போயிடுத்து. அடியும் உதையும்தான் மிச்சம்!"

இதை யெல்லாம் கூடத்திலே உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்த ஆத்மநாதன், "என்ன, உன் புருஷன் அடிக்கிறானா? உன்னையா?" என்று கேட்டுக் கொண்டே வந்தான்.



வீட்டுக்காரி:—ஏண்டா, தினம் தினம் வந்து குழம்பு வேணுமென்று கேட்கிறாயே. இன்னைக்குக் கொடுத்து வழக்கம் காண்பித்தால் தினமும் வரமாட்டாயோ?

பிச்சைக்காரன்:— நிச்சயமாக அப்படிச் சொல்கிறது? நான் வருவதும் வராததும் உங்கள் சமையலைப் பொறுத்திருக்கிறதம்மா!

—ஏ. ரங்கநாதன்.

"அவரைச் சொல்லி என்ன பிரயோசனம்? என் தலையெழுத்து!"

"ராஜம், உன் ஆத்துக்காரர் யார்? அதுகூட மறந்து போச்சே!" என்று கேட்டான் ஆத்மநாதன்.

"தஞ்சாவூர் பெரிய வக்கீல் நாகசாமி அய்யர் பிள்ளைதான்!"

அலமேலுவிற்குத் தூக்கி வாரிப் போட்டது. "என்ன, ராமசாமிக்கா உன்னைக் கொடுத்திருக்கு?" என்று அவள் கேட்ட பொழுது ஆத்மநாதனுக்கு விஷயம் புரிந்து விட்டது. தன்னுடைய அமைதியான இல்லற வாழ்க்கையில் அடிக்கடி சிக்கலை உண்டாக்கின 'புண்ணியவான்' அவன்தான் என்று அறிந்தான்.

"அதென்ன, நெத்தியிலே ஒரு பெரிய தழும்பு? புதுசா இருக்கே?"

"அதுதான் எனக்கு என் புருஷன் செய்து போட்ட நகை!" என்று சொல்லிக் கொண்டே ராஜம் சிரித்தாள்.

அதைக் கேட்டதும் ஆத்மநாதனுக்குக் கண் கலங்கி விட்டது.

"ஆறு வருஷமாக உங்களை யெல்லாம் பார்க்க வேணும் என்ற ஆசை; பார்த்தாய்விட்டது. போய்விட்டு வரேன்!" என்று ராஜம் புறப்பட்டாள்.

"இரேன், ராஜம்! ஒரு வேளை சாப்பிட்டுவிட்டுப் போயேன். அலமேலு சமையலை ருசி பார்க்க வேண்டாமா?"

"இல்லே, வாசல்லே வண்டி காத்துண்டு இருக்கு!"

"சரி, 'காப்பியாவது குடித்து விட்டுப் போ......"

காப்பி குடித்துவிட்டுப் போகும் பொழுது ராஜம், "அலமு, நீ எல்லாரையும்விடக் கொடுத்து வைத்தவளடீ! அது மட்டும் சத்தியம்" என்று சொல்லி விட்டுப் போனாள். அவள் போகும் வரை ஆத்மநாதன் பார்வையை வேறு பக்கம் செலுத்தவில்லை.

"என்ன, அவளையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? உங்களுக்கு அதிர்ஷ்டம் இல்லை!" என்றாள் அலமேலு.

"ஆமாம்; உனக்கும் கொடுத்துவைக்க வில்லையே, ராமசாமிக்கு வாழ்க்கைப் பட!" என்றான் ஆத்மநாதன்.

"இன்னொரு தடவை அந்த மாதிரி சொல்லாதேயுங்கோ. நான் அதிர்ஷ்டசாலிதான்!" என்று சொல்லி விட்டு உள்ளே ஓடினாள் அலமேலு.

KALKI—29-10-1944



அந்த ஒரு நாள்

செல்லம்

ஜகதீச அய்யருக்கு மீனு ஒரே பெண். மாப்பிள்ளை ரங்கன் கல்யாணத்தின் போது பி. ஏ. படித்துக் கொண்டிருந்தான். ஆகையினால் கொஞ்சம் தாராளமாகவே சீர் வரிசைகள் செய்தார். என்ன செய்து மென்ன? அந்த நன்றிகெட்ட சம்பந்திகள் இது சொத்தை, அது சொள்ளை என்று குறை கூறினார்களே ஒழியத் திருப்தி அடைந்ததாகத் தெரியவில்லை. எது எப்படி இருந்தாலும் மாப்பிள்ளை நல்ல பையன். பெண்ணை அவர்கள் வீட்டில் கொண்டு போய் விட்டு விட்டால் எல்லாம் சரியாய்ப் போய் விடும் என்று நினைத்தார் ஜகதீசய்யர்.

தலை தீபாவளிக்கு மாப்பிள்ளையை அழைக்க ஜகதீச அய்யர் சம்பந்தி வீட்டிற்குச் சென்றார். வாசல் திண்ணையில் மாப்பிள்ளை ரங்கன் உட்கார்ந்திருந்தான். மாமனாரைக் கண்டதும் அவன் ஒன்றும் பேசாது எழுந்து உள்ளே போய் விட்டான். அது ஜகதீச அய்யருக்கு அவமானமாகப் பட்டது. இருந்தாலும் சிறு பையன்தானே, வெட்கமாக இருக்கலாம் என்று நினைத்து உள்ளே சென்றார். சம்பந்தியார் பார்த்தும் பார்க்காதது போல் கூடத்தில் உட்கார்ந்திருந்தார். "என்ன செளக்கியமா?" என்றார் ஜகதீச அய்யர்.

"யார் தெரியவில்லையே.........ஜகதீச அய்யரா?" என்றார் சம்பந்தியார்.

"அதற்குள்ளா மறந்து விட்டீர்கள்? ஆத்தில் எல்லோரும் செளக்கியம்தானே" என்றார் ஜகதீச அய்யர்.

"நீங்கள் திடீரென்று வந்ததால் யார் என்று தெரியவில்லை" என்றார் சம்பந்தியார்.

"தீபாவளிக்கு அழைக்க வருவதாகக் கடிதம் போட்டிருந்தேனே, அது வந்து சேர்ந்ததா?"

"வந்திருக்கலாம். நான் பல ஜோலிக்காரன். கவனிக்க முடியவில்லை. இப்பொழுது என்ன, தீபாவளிக்கு மாப்பிள்ளையை அழைப்பதற்காகவா வந்திருக்கிறீர்? என்னவோ நீங்களே வந்திருக்கிறீர்களே என்று பார்த்தால் ஆத்தில் என்ன சொல்லுகிறாளோ?"

"அவளையும்தான் அழைத்துப் போகணும். தலை தீபாவளியில்லையா? எல்லோரும் தான் வரவேண்டும்."

"வருவதைப் பற்றி யாதொரு தடையுமில்லை. கல்யாணத்தின்போது, கோட்டை கட்டுகிறேன் மலையைக் கட்டுகிறேன் என்று ஏமாற்றி விட்டீராம். அதுபோல் தீபாவளிக்கும் செய்வார்கள்; ஆகையினால் அவர்கள் சம்பந்தம் நமக்கு வேண்டாம்; நம்முடைய ஆசைக்குத் தகுந்தாற்போல் ரங்கனுக்கு வேறு கல்யாணம் செய்து கொள்ளுவோமென்று சொல்லுகிறாள். எதற்கும் நீங்கள் பையன் மேல் படிப்பிற்காக ஏழாயிரம் ரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு விட்டால் நான் ஆத்தில் சொல்லிச் சரிப்படுத்துகிறேன்" என்றார்.

ஜகதீச அய்யருக்குக் கிணறு வெட்ட பூதம் புறப்பட்டதுபோல் இருந்தது. "தலை தீபாவளிக்கு அழைக்க வந்தால் இப்படியா ஒரு மனுஷன் பேசுவான்?" என்று வருத்தப்பட்டார். தம் விதியை நொந்து கொண்டு ஒரு டம்ளர் தீர்த்தம் கூடச் சாப்பிடாமல் ஊருக்கு வந்துவிட்டார்.

மீனு சமர்த்தான பெண்ணானதால் அப்பாவின் முகத்திலிருந்து, "தலை தீபாவளிக்கு அவரைக் காணும் பாக்கியம் இல்லை" என்று பேசாமலிருந்து விட்டாள்.

பெரியவளான பெண்ணைப் புக்ககத்தில் கொண்டுபோய் விடாமல் எவ்வளவு நாள் வைத்திருப்பது? எப்படியோ கஷ்டப்பட்டு ஏழாயிரம் ரூபாயுடன் ஒரு நல்ல நாளில் மீனுவைக் கொண்டு போய் விட்டார். சம்பூர்த்தி அம்மாளும் பணத்தைக் கண்டவுடன் நாட்டுப் பெண்ணைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டாள். இரண்டு மாதத்திற்கெல்லாம் ரங்கன் மேல் படிப்பிற்காகச் சீமைக்குச் சென்று விட்டான். அவன் சீமைக்குச் சென்றதும் மீனுவிற்குக் கொடுமைகள் ஜாஸ்தியாய் விட்டன. ஒரு நாள் ஒரு சிறு தப்பு செய்து விட்டதற்காக மீனுவை அவள் மாமியார் வீட்டைவிட்டு வெளியே துரத்தி விட்டாள்.

மீனு எங்கு செல்வாள், பாவம்! காலக் கொடுமையை நொந்துகொண்டு தாய் வீடு வந்து சேர்ந்தாள். தன் பெண்ணின் கஷ்டத்தைச் சகிக்க முடியாமல் அதே ஏக்கத்தினால் மீனுவின் தாயார் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டாள். மீனுவின் கணவனுக்குப் படிப்பு முடிந்ததும் வேறு கல்யாணம் செய்யப் போவதாகவும், ஆகையினால் இனிமேல் மீனுவை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார்கள் மீனுவின் புக்ககத்தார்.

ஜகதீச அய்யரும் "உன் அதிர்ஷ்டம் நல்லதாயிருந்தால் ரங்கன் உன்னை ஏற்றுக் கொள்ளுவான். எல்லாம் என்னுடைய போறாத காலம். விதியின் பயன்! நீ இதற்காக வருந்தப்படாதே! எப்படியோ இந்தக் கட்டை உள்ள வரையில் உன்னைக் காப்பாற்றி விடுகிறேன். உனக்கும் ஒரு தொழிலை ஏற்பாடு செய்து விடுகிறேன். கவலைப்படாதே! அதற்காக உன் கணவனை மட்டும் ஜீவனாம்சம் கேட்க மாட்டேன்" என்றார்.


"அப்பா! இனி அவர்கள் முகத்தில் விழிக்கக் கூட எனக்குச் சம்மதமில்லை. அவர் இது வரை எனக்கு ஒரு கடிதம்கூட எழுதவில்லை. திரும்பி வந்தாலும் அவர் என்னை ஏற்றுக்கொள்ள மாட்டார். அவர் தாய் சொல் தட்டாத பிள்ளை. நான் பூமியில் பிறந்தது ஒருவருக்கும் சந்தோஷமில்லை. எங்கேயாவது ஆறு, குளம் கூட எனக்கு இடம் தராதா?"

"என்ன சொன்னாய் மீனு? நான் உன்னையே நம்பி உயிர் வாழ்பவன். உனக்காகத் தான் இந்த உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன். நீயும் போய்விட்டால் எனக்கு இவ்வுலக வாழ்வு வேண்டுமா? மீனு, அப்படி ஒன்றும் ஆத்திரப்படாதே. பொறுமையாயிரு. உன் பொறுமைக்கு ஒரு நாளும் குறைவு வராது. உன் குறையையும் அந்த ஈசன் ஒரு நாள் கண் திறந்து பார்த்தருள்வான். நான் உயிருடன் இல்லாவிட்டாலும் ஒரு நாள் உன் கவலைகள் தீரும்" என்றார்.

●

இடையே இரண்டு வருஷம் ஓடி விட்டது. மீனுவும் பழைய சம்பவங்களை மறந்து விட்டாள். தந்தையும் பெண்ணும் கஷ்டப்பட்டு உழைத்துப் புதிய வாழ்க்கை நடத்தி வந்தார்கள். குடும்பச் செலவுக்காக மீனு தையல் மெஷின் ஒன்று வைத்துக் கொண்டு, அக்கம் பக்கத்துப் பெண்களுக்குத் தைத்துக் கொடுத்துக் கொண்டு, அதில் வரும் கூலியைக் கொண்டு குடும்பத்தை நடத்தி வந்தாள். ஜகதீச அய்யரும் வயதான போதிலும் ஏதோ ஒரு கடையில் கணக்கு எழுதி மாதம் பதினைந்து ரூபாய் கொண்டு வந்தார்.

இந்த அமைதியைக் குலைப்பதற்காகவோ, அல்லது அவர் கர்ம வினையோ, எங்கிருந்தோ காசநோய் வந்து அவரைத் தொத்திக் கொண்டது. தன்னிடம் இருந்த நகை, நட்டு எல்லாவற்றையும் விற்று அவருக்கு வைத்தியம் செய்து பார்த்தாள் மீனு. அந்தப் பொல்லாத நோய் நாளுக்கு நாள் அதிகமாயிற்றே ஒழிய, குணமாகவில்லை. "ஐயோ! என் நெஞ்



பழைய மோட்டார் வாங்குகிறவர்:— எல்லாம் சரிதான். ஆனால் வண்டியின் வேகம் காட்டும் கருவி இல்லையே? என்ன பண்ணுவது?

பழைய மோட்டார் விற்பவர்:— அந்தக் கருவி இந்த வண்டிக்கு அவசியமே இல்லை. ஏனெனில் வண்டி லொட, லொட என்று ஆடினால் பத்து மைல் வேகம் என்று அர்த்தம். பூகம்ப அதிர்ச்சி போன்ற சப்தம் கேட்டால் இருபது மைல் வேகம் என்று அர்த்தம். வண்டியை விட்டு நாம் கீழே விழுந்தால் முப்பது மைல் வேகம் என்று அர்த்தம். —பானு.

வினைப் பயனா? எனக்கு ஆதரவாக இருந்த என் தகப்பனாரும் போய்விட்டால் நான் யாரிடம் போய் நிற்பேன்? எனக்கு ஒருவரும் கதியில்லையே? அவர் சீமையிலிருந்து திரும்பி வந்தால், ஒருவேளை என் கஷ்டத்தைப் பார்த்தாவது மனமிரக்க மாட்டாரா? இந்த ஜன்மத்தில் அந்த எண்ணம் ஏது? ஒருவேளை அவர் கல்யாணம் செய்து கொள்ளப்போகும் அந்தப் புண்ணியவதியாவது என்னை ஏற்றுக் கொள்ளுவாளா? இது என்ன பைத்தியக் காரக் கேள்வி! எவளாவது மனமுவந்து ஏற்றுக் கொண்டாலும் உலகம் சும்மா இருக்குமா? அப்பாவோ உயிருக்கு எமனுடன் போராடிக் கொண்டிருக்கிறார்!" இதே கவலையினால் நாளுக்குநாள் மீனா துரும்பா யிளைத்து விட்டாள்.

"இந்த ஊரில் சீமையிலிருந்து பாஸ் பண்ணி ஒரு டாக்டர் வந்திருக்கிறாராம். அவரையாவது கூப்பிட்டு உன் தகப்பனாரை பார்க்கச் சொல்வேன்" என்றாள் பக்கத்து வீட்டுப் பாட்டி ஒரு நாள் மீனாவிடம்.

"எனக்கே நான்கு நாளாக அந்த டாக்டரைக் கூப்பிட்டுப் பார்க்க வேண்டுமென்றிருந்தது. இப்பொழுது நீங்களும் சொல்வதால் நானே நேரில் போய் என் கைவளையைப் பணத்திற்கு ஈடாகக் கொடுத்து அழைத்து வருகிறேன். நான் வரும் வரையில் அப்பாவை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள், பாட்டி!" என்று கண்ணில் ஜலம் ததும்பக் கூறி விட்டுச் சென்றாள் மீனா.

தன் கை வளையை டாக்டரிடம் கொடுத்து, தன் தகப்பனார் இருமலினால் மிகவும் கஷ்டப் படுவதாயும், உயிருக்கே மோசம் வந்து விடுமோ என்று பயப்படுவதாயும், ஆகையினால் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள் மீனா. அந்த டாக்டர், "இன்று தீபாவளி. ஆகையினால் வர முடியாது. மருந்து தருகிறேன், எடுத்துச் செல்!" என்று கூறி விட்டார்.

பாவம், பேதை மீனா என்ன செய்வாள்! வரும்பொழுது அவள் விலாசத்தை மாத்திரம் டாக்டர் கேட்டுத் தெரிந்து கொண்டு, மறு நாள் காலை வருவதாகச் சொல்லி அனுப்பினார். மருந்துடன் அதி வேகமாக வீட்டிற்கு வந்தாள் மீனா. தகப்பனாருக்கு மருந்தைக் கொடுத்தாள்.

கடியாரத்தில் மணி இரண்டு அடித்தது. வாசல் கதவை யாரோ இடிக்கும் சத்தம் கேட்டது. கதவைத் திறக்க ஓடினாள். அதே சமயத்தில் அப்பா, "மீனா!" என்றார். வந்தவர் யார் என்று கூடப் பார்க்காமல் அப்பாவிடம் ஓடி வந்தாள். அதற்குள் அப்பாவின் ஜீவன் கூட்டிலிருந்து விடுதலையடைந்து விட்டது.

"அப்பா, என்னைத் தனியாய்த் தவிக்க விட்டுச் சென்று விட்டீர்களே? நான் இனி யாரிடம் போவேன்? என்னைக் காப்பாற்றுவார் ஒருவருமில்லையே!" என்று கதறி கீழே விழுந்து மூர்ச்சையானாள் மீனா.

●

யார் மடியிலோ தான் படுத்திருப்பதாகவும், சிறிது நேரத்திற்குப் பிறகு "மீனா மீனா!" என்று கூப்பிடுவது போலவும் தோன்றியது. திடுக்கிட்டு எழுந்தாள்.

"இன்னும் சற்று நேரம் அப்படியே இரு! உன் படபடப்பு அடங்க வில்லை. 'யாரோ அன்னியன் மடியில் படுத்திருக்கிறோம்' என்று வெட்கப்படுகிறாயா? என்னைத் தெரியவில்லையா உனக்கு! உன்னை இந்த கதிக்கு ஆளாக்கிய பாவி ரங்கன் நான் தான்!"

"ஆ! நீங்களா? நிஜமாக நீங்கள் தானா? இந்த ஏழையின் ஞாபகம் இப்பொழுதாவது வந்ததா? 'ஒரு நாள் உன் கஷ்டங்களுக்கு இரங்கி ஈசன் கண்ணைத் திறந்து பார்ப்பார்' என்று அப்பா கூறினாரே, அந்த ஒரு நாள் இன்றுதானா?"

"மீனா, கவலைப்படாதே! இனி உன்னை நான் கைவிட மாட்டேன். நான் உங்கள் பணத்தினால்தான் இப்பொழுது நல்ல பதவியிலிருப்பது. இங்கு வந்தது முதல் உங்கள் இருப்பிடம் தெரியாமல் அலைந்தேன். நேற்று இரவுதான் உன்னைக் கண்டேன். உன் மன அதிர்ச்சியினால் என்னை நீ தெரிந்து கொள்ளவில்லை!"

"என்ன! நேற்று நான் வந்து பார்த்த டாக்டர் நீங்கள் தானா!" என்று சொல்லிக் கொண்டே, மீண்டும் மீனா அவன் மடியில் விழுந்து அழ ஆரம்பித்து விட்டாள்.

மறு வருடம் தீபாவளி ஸ்நானம் செய்து புதிய ஆடைகளை உடுத்திக் கொண்டு மீனாவும் ரங்கனும் ஜகதீச அய்யரின் படத்துக்குப் பக்தியுடன் நமஸ்கரித்தார்கள். அப்போது, அவர் படத்திலிருந்த புஷ்ப மாலையிலிருந்து ஒரு புஷ்பம் உதிர்ந்தது.

காலக்ஷேபம்

சந்தேகம்

அபேக்ஷகர்:—ஐயா! உங்கள் வோட்டைத் தயவுசெய்து எனக்குக் கொடுக்கவேண்டும்.

வோட்டர் (கோபத்தோடு):—உங்களுக்கா வோட்டு! பிரம்மஹத்திக்கு வோட் கொடுத்தாலும் கொடுப்பேன், உங்களுக்கு ஒரு நாளும் தரமாட்டேன்.

அபேக்ஷகர்:—சரி, ஒரு வேளை தங்கள் இனேதேர் எலக்ஷனுக்கு நிற்காவிட்டால் எனக்கு அந்த வோட்டைத் தருவீர்களா?

—என். கோமதி.

★

இடை நேரம்

உபாத்தியாயர் (அழுது கொண்டிருக்கும் கோபுவைப் பார்த்து):—என்னடா அப்போ அடித்ததற்கு இப்போ அழறே?

கோபு:—நீங்கள் அடித்த அடி நான் அணிந்திருக்கும் கோட், ஷர்ட், பனியன் இவைகளை யெல்லாம் தாண்டி இப்பொழுது தான் உறைத்தது. —ஆர். சாமியப்பன்.

★

தூங்கினது யார்?

மானேஜர் (பியூனைப் பார்த்து):—டேய்! நான் ஒரு தரம் மணி அடித்தால் கந்தசாமியும், இரண்டு தரம் மணி அடித்தால் நீயும், வரவேண்டுமென்று சொன்னேனல்லவா? ஏன் இரண்டுதரம் மணி அடித்தும் நீ வரவில்லை? தூங்கினாயா?

முனுசாமி:—இல்லிங்க, கந்தசாமியைத்தான் இரண்டு தரம் கூப்பிட்டீங்களோ வென்று நினைச்சேன்! —எஸ். ஜி.

★

நேரமில்லையே!

கிராமத்திலிருந்து வந்தவர் (ஓட்டல்காரரிடம்):—சாப்பாட்டு நேரம் எப்பொழுது?

ஓட்டல்காரர்:—காலை 6-மணியிலிருந்து 11-மணி வரைக்கும் டிபன். 11-மணியிலிருந்து 3-மணி வரை சாப்பாடு. 3-மணியிலிருந்து 6-மணி வரைக்கும் சாயந்திர டிபன். 6-மணியிலிருந்து 10-மணி வரைக்கும் ராச் சாப்பாடு.

வந்தவர்:—இப்படி ஓயாமல் சாப்பிட்டுக் கொண்டே யிருந்தால் நான் பட்டணத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு நேரத்தைக் காணுமே? —ஜி. சுவாமிநாதன்.

தந்திரம்

வகீல் (குமாஸ்தாவைப் பார்த்து):—இப்படிப் பக்கம் பக்கமாக எழுதிக் கொண்டே போனால் பார்ப்பவர்களுக்குச் சலிப்பு ஏற்பட்டு விடுமே?

குமாஸ்தா:—அப்படி ஏற்பட்டால்தான் நம் கக்ஷிக்கு ஜயம் ஏற்படும். ஏனென்றால் சலிப்பு உண்டாகிப் படிக்காமல் விடப்பட்ட பக்கங்களில்தான் முக்கியமான விஷயங்கள் இருக்கிறதென்று நாம் சொல்லிக் கொண்டேயிருக்கலாம். —ஆர். பாலகிருஷ்ணன்.

★

நல்ல கேள்வி

ஒருவன்:—அந்த 'டாக்கீஸி'லே என்ன நடக்கிறது?

நண்பன்:—'சிப்போ' நடக்கிறது!

அவன்:—அது தமிழ்ப் படமா? இங்கிலீஷ் படமா? —வி. ஆர். கிருஷ்ணமூர்த்தி.

★

சரியான காரணம்

பிட்டுவை அவன் தகப்பனார் "இன்று பள்ளிக் கூடத்திலிருந்து வீட்டிற்கு வர அதிக நேரமாகி விட்டதே என்ன காரணம்?" என்று கேட்டார்.

பிட்டு:—நான் வகுப்பில் ஒருவரும் பதில் சொல்லாத ஒரு கேள்விக்குப் பதில் சொன்னேன். அதற்காக வாத்தியார் என்னை முக்கால் மணி நேரம் பெஞ்சி மேல் நிறுத்தி விட்டார்.


தகப்பனார்:—கேள்விக்குப் பதில் சொன்னால் பெஞ்சிமேல் நிற்க வைப்பானேன்? என்ன கேள்வி அது?

பிட்டு:—வகுப்பிலிருந்த ஜன்னலின் கண்ணாடிக் கதவை யார் உடைத்தது என்று கேட்டார். —என். எச். லக்ஷ்மணன்.

★

வந்த சமயம்

நோயாளி:—டாக்டர் ஸார்! நீங்கள் ஆறு தடவை வந்ததாகப் பில் போட்டிருக்கிறீர்களே? நாலு தடவை வந்ததாகத்தானே எனக்கு ஞாபகம்?




டாக்டர்:—நீர் மயக்கமா யிருந்த சமயம் இரண்டு தடவை வந்திருக்கிறேன்! அது உமக்குத் தெரியாது. —சுந்தர்.



இரண்டு குள்ள நரிகள் ஒரு நாள் ஏரிக் கரையில் உட்கார்ந்துகொண்டிருந்தன. அப்பொழுது அவை இரண்டுக்கும் ஒரு யோசனை தோன்றிற்று. "ஏரியின் அக் கரைக்குப் போவதற்கு மிருகங்களெல்லாம் ஏரியைச் சுற்றிக் கொண்டு வர வேண்டி அல்லவா இருக்கிறது? நாம் ஏன் கப்பல் மாதிரி ஏதாவது ஒன்றைச் செய்து, உபயோகிக்கக் கூடாது?" என்று அவைகள் நினைத்தன. அந்தச் சமயத்தில், அவைகளுக்கு அதிர்ஷ்டவசமாகப் பெரிய கள்ளிப் பெட்டி ஒன்று கிடைத்தது. மூடி இல்லாத அந்தக் கள்ளிப் பெட்டியை இரண்டு குள்ள நரிகளும் மெதுவாக ஏரி ஜலத்தில் மிதக்க விட்டன. இரண்டு நரிகளும் அந்தக் கள்ளிப் பெட்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டன. பெட்டி மெதுவாக நகர ஆரம்பித்தது. நரிகள் இரண்டும் சந்தோஷம் கொண்டன.

ஒரு சிறிய மூங்கில் கழியைக் கள்ளிப் பெட்டியில் வைத்துக் கட்டின. அந்தக் கழியின் நுனியில் "இக் கரையிலிருந்து அக் கரை போக ஆள் ஒன்றுக்கு அரையணா" என்று ஒரு சிறிய பலகையில் எழுதித் தொங்க விட்டன. குள்ள நரிகளுடைய கப்பலில் ஏறி, ஏரியின் அக் கரை போவதற்குப் பல மிருகங்கள் முன் வந்தன. குள்ள நரிகள் இரண்டுக்கும் நல்ல சம்பாத்தியம் கிடைத்தது. மான், ஆடு, முயல், பூனை முதலிய பிராணிகள் யாவும் தலைக்கு அரையணா கொடுத்து விட்டு, நரிகளின் கப்பலில் ஏறிச் சவாரி செய்தன. கப்பல் நிறைந்தவுடன் இரண்டு நரிகளும் இரண்டு பக்கங்களில் நின்றுகொண்டு, கழிகளின் உதவியால் கள்ளிப் பெட்டிக் கப்பலை மெதுவாக அக்கரை சேர்க்கும்; அக் கரையிலிருந்து இக் கரைக்கு வரும் பிராணிகளையும் அவை கப்பலில் கொண்டு வந்து சேர்க்கும். நரிகளின் சாமர்த்தியத்தை எல்லாப் பிராணிகளும் மெச்ச ஆரம்பித்தன. தண்ணீரில் நீந்திச் செல்லும் வாத்துகள் கூடக் குள்ள நரிகளின் கப்பலில் ஏறித் தமாஷாகச் சவாரி செய்தன.

தங்களுடைய கப்பலில் சவாரி செய்யும் பிராணிகள் எதுவாயிருந்தாலும், தயவு தாக்ஷிண்யமில்லாமல் குள்ள நரிகள் இரண்டும் அரையணா வாங்கிவிடும். ஆனால், சில பறவைகள் குள்ள நரிகளை ஏமாற்றி விட்டுக் கப்பலில் கட்டியிருந்த கழியின் நுனியில் உட்கார்ந்து கொண்டு இனமாகச் சவாரி செய்யும். ஒரு சமயம் முன்னம் பன்றி ஒன்று கப்பலில் ஏறவே, கப்பலில் ஏறியிருந்த



மற்ற பிராணிகள் எல்லாம் இறங்கி விட்டன. ஒரே ஒரு முன்னம் பன்றிக்காக அன்று இரண்டு குள்ள நரிகளும் வருத்தத்துடன் கப்பலை அக் கரை கொண்டு போய்ச் சேர்த்தன. மற்றொரு சமயம் கப்பல் புறப்படும் சமயத்தில், "நிறுத்து. நிறுத்து! நானும் வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே யானைக் குட்டி ஒன்று ஓடி வந்தது. "யானைக் குட்டியை ஏற்றிக் கொண்டால் கப்பலுக்கே ஆபத்து!" என்று பயந்த நரிகளுக்கு நடுக்கம் எடுத்தது. ஆனால், நரிகளின் அதிர்ஷ்ட வசமாக யானைக் குட்டி "குழந்தைகளுக்கு அரைக் கட்டணம் உண்டா? என்னிடம் காலணாத்தான் இருக்கிறது?" என்று தன் துதிக்கையில் வைத்திருந்த காலணாவைக் காண்பித்தது. "அரைக் கட்டணம் இல்லை" என்று சொல்லிக்கொண்டே "பிழைத்தோம்!" என்று இரண்டு நரிகளும் கப்பலுடன் நழுவின. ஒரு நாள் தங்கள் கப்பலில் கையில் குடையுடன் பிரயாணம் செய்த ஒரு முயலைப் பார்த்து, "குடையில் என்ன?" என்று இரண்டு நரிகளும் கேட்டன.

"ஒன்றுமில்லை!" என்று சொல்லி முயல் விழித்தது.

சந்தேகத்தின் பேரில் நரிகள் இரண்டும் குடையைத் திறந்து பார்த்தன. அந்தக் குடைக்குள் ஒரு எலியும், ஒரு தவளையும் 'கொட்டு, கொட்டு' என்று விழித்துக் கொண்டே உட்கார்ந்திருந்தன. "டிக்கெட் இல்லாமல் பிரயாணமா?" என்று நரிகள் அதட்டவே, தவளையும் எலியும் பயந்து குடையிலிருந்து வெளியே வந்தன. தவளை தண்ணீரில் குதித்துத் தப்பித்துக் கொண்டது. எலி கப்பலிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று அசட்டுத்தனமாக எண்ணி, ஒரு பிராணிக்கும் தெரியாமல் கப்பலின் ஒரு மூலையில் துவாரம் செய்தது. அதைப் பார்த்த நரிகள், "அபாயம்! அபாயம்! எலியே, எலியே! நீ டிக்கெட்டும் கொடுக்க வேண்டாம்; ஒன்றும் கொடுக்க வேண்டாம், கப்பலை மட்டும் துவாரம் செய்யாமலிருந்தால் போதும்" என்று கத்தின. கத்தி என்ன பிரயோஜனம்? அதற்குள் அந்தத் துவாரத்தின் வழியாகத் தண்ணீர் வந்து விடவே, கப்பல் மூழ்கி விட்டது. நல்ல வேளையாக, அப்பொழுது ஏரிக் கரையில் விளையாடிக் கொண்டிருந்த சில வாத்துக்களின் உதவியால், கப்பலி லிருந்த பிராணிகளெல்லாம் கரை ஏறின.

இப்பொழுது நரிகள் கப்பல் வழிக்கே போவதில்லை. அந்தக் கள்ளிப் பெட்டிக்கு இரண்டு சக்கரம் மாட்டி, அதைத் தள்ளு வண்டியாகச் செய்து விட்டன. அந்த வண்டியில் ஐஸ்கிரீம் செய்து வைத்துக்கொண்டு, "ஐஸ் கிரீம், ஐஸ்கிரீம்!" என்று தெருத் தெருவாகக் கூவிக்கொண்டே விற்று ஜீவனம் செய்து வருகின்றன.





வைகுண்டத்தில்

நாடோடி

[வைகுண்டத்தில் லக்ஷ்மி தன் அந்தப் புரத்தில் இருக்கிறாள். மகாவிஷ்ணு வெகு அலங்கோலமாக அங்கு வந்து சேர்கிறார்.]

லக்ஷ்மி (திடுக்கிட்டவளாய்):— ஐயோ! இது என்ன கோலம்!

விஷ்ணு:— என்ன கோலமா? அலங்கோலம் தான்.

லக்ஷ்மி:— ஏன் இப்படி அலங்கோலம்?

விஷ்ணு:— எல்லாம் 'பெண்புத்தி கேட்டுப் பெரு மோசம் போன கதை தான். ராமாவதாரத்தில் உன் பேச்சைக் கேட்டு மாய மானைப் பிடிக்கப் போய், நான் பட்ட அவஸ்தை ஈரேழு அவதாரங்களுக்கும் போதும். இருந்தும், புத்தியில்லாமல், திரும்பவும் உன் பேச்சைக் கேட்டு நடந்தேன். இப்பொழுது இந்தக் கதிக்கு ஆளானேன்.

[பாட ஆரம்பிக்கிறார்.]

"பெண்புத்தியாலே பெருமோசம் போனேன்"

லக்ஷ்மி:— இந்தாருங்கள், இந்த வேடிக்கை யெல்லாம் அப்புறம் வைத்துக் கொள்ளலாம். என்ன விசேஷம்! என்ன நடந்தது சொல்லுங்கள்! என் பேச்சை நீங்கள் என்ன கேட்டீர்கள்?

விஷ்ணு:— "பூலோகத்துக்குப் போ! பூலோகத்துக்குப் போ" என்று என்னை விரட்டிக் கொண்டே யிருந்தாயே, அதைக் கேட்டுப் பூலோகத்துக்குப் போய்ச் சேர்ந்த விபரீதம் தான் இது.

லக்ஷ்மி:— ஆமாம். நான் உங்களைப் பூலோகத்துக்குப் போய்விட்டு வரச் சொன்னதில் என்ன தப்பு? பூலோகத்தில் உள்ள ஜனங்கள் எல்லாம், பாவம், வெகு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அடிக்கடி உங்களை நோக்கி, "பகவானே! காப்பாற்ற மாட்டாயா?" என்று கதறிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஜனங்களைப் போய்க் காப்பாற்றி விட்டு வாருங்கள் என்று தானே கேட்டுக் கொண்டேன்!

விஷ்ணு:— ஆமாம். கேட்டுக் கொண்டாய்! நீ சொன்னபடி நான் கேட்கப் போய்த்தான் பூலோக வாசிகளிடம் அவமானப் பட்டுத் திரும்பி யிருக்கிறேன். பெண் புத்தியைக் கேட்காதே என்று சொன்ன மகான் வாயில் சர்க்கரைதான் போடவேண்டும்.

[திரும்பவும் பாட ஆரம்பிக்கிறார்.]

"பெண்புத்தியாலே பெருமோசம் போனேன்"

லக்ஷ்மி:— இந்தாருங்கள். இந்த வேடிக்கையை யெல்லாம் பிறகு வைத்துக் கொள்ளலாம். பூலோக வாசிகள் உங்களை அவமானப் படுத்தினதற்குக் காரணம் என்ன? எல்லாம் விவரமாகச் சொல்லுங்கள்.

விஷ்ணு:— இந்த லட்சணத்தை விவரமாக வேறு சொல்ல வேண்டுமா? சரி, சொல்லுகிறேன் கேள். "பூலோகத்துக்குப் போ, பூலோகத்துக்குப் போ" என்று என்னை நச்சரித்துக் கொண்டே யிருந்தாயா, சரி, போய்விட்டுத்தான் வருவோமே என்று புறப்பட்டேன். புறப்பட்டதுதான் தாமதம், அந்த ஒற்றைப் பிராமணர் எதிரே வந்தார்.

லக்ஷ்மி:— யாரு, நாரதரா?

விஷ்ணு:— வேறு யார்? எல்லாம் அந்த ஆசாமிதான். "ஐயோ, சகுனம் ஆக

வில்லையே" என்று நான் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கையில், "எங்கே போகி றீர்?" என்று வேறு கேட்டு வைத்தார்.

லக்ஷ்மி :—அந்த மனுஷனுக்குத்தான் சமயா சமயம் தெரியாது, வேறு வேலை யும் கிடையாது. எப்பொழுது பார்த்தா லும் இப்படி எதிரே வந்து சகுனத் தடை ஏற்படுத்த வேண்டியதுதானே அவர் வேலை! சரி, மேலே என்ன நடந்தது?

விஷ்ணு :—புறப்படுகிற போதே சகு னம் சரியாக இல்லையே என்று பயந்து கொண்டுதான் போனேன். நேரே பாரத நாட்டுக்குத்தான் போனேன். ஒரு வீட்டுக்குள் நுழைந்தேன். பாவம், ஏழைக் குடும்பம் போலிருக் கிறது. ஐந்தாறு குழந்தைகள் எலும்புந் தோலுமாக பசிக்கிறது என்று அழுது கொண்டிருந்தன. அதைப் பார்த்த போது எனக்குக் குசேலரும், அவர் குழந்தைகளும் ஞாபகத்துக்கு வந்தன. வீட்டுக்காரர் என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டார். 'யாரய்யா நீர்?' என்று சற்று அதிகார தோரணையிலேயே கேட்டார்.

லக்ஷ்மி :—நீங்கள் "நான் தான் மகா விஷ்ணு. உன்னைக் காப்பாற்ற வந்திருக் கிறேன்" என்று உண்மையைச் சொல் லாமல் ஏதாவது பொய்யைச் சொன் னீர்களாக்கும்? வீட்டுக்காரர் தங்களை யாரோ திருடன் என்று நினைத்துக் கொண்டு தடியை எடுத்து விரட்டினு ராக்கும்?

விஷ்ணு :—நான் சொல்லி முடிப்பதற் குள் ஏன் இப்படி அவசரப் படுகிறாய்? மகாவிஷ்ணுவின் மனைவியா யிருக்கும் பெண்மைக் குணம் உன்னை விட வில்லையே!


லக்ஷ்மி :—என்னைப் பழிப்பது இருக் கட்டும். மேலே என்ன நடந்தது, சொல்லுங்கள்.

விஷ்ணு :— அதுதான் சொல்லிக் கொண்டு வந்தேனே. நீதானே நடுவில் இடை மறித்தாய்! "யாரய்யா நீர்" என்று அந்த வீட்டுக்காரர் என்னைச் சற்று அதிகாரமாகவே கேட்டதற்கு, நான் "உண்மையைச் சொல்லட்டுமா, பொய்யைச் சொல்லட்டுமா" என்று அவரைப் பார்த்துக் கேட்டேன். "உண் மையைச் சொல்லும். பொய் சொல்லி என்னை ஏமாற்ற முடியாது" என்றார் அவர். "அப்படியானால் உண்மையையே சொல்லுகிறேன். நான் தான் மகா விஷ்ணு. பூலோகத்து ஜனங்கள் கஷ்டப் படுகிறார்களே என்று காப்பாற்றுவதற் காக வந்துளேன்" என்றேன்.

லக்ஷ்மி :—உண்மையைச் சொல்லி யுமா, உங்களுக்கு அவமானம் ஏற் பட்டது?

விஷ்ணு :—உண்மையைச் சொன்ன தனால்தான் அவமானம் ஏற்பட்டது. நான் இப்படிச் சொன்னதும் அந்த ஆள் என்னைப் பயித்தியக்காரன் என்று நினைத்துக் கொண்டு விட்டார். என் மீது கல்லை விட்டெறிய ஆரம்பித்து விட்டார்!

லக்ஷ்மி :—ஐயையோ! அப்படியா செய் தார்? இதை அங்குள்ள போலீஸ்காரர் களிடம் தெரிவிப்பதுதானே?



"நம்ம வீட்டில் யார் எது பேசினு லும் ஒட்டுக் கேட்கிற கெட்ட பழக்கம் உன்னிடம் இருப்பதனுலே ......"

சமையற்காரன் :—வேலையை விட்டுத் தானே நிறுத்திவிடப் போகிறீர்கள்? மூட்டையைக்கூட 'ரெடி'யாகக் கட்டி வைத்து விட்டேன்.

"நிறுத்திவிடப் போகிறேன் என்று எப்படியடா உனக்குத் தெரிந்தது ......?"

சமையற்காரன் :—நேத்திக்கு இந்த விஷ யத்தைப் பற்றி அம்மாவுடன் பேசின் டிருந்தபோது நான் ஒட்டுக் கேட்டுக் கொண்டுதானிருந்தேன் ......!

விஷ்ணு :—எல்லாம் தெரிவிக்காமலா இருப்பேன்! எல்லாம் தெரிவிக்கத்தான் செய்தேன்.

லக்ஷ்மி :—அவர்கள் என்ன சொன்னார்கள்?

விஷ்ணு :—என்ன சொல்லுவார்கள்? கல்லை விட்டெறிக்க ஆசாமி தேவையில்லை என்று பண்ணிவிட்டார்கள். "நான் மகாவிஷ்ணு, உங்களைக் காப்பாற்ற வந்திருக்கிறேன்" என்று எவ்வளவோ சொல்லியும் கேட்கவில்லை. நான் யாரோ எதிரி ஏஜண்ட், உளவு அறிவதற்காகப் பயித்தியக்கார வேஷம் போடுகிறேன் என்று நினைத்து என்னைச் சிறையிலடைத்து விட்டார்கள்!

லக்ஷ்மி:—நான் எதிரி ஏஜண்ட் இல்லை என்று தாங்கள் சொல்வதுதானே?

விஷ்ணு :— சொல்லாமலா இருப்பேன்! எல்லாம் சொன்னேன். எதிரி ஏஜண்ட் இல்லை என்றால் உன் அரிசி ரேஷன் கார்ட் எங்கே, விறகு ரேஷன் கார்ட் எங்கே என்றெல்லாம் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

லக்ஷ்மி :—சரி. அப்புறம்?

விஷ்ணு :—போலீஸ் லாக்கப்பிலிருந்து எப்படியோ தப்பித்துக் கொண்டு வெளிக் கிளம்பினேன் என்று வைத்துக் கொள்ளேன்.

லக்ஷ்மி :—சரி, யாராவது நல்ல பக்தர்களைப் போய்ப் பார்க்கிறதுதானே!

விஷ்ணு :— பக்தர்களையும் போய்ப் பார்த்தேன். அவர்களுக்கும் என்மீது நம்பிக்கை விழவில்லை. சினிமாவில் விஷ்ணு வேஷம் தரித்துக் கொண்டு வருகிறவர்களைப் போல் நான் இல்லையே என்று என்மீது அவர்களுக்கு நம்பிக்கை விழவில்லை.

லக்ஷ்மி :—கடைசியில் என்னதான் பண்ணினீர்கள்?

விஷ்ணு :—என்ன பண்ணுகிறது! யாராவது ஒருவர் என்னை விஷ்ணு என்று நம்பவேண்டுமே கிடையாது. எல்லாரும் சேர்ந்து என்னை பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பி விடுவார்கள் போல் பட்டது. ஆகவே செத்தேன், பிழைத்தேன் என்று ஓடிவந்து விட்டேன்.

லக்ஷ்மி :— அப்படியானால் இந்தப் பூலோக வாசிகளைக் காப்பாற்றச் செல்வதில் பயன் இல்லை என்று சொல்லும்!

விஷ்ணு :—யார் பயன் இருக்கிறது என்று சொன்னார்கள்? வர, வர, பூலோக வாசிகளுக்கு இருக்கிற நம்பிக்கைக் குறைவு சொல்லி முடியாது. கடவுளே பிரத்தியட்சமானால் கூட நம்ப மாட்டார்கள் என்பது எனக்குத் தெரிந்த விஷயம்தான். இருந்தும் பெண் புத்தியைக் கேட்டேன்!

[பாடுகிறார்.]

பெண் புத்தியாலே பெரு மோசம் போனேன்.

சோதா கடிதம்

ஆந்திரா சர்வகலாசாலையாருக்குத் தலை தீபாவளிக்காக மாமனார் வீட்டுக்குச் சென்றிருந்த ஒரு மாப்பிள்ளை எழுதிக் கொள்வது.

ஏமண்டி புனிவர்ஸிடிகாரு,

தங்கள் மாணவர்களிலே என்னைத் தாங்கள் இப்படி அவமானப்படுத்தலாமா? அதுவும் தலை தீபாவளிக்காக நான் என் மாமனார் வீட்டுக்குச் சென்றிருந்த சமயத்தில், என் மாமனார், மாமியாருக்கு முன்னிலையில், அந்த வாண்டுப் பயல்களான என் மைத்துனர்களுக்கு முன்னிலையில், என்னைப் பற்றிப் பிரமாதமாக எண்ணிக் கொண்டும், தன் தோழிகளுடன் பெருமைப் படுத்திக் கொண்டுமிருக்கிற என் மனைவிக்கு முன்னிலையில் என்னை அவமானப்படுத்தலாமா!

என் ஸ்வாமி! இவ்வருஷத்திய செப்டம்பர் பரீட்சை முடிவுகளை வெளியிடத் தங்களுக்கு வேறு ஒரு நாளும் கிடைக்கவில்லையா? வருஷத்தில் 365 நாட்கள் இருக்கும்போது, மீதி 364 நாட்களையும் விட்டுவிட்டு, போயும் போயும் தீபாவளித் தினத் தன்றுதானா அப் பாழும் பரீட்சை முடிவுகளை வெளியிட வேண்டும்? பரீட்சையில் கழித்து விட்ட நாங்கள் மாமனார் வீட்டில் அவமானப் பட வேண்டும் என்றுதானே இப்படிச் செய்துவிட்டீர்கள்?

இந்த மாதிரி நீங்கள் ஏதாவது செய்து விடுவீர்கள் என்றுதான் அப்பொழுதே நான் காலேஜ் படிப்பு படிக்க மாட்டேன், ஏதாவது உத்தியோகத்துக்குப் போய்விடுகிறேன் என்று சொன்னேன். ஆனால் என் பெற்றோர்கள் கேட்கவில்லை.

ஆனால் நான் அடுத்த பரீட்சையிலும் கோட் அடிப்பேன், தாங்கள் என்னை இம் மாதிரி அவமானப்படுத்துவதற்கு இடங் கொடுப்பேன் என்று நினைக்காதீர்கள். ஏனெனில் நான் அடுத்த பரீட்சை எழுதப் போவதில்லை. உத்தியோகத்துக்குப் போகப் போகிறேன்.

இப்படிக்கு,

மாமனார் வீட்டு மாப்பிள்ளை.

சிறு சேமிப்புத் திட்டம்

பதுக்கி வைக்கவோ
அளவிற்கு மீறி செலவு
செய்யவோ வேண்டா
மென்றும்
எதிர்காலத்தில்

தனக்காகவும்
தன் குழந்தைகளுக்
காகவும்

மிச்சம் செய்ய வேண்டு
மென்றும் கேட்டுக்
கொள்ளுகிறது.

உங்கள் பணத்தை

பெருக்குகிறது

ஒவ்வொரு		நீங்கள் பெறுவது
ரூ. 10-க்கும்	12 வருஷங்களுக்குப் பிறகு	ரூ. 15
,, 50		,, 75
,, 100		,, 150
,, 500		,, 750
,, 1000		,, 1500
,, 5000		,, 7500

இதற்கு

வருமான வரி கிடையாது.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்ட்டிபிகேட்டுகளை

வாங்குங்கள்

கிடைக்குமிடம் :

அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகள். தபால் ஆபீஸ்கள். ஸேவிங்ஸ் பீரோக்கள்.

வருஷத்திற்கு 100-க்கு 4 - 1/6 வட்டி கிடைக்கும்.

★ ஒவ்வொருவரும் ரூ. 5000-க்கு அதிகப்படாமல் சர்ட்டிபிகேட்டுகள் வாங்கலாம்.



எந்த நல்ல சந்தர்ப்பத்திற்கும்

சிநேகிதர்களின் கூட்டுறவு காலங்களில் டெனர் சிகரெட்டு உங்களெல்லாருக்கும் ஆனந்தத்தை அளிக்கும். டெனர் சிகரெட்டின் நறுமணத்தை சந்தோஷத்துடன் இக் காலங்களில் நீங்கள் அனுபவிப்பீர்கள். உங்களில் மெல்லிய தொண்டையுடையவர்கள் இதையே விரும்புவார்கள். உத்தரவாதமுள்ள 100% பொறுக்கின வர்ஜீனியா புகையிலைதான் டெனர்ஸ் செய்யப்படுகிறது. சுகம் நிறைந்த இந்த சிகரெட்டை நீங்கள் வாங்கி உங்கள் சிநேகிதர்களுடன் அனுபவித்துப் பாருங்கள்.

டி லக்ஸ் டெனர் சிகரெட்டு
ஜேம்ஸ் கார்ல்டன் லிட், லண்டன்

Tenor

Is truly a
de Luxe Cigarette

JAMES CARLTON LTD, LONDON. EASTERN LICENCEES, POST BOX No. 470, CALCUTTA

கல்கி



KALKI அக்டோபர் 29. 1944 4 அ

Regd. No. M. 4392

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.